# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-19 Issue-1 ஜனவரி-2026 ரஜப்-1447



## சிக்கந்தர் மலை / திருப்பரங்குன்றம் தர்கா!

### களஆய்வு முழு நிலவரம்

## RSS-ஐ ஏன் தடை செய்தார் வல்லபாய் பட்டேல்?



## காஸா : வீராங்கனை கிரேட்டா துன்பெர்க்

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

ஜனவரி-2026 | ரஜப் 1447

வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்


- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





இஸ்லாமோ ஃபோபியா
தோற்றது எப்படி? - 4

மயிலேறும் ராவுத்தன் - 27

இஸ்லாமியருக்கு கோவில் கட்டி
கும்பிடும் இந்துக்கள் - 30

கிறிஸ்துமஸ் சமயங்களில்
இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு
எதிராக நடந்த தாக்குதல்கள் - 33

எஸ்.எம். முஷ்ரிப் அவர்கள்
தலைமை நீதிபதிக்கு எழுதிய கடிதம் - 35

வருகிறது ரமழான் - 44

இந்துக்கள் ஆபத்தில் உள்ளனரா? - 46

பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்
முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 48

காலநிலையும் அதன் காரணங்களும் - 52

சிலுவைப் போர் 2.0 - 59

தலையங்கம் - 62


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



## 2026இல் இஸ்லாம்

# இஸ்லாமோ ஃபோபியா தோற்றது எப்படி?

**முன்னுரை**

மேலை நாட்டவர்கள் 1389 ஆண்டுகளாக இஸ்லாமோ ஃபோபியா என்ற இஸ்லாத்தின் மீதும் அதன் வழியாக முஸ்லிம்கள் மீதும் ஒருவித வெறுப்பை வளர்த்து வருகின்றார்கள்.

1389 ஆண்டுகள் என எப்படி நாம் கணக்கிடுகின்றோம், என்றால் பைத்துல் முகத்திஸ் என்ற ஜெரூசலம் கலீபா உமர் (ரழி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட கி.பி.637–லிலிருந்து இன்றளவும் 2026 வரை.

இந்த இஸ்லாமோ ஃபோபியாவில் இஸ்லாத்தின் மூல ஆதாரங்களும் அடங்கும். அந்த மூல ஆதாரங்கள்.

1. திருக்குர்ஆன்

2. பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்வு, வாக்கு ஆகியவை.

இதில் திருக்குர்ஆன் வன்முறையைத் தூண்டும் வேத நூல். பெருமானார் (ஸல்) அதை செயலில் காட்டியவர்கள். அதனால் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட மார்க்கம் எனத் தொடங்கி, 2001ஆம் ஆண்டில் இஸ்லாத்திற்கெதிரான உலகளாவிய போர் ஒன்றை பகிரங்கமாக அறிவித்திருந்தார்கள். அதற்கு இப்படிப் பெயர் வைத்தார்கள். **Global war on terror.** இந்தப் போரில் அப்பட்டமான பல தோல்விகளைச் சந்தித்தார்கள்.

அந்த தோல்விகளை கடந்து பல படிப்பிணைகளை மேலை நாட்டவர்கள் பெற்றுள்ளார்கள். அதனைப் பற்றிய ஆய்வு ஒன்றை இங்கே தருகின்றோம்.

## எச்சரிக்கை..?

“**ஜா**ஹிலியாவை அறிந்திடாமல் இஸ்லாத்தை மட்டுமே, அறிந்தவன், இஸ்லாத்தைச் சிதைத்துவிடுவான்.” ஆமாம், முஸ்லிம்கள் ஜாஹிலிய்யா என்ற அறியாமை காலத்து கொள்கைகளைப் பற்றி ஆழமான அறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது ஓர் அடிப்படை தேவை என்பது கலீபா உமர் (ரழி) அவர்களின் கருத்து.


vaigarai velicham official

ஜாஹிலிய்யா என்றால், இஸ்லாம் முஹம்மத் (ஸல்) அவர்கள் வழி முழுமைப் பெற்றக் காலத்திற்கு முந்தைய காலம் என்று மட்டுமே பொருள் கொள்ளக்கூடாது.

அன்றைய காலத்தையும் மிஞ்சும் அஞ்ஞானங்கள் இன்றும் இருக்கின்றன. அவை இஸ்லாத்தைத் தங்கள் நிரந்தர எதிரியாகவே பார்க்கின்றன. இஸ்லாத்தின் வேகமான வளர்ச்சி அவர்கள் மக்கள் மீது செலுத்திவந்த ஆதிக்கத்தை தடுத்து வருகின்றன.

இந்த நவீன ஜாஹிலிய்யாக்கள் - தம்மை வளர்ப்பதைவிட, இஸ்லாத்தை அழிப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்தி வருகின்றன.

இதற்காக அதாவது இஸ்லாத்தை அழிப்பதற்காக அள்ளிக் கொட்டும், பணம், மனித ஆற்றல்கள் இவற்றிற்கு அளவே இல்லை!

இஸ்லாமிய வரலாற்றில் மட்டுமல்லாமல் உலக வரலாற்றிலும் வரை இட்டுக்கட்டப்படும் வரலாற்று நிகழ்வு ஜெரூசலம் என்ற அல்குத்ஸ் - கலீபா உமர் (ரழி) அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. இது கி.பி. 637இல் நடந்தது. அன்றைய தினமே அதனை மீட்க என ஒருபெரும் தீவிரவாத அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதுதான் “நைட்ஸ் டெம்பிளர்” Knights Templers என்ற கிருஸ்தவ தீவிரவாத அமைப்பு.

இதைத் தொடர்ந்து கிருஸ்தவ உலகம் தன்னைத் தயார்படுத்தியது. போப் அர்பன்-II என்பவர்தான் இதற்கான ஆயத்தங்களை செய்தார்.

இல்லாததையும், பொல்லாததையும் இட்டுக்கட்டி கிருஸ்தவ உலகத்தை முஸ்லிம்களுக்கெதிராக திரட்டி வந்தார்.

இஸ்லாத்தின் மீது வெறுப்பை வளர்க்க அவர் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாரானார்.

இந்த பெரும் முயற்சியில் அவர்கள் கிருஸ்தவர்கள் பெரிதாக நம்பும் பைபிளின் வசனங்களை திரித்தும் மறித்தும் எழுதினார். ஜெரூசலம் கிறிஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்றார். இந்த பெரும் முயற்சியில் பிரான்ஸ்-ஐ மையமாகக் கொண்டு ஒரு லட்சம் கிருஸ்தவ படையை அணிவகுத்திட செய்தார், பாலஸ்தீன் நோக்கி நகர்த்தினார். 1095இல் தொடங்கிய சிலுவைப் போர்கள் 1254 வரை நடந்தன. 1099இல் ஜெரூசலம் கிருஸ்தவர்களின் கைகளுக்குச் சென்றது. அல்-அக்ஸா மஸ்ஜித் குதிரை லாயமாகவும், கேளிக்கை அரங்கமாகவும் பயன்படுத்தப்பட்டது. ஒன்பது சிலுவைப் போர்கள் நடந்தன. மூன்றாம் சிலுவைப் போரில் அல்குத்ஸ் என்ற ஜெரூசலம் (அல்அக்ஸா) மாவீரன் ஸலாஹுத்தின் அய்யூபி அவர்களால் 1187 மீட்கப்பட்டது. அன்று முதல் இப்போது வரைக்கும் ஜெரூசலம் முஸ்லிம்களின் நிர்வாகத்தின்கீழ்தான் இருந்து வருகின்றது.

இஸ்ரேலின் கெடுபிடிகள், கைதுகள், அங்கு வாழும் முஸ்லிம்களின் வீடுகளை இடித்து முஸ்லிம்களை வெளியேற்றுவது இவற்றையெல்லாம் கடந்து 60,000 முஸ்லிம்கள் ஒவ்வொரு ஜும்ஆ தொழுகையிலும் தொழுது வருகின்றார்கள்.

1095 முதல் 1254 வரை நடந்த சிலுவைப் போர்களோடு மேலை நாடுகளின் இஸ்லாத்திற்கெதிரான போர்கள் நின்றுவிடவில்லை, தோல்விகளைப் புறந்தள்ளிவிட்டு தங்கள் முயற்சிகளை தொடர்ந்து வருகின்றார்கள். அதற்குப் பின் அவர்கள் வாளெடுத்துப் போர் செய்வதைவிட வாயெடுத்து போர் செய்வதையே அதிகம் செய்து வருகின்றார்கள்.

அதாவது இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் பொய்களையும் புனைந்துரைகளையும் கட்டவிழ்த்து விட்டு உலக மக்கள் மனதில் வெறுப்பை வளர்த்து வருகின்றார்கள்.

ஒரு காலகட்டம் வரை, இஸ்லாத்தோடு போர் செய்து தோற்றதை மறைத்திட இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட மார்க்கம் எனப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் தொடர்ந்து விளக்கங்களை தந்து வந்தார்கள்.

அத்தோடு அவர்களுடைய மேலைநாட்டு ஆய்வாளர்களே, பல ஆய்வுகளை வெளியிட்டார்கள். அதில் மிகவும் அதிகம் மேலை நாட்டவர்களின் கவனத்தைக் கவர்ந்த நூல் “The Preaching of Islamby T.W. Arnold - T.W. அர்னால்ட் என்பவர் எழுதிய “இஸ்லாமியப் பிரச்சாரம்" என்ற நூல். இந்த நூல் பல மேலை நாட்டவர்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்தது.

அதேபோல், இஸ்லாத்தின் மீது வெறுப்பை வளர்க்க, திருக்குர்ஆனுக்குள்ளும் பெருமானார்



(ஸல்) அவர்களின் வாழ்கைக்குள்ளும் ஆதாரங் களைத் தேடி ஆய்வுகளை மேற்கொண்டார்கள் பலநூறு மேலை நாட்டவர்கள்.

இந்த ஆய்வுகளை நூல்களாக வெளியிட் டார்கள். இஸ்லாத்திற்கெதிராக எழுதுபவர்களை ஊக்கப்படுத்துவதற்கு ஐரோப்பிய நாடுகளில், பல பெரிய வியாபார நிறுவனங்கள் மடை யுடைத்த வெள்ளம்போல், பணத்தை தாரை வார்க்கின்றன.

இஸ்லாத்தை தூற்றும் நூல்களை எழுதுபவர் களுக்கு உடனேயே விருதுகள், பதவிகள், அடுக்கடுக்கான பரிசுகள் என தந்து அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். திரைப்படங்களைத் தயாரித்தால் அவற்றிற்கு பணம். - உடனே உலகளாவிய விருதுகள்.

இப்படி திருக்குர்ஆனையும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையையும் ஆய்வுகளைச் செய்த பலர் பின்னர், இஸ்லாத்தை ஏற்றனர்.

ஓர் ஆய்வாளர் ஜான்டேவன் போர்ட், பிற்றை நாட்களில் இப்படி ஒரு நூலை எழுதினார். An apology for The Quran and Mohammed திருக்குர் ஆனிடமும் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடமம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். (ஆதாரம், John Davenport - ஜான்டேவன் போர்ட் எழுதிய மேலே குறிப்பிட்ட நூல்)

இப்படி பலர் பின்னர் மன்னிப்புக் கேட்டா லும், அவையெல்லாம், மூடி மறைக்கப்பட்டன. இஸ்லாத்தின் மீதும், திருக்குர்ஆன் மீதும், பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும், முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்துவிடும் அவதூறுகளுக்கு அளவில்லை.

பள்ளிப் பாடங்கள், புதினங்கள், திரைப்படங்கள் என ஏராளமான வழிகள் பயன்படுத்தப்படு கின்றன. அச்சு ஊடகங்கள் காலங்காலமாக இதை செய்து வருகின்றன.

**1952** அமெரிக்க வெளி விவகாரத்துறை அமைச்சர் "டல்ஸ்" என்பவர், இஸ்லாம்தான் இனி உலகை அழிக்கப்போகின்றது என பிரகடனப்படுத்தினார்.

**1982**இல் John Exposito ஜான் எக்ஸ்போ சிட்டோ என்பவர் ஓர் ஆய்வை வெளியிட்டார். அதில் இஸ்லாம் மீண்டும் உயிர்பெற்று எழுகின்றது. அதனைத் தடுத்தாக வேண்டும் என மேலை நாடுகளை அவசரப்படுத்தினார். இது *1979*இல் ஆப்கானிஸ்தானில் கம்யூனிஸ்ட் ரஷ்யா தோற்றபோது ஏற்படுத்தப்பட்ட பதற்றமான அறிவிப்பு. இதுவும் இஸலாத்திற்கெதிரான ஓர் போர்ப் பிரகடனம். அந்த ஆய்விற்கு அவர் வைத்தப் பெயர் Voices of Resurgent Islam. அதாவது மீண்டும் உயிர்பெறும் இஸ்லாத்தின் குரல்கள். இதில் இஸ்லாத்தை நிலை நாட்டுவதை இலக்காகக் கொண்ட இஸ்லாமிய இயக்கங்களை எதிரியாகக் காட்டினார்கள்.

### வல்லரசு ரஷ்யாவின் வீழ்ச்சி

அன்றைய இரண்டு வல்லரசுகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் ரஷ்யா ஆப்கானிஸ்தான் முஜாஹித்களால் வீழ்த்தப்பட்டது. USSR என்ற ஒன்றுபட்ட சோவியத் சோசலிச குடியரசு United Soviet Socialist Republic என்பது உடைந்து *6* புது நாடுகள் உருவாகின. வல்லரசு கம்யூனிட்ஸ்

ரஷ்யா வீழ்த்தப்பட்ட அதே வேகத்தில் ஈரானில் 200 ஆண்டுகளாக இருந்த மன்னராட்சி வீழ்த் தப்பட்டு, ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்றானது. சுற்றி இருந்த அரபு நாடுகள், அதிர்ந்தன. ஏனெனில் அரபு நாட்டு மன்னர்கள். மன்ன ராட்சியை வம்சா வழி ஆட்சியை மிகைத்த செயலிலும், சிரமத்திலும், காப்பாற்றி வந்தார்கள். ஈரானில் ஏற்பட்டுள்ள மன்னராட்சியின் எதிர்ப்புகள் தங்களுடைய நாட்டிலும் வந்து விடக்கூடாது என பீதிவயப்பட்டார்கள்.

இந்தப் பின்னணியில் அரபு நாட்டு ஆட்சி யாளர்கள் உலகெங்கும் ஷியா-சுன்னி பிரச்சனையை பெரிதுபடுத்தினார்கள். FrontLine என்ற ஆங்கிலப் பத்திரிகை தரும் தகவல்களின் அடிப்படையில் கிழக்காசிய நாடுகளில் 5000 பாட சாலைகளை தொடங்கி பணத்தை தாராளமாகத் தந்தார்கள். தமிழகத்திலும் பல கல்வி நிறுவனங்கள் இன்றும் இயங்கி வருகின்றன. இந்த வேற்றுமையை பெரிதாக்கிட!

இந்தக் கல்வி நிறுவனங்கள் வழி அவர்கள், ஈரானில் ஏற்பட்டது ஷியா புரட்சி. அது இஸ்லாமியப் புரட்சி அல்ல, என இளைஞர்களை மூளை சலவை செய்தார்கள்.

இது ஒருபக்கமிருக்க தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்த்திடும் முயற்சிகளை இரட்டிப்பாக்கின. See-Annex

1992இல் அமெரிக்காவைச் சார்ந்த சாமுவேல் P. ஹண்டிங்டன் ஓர் போர் திட்டத்தைத் தயாரித்துத் தந்தார்கள். அதற்கு நாகரீகங்களின் மோதலும், உலகின் மறு உருவாக்கமும் என பெயரிட்டார். (The Clash of Civilizations and the Remaking of the world order) இந்தப் போர் திட்டம் ஐரோப்பிய நாடுகளின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அங்குள்ள இராணுவ ஆய்வாளர்களின் ஆலோசனைகள், விமர்சனங்கள், பரிந்துரைகள் இவை பெறப் பட்ட பின்னர், அது முழு பழுதற்ற போர் திட்டமாக ஆக்கப்பட்டது.

பின்னர் அமெரிக்காவின் "Foreign Affairs" வெளிநாட்டு விவகாரம் என்ற அரசு வெளி யீட்டில் இடம்பெறச் செய்யப்பட்டது.

இன்றைக்கு சிரியா, ஏமன், லெபனான், ஈராக் முதலாய முஸ்லிம் நாடுகள் எங்கும் ஏற்பட்டு வரும் அத்தனைப் போர்களுக்கும் முன்னோடி இந்த போர்த்திட்டம்தான்.

**இந்தப் போர்த் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

1. மேலை நாட்டு நாகரீகங்களே நாகரீகம், ஏனையவையெல்லாம் அநாகரீகங்கள். ஆகவே அவை அனைத்தும் அழிக்கப்பட வேண்டும்.

2. 2025ஆம் ஆண்டில், உலகில் வாழும் மக்களில், இளைஞர்கள் அதிகமாக வாழும் சமுதாயமாக இருக்கப்போவது முஸ்லிம் சமுதாயம்தான். (Youth Buldge). ஆகவே 1997 முதலே நாம் முஸ்லிம் உலகில் வாழும் தாய்மார் களின் கருப்பைகளிலேயே நமது போரை தொடங்க வேண்டும். குழந்தையைப் பெற்றிடும் தாய்மார்களை முடிந்தவரை அழிக்க வேண்டும். இல்லையேல் ஏதேனும் ஒரு போர்வையில் அந்தக் குழந்தைகளைக் கொலை செய்ய வேண்டும்.

1997இல் முழு வடிவம் பெற்ற இந்தப் போர் திட்டந்தான் இப்போது நடந்து கொண்டிருக் கின்றது. கடந்து 27 ஆண்டுகளாக முஸ்லிம் உலகில் குழந்தைகளையும், இளைஞர்களையும், தாய்மார்களையும் கொலை செய்து வருகின்றார்கள்.

இந்தப் பின்னணியில்தான், இன்று காஸாவில் மேற்குகரையில், ஏன் பாலஸ்தீன் முழுவதும் நடக்கும் குழந்தை கொலைகள், பெண்களைக் குறிவைத்து செய்யப்படும் கொலைகள் ஆகியவற்றைப் பார்த்திட வேண்டும்.

இதற்கு முன் அமெரிக்காவின் ஆக்கிரமிப் பின்கிழ், ஈராக்-இல் கொலை செய்யப்பட்ட பெண்கள், குழந்தைகள் இவர்களின் எண்ணிக்கை 8,30,000 எட்டு லட்சத்து முப்பதாயிரம். இது 2001 முதல் 2011 வரை நடந்தது.

இஸ்லாத்தின் எதிரிகளின் பார்வையில் முஸ்லிம் உலகில் வாழும் குழந்தைகளையும், தாய்மார்களையும் கொலை செய்வது என்பது அவர்களின் எதிர்கால எதிரிகளை அழிப்பது என்பதாகும்.

இந்தப் பின்னணியில்தான் இப்போது வெளிவந்துள்ள Crusade 2.0 சிலுவைப் போர்கள் 2.0 என்ற நூலைப் பார்த்திட வேண்டும். இது

ஜான் பெஃப்பர் என்பவரின் புதிய போர். அவர், தான் வெளியிட்ட இந்தப் போர் திட்டத் திற்கு இப்படி பெயர் வைத்தார். "சிலுவைப் போர் 2.0. மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற இஸ்லாத்திற்கெதிரான போர்."

CRUSADE 2.0 THE WESTS RESURGENT WAR ON ISLAM.

சுருங்கச்சொன்னால் இரண்டாவது சிலுவைப் போர்-ஐ நடத்திக்கொண்டிருக்கின்றார்களாம்.

இந்தப் போர் திட்டம், இப்போது மீண்டும், மீளாய்வு செய்யப்பட்டு புதிய வடிவம் பெற்று வெளிவந்திருக்கின்றது. அதற்கு அதன் ஆசிரியர் ஜான் பெஃப்பர் இப்படிப் பெயர் வைத்திருக் கின்றார்.

Crusade 2.0 The wests unending war on islam. இஸ்லாத்திற்கெதிரான போர் முடிவற்றது என்கின்றார்.

இந்த ஜாஹிலிய்யாவின் போர் திட்டங்களை நாம் ஆய்வு செய்தால் பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போல் போர்கள், முஸ்லிம் உலகின்மேல் பாய்ந்துகொண்டே இருக்கும் என்ற முடிவுக்கு வர முடியும்.

இப்போது ஜாஹிலிய்யாவை தெரிந்து கொள்வது என்பது இறைவனை நிராகரிப்பது, இறைவனுக்கு இணை வைப்பது இவற்றை மட்டுமே தெரிந்துகொள்வது என்பதல்ல. இஸ்லாத்தின் எதிரிகளின் எதிர்கால போர் திட்டங்களையும் தெரிந்துகொண்டு எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இதில் இஸ்லாத்திற்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை எதிர்கொள்வது மிக முக்கியமான இடத்தைப் பிடிக்கின்றது இன்ஷாஅல்லாஹ்.

**சாமுவேல் P.ஹண்டிங்டனின், திட்டத்தில் கவனிக்க வேண்டியவை**

1. ஹண்டிங்டன் தனது போர்த்திட்டத்தில் உலகிலுள்ள எல்லா நாகரீகங்களையும் அழிக்க வேண்டும். அந்த நாடுகளை மேலை நாட்டு நாகரீகங்களின்கீழ் கொண்டுவந்திட வேண்டும் என்கின்றார்.

இதில் ஹண்டிங்டன் இந்தியாவிலுள்ள நாகரீகங்களையும், பண்பாடுகளையும், கலாச் சாரங்களையும் அகற்றிவிட்டு அந்த இடத்தில் மேலைநாட்டு நாகரீகத்தைக் கொண்டுவந்திட வேண்டும். இந்திய மக்கள் இந்தியாவின் பண் பாடுகளையும், கலாச்சாரங்களையும் கைவிட வேண்டும். கீழானதாக நினைக்க வேண்டும் மேலை நாட்டு நாகரீகமே உயர்வானது, உன்னத மானது எனக்கருதிட வேண்டும் என்கின்றார். அதற்கு Moderinization. நவீனம், புதினம் எனப் பெயர் வைத்திட வேண்டும் என்கின்றார்.

இன்றைய நாள்களில் Modern நவீனம் என்பது மேலை நாடுகளை அப்படியே 'காப்பி' அடிப்பது என்று பொருள்கொள்ளப்படுகின்றது. பழைமை யும் தொன்மையையும், பின்பற்றும் பண்பாட் டாளர்கள், முற்போக்கு சிந்தனை அற்றவர்கள் என இழிவாகப் பார்க்கப்படுகின்றார்கள்.

யதார்த்தத்தில் மேலை நாட்டு கலாச்சாரம் சீரழிவு என்பதே உண்மை. திருமணம் செய்யா மலே வாழ்வது என்பது Live in Relationship ஒரு நிலைநாட்டப்பட்ட கலாச்சாரமாக ஆகிவிட் டது. அதுபோல் பெண்கள் திருமணத்திற்கு முன்பே உடலுறவு கொள்ளலாம் அவள் திருமணம் செய்து கொள்ளும்போது கற்புடையவளாக இருக்க வேண்டும் என்றில்லை, என்பதெல்லாம் முற்போக்குச் சிந்தனையின் முற்போக்கு கலாச் சாரத்தின் பகுதிகளாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த கலாச்சாரத்தால் சீரழியும் பெண்கள், பாசம், பரிவு, பற்று என்பதையெல்லாம் மறந்து வருகின்றனர். மாறாக, நவீனம் முற்போக்கு என்ற பெயரில் மேலே நாட்டு கலாச்சாரம் பரவி வருகின்றது. இப்படி ஒரு கலாச்சார ஆக்கிரமிப்பு நடைபெற்று வருகின்றது.

இந்தக் கலாச்சார தாக்குதல்கள் முஸ்லிம் சமுதாயத்தை பெரிதாகப் பாதித்திடவில்லை. இங்கொன்றும், அங்கொன்றுமாக ஏற்பட்ட சில சில்லரை சேதாரங்களைத் தவிர. இந்தத் தோல்விகளைத் தாங்கிட இயலவில்லை இவர்களால்.

அதனால் எல்லா நாகரீகங்களையும் இஸ்லாத்தின் எதிரிகளாக ஆக்கிட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அதிலும் அவர்கள் பெரிதாக வெற்றி பெற்றிட இயலவில்லை.

இந்தக் கலாச்சாரத் திணிப்பிற்கு இங்குள்ள மேல் ஜாதியினர் ஓரளவுக்கு ஆளாகியுள்ளனர். அதை விஞ்சி எதுவுமில்லை.

ஹண்டிங்டனின் போர்த் திட்டப்படி, இந்தியாவின் கலாச்சாரத்தையும், சீனாவின் கலாச்சாரத்தையும், அழித்துவிட்டு, மேலை நாட்டு கலாச்சாரத்தை அல்லது நாகரீகத்தை, மேலோங்கச் செய்திட வேண்டும்.

**பாசிசமும் - கூகிளக்ஸ் கிளானும்**

ஆனால், இந்தியாவை இன்றைய தினங்களில் ஆட்சி செய்துவரும் பாசிச பா.ஜ.கட்சி அமெரிக் காவுக்கு மிகவும் நெருக்கமானது. அமெரிக்கா அதிபர் டிரம்ப் இந்தியாவின் இப்போதைய பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமானவர்.



இஸ்லாத்தை எதிர்ப்பதில் இரண்டுபேரும் இணையானவர்கள்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் வெள்ளையனே ஆளப் பிறந்தவன். ஏனையவர்களெல்லாம் அடிமையாக இருக்க மட்டுமே தகுதியானவர்கள் என்ற கொள்கையைக் கொண்ட கூகிளக்ஸ் கிளான் என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர். பிரதமர் மோடி இந்துத்துவ பாசிசம் பேசும் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பை சார்ந்தவர்.

முஸ்லிம்களை எதிர்ப்பதை, எதிரியாகக் காட்டி (200) இருநூறு ஆண்டுகளாக தங்களை வளர்த்து வருபவர்கள்.

இந்தியாவில் நாளொன்றுக்கு மூன்று வகுப்புக்கலவரங்களை நடத்தி பல லட்சம் முஸ்லிம்களைக் கொலை செய்தவர்கள். இப்போதும் கொலை செய்து வருபவர்கள்.

டிரம்ஃப் முதல்முறை ஆட்சியில் அமர்ந்த போதும், பல குரூரமான தாக்குதல்கள் முஸ்லிம்கள் மேல் நடந்தன. இப்போதும் நடந்து வருகின்றன.

மோடி குஜராத்-இன் முதலமைச்சராக இருந்தபோது 2000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் - கூட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். அக்டோபர், 2023-2025 டிசம்பர் வரை காஸாவில் 1,71,000 அப்பாவி பெண்களும், குழந்தைகளும், கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். 1,72,000 அப்பாவிகள், பெண்கள், குழந்தைகளும் காயம் பட்டுள்ளார்கள். அத்தனையும் அமெரிக்காவின் பணம், ஆயுதம், குண்டுகள்.

காஸாவின் கூட்டுப் படுகொலைகளுக்கு ஆயுதம் தந்ததில் இந்தியாவுக்கும் பங்குண்டு.

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்பதில் இருவரும் இருபெரும் ஜோடிகள்.

இப்படி நெருக்கமாக இந்தியாவின் பிரதமர் அமெரிக்காவோடு இருந்தாலும், அமெரிக்கா உருவாக்கிய கலாச்சார மோதலில், நாகரீக அழிப்பில் இந்தியாவும் இடம்பெறுகின்றது.

மோடி தன்னை உருவாக்கியதாகக் கூறிக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். போன்ற 47 அமைப்புகள், தங்களை இந்துக் கலாச்சாரத்தை கட்டிக் காத்திட வந்த அமைப்புகளே எனக் கூறிக்கொண்டார்கள். ஆனால், இவர்களால் இந்து நாகரீகம் மேலை நாட்டுக் கலாச்சாரத்தால் வெற்றிகொள்ளப்படுவதைத் தடுத்திட இயலவில்லை.

திருமணமாகாமல் சேர்ந்து வாழும் Live.in-Relationship என்பது இவர்களின் ஆட்சியில்தான் பெரிதாக பிரவாகமெடுத்து ஓடுகின்றது.

ஒருபால் திருமணம் இங்கே கொடிகட்டிப் பறக்கின்றது. அதைத் தடுத்திட நாதி இல்லை. திருமணத்திற்கு பின், பெண் தான் விரும்பும் ஆனோடு உடல் உறவில் ஈடுபடலாம் என்ற Consensual Sex ஒரு ஆணும் பெண்ணும்



சம்மத்தித்தால் அவர்கள் வேண்டும்போல் உடல் உறவு வைத்துக்கொள்ளலாம். அவர்கள் திருமணமானவர்களாக இருந்தாலும் சரியே! என்பதைக் கொள்கையாகக் கொண்டு சட்டம் இயற்றியவர்களும் இந்துக் கலாச்சாரத்தைக் காப்பாற்றிட வந்த இந்த பாசிஸ்ட்டுகள்தாம்.

18 வயதுக்கு முன்னர் பெண்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. ஆனால் அவர்கள் 16 வயதிலேயே கூடா உறவுக்கு அதாவது நாம் மேலே சொன்ன கான்ஸென்ஸ் செக்ஸ் என்ற உடலுறவுக்கு சம்மதம் தெரிவிக்கலாம் என சட்டம் கொண்டு வந்ததும் இதே கலாச்சார பாதுகாப்பாளர்கள்தாம். (இந்தச் சட்டம் இப்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது)

இப்படி இவர்களின் நாகரீகத்தை சிதைப் பதில் அமெரிக்காவில் தலைமையில் மேலை நாட்டு நாகரீகம் வெற்றி கண்டது எனலாம்.

ஆனால், இவர்களெல்லாம் கலைத்தே ஆக வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு எதிர்த்த இஸ்லாமிய நாகரீகம், நிலைத்தது மட்டுமல்ல, அது ஏனைய நாகரீகத்தை சார்ந்தவர்களை தன் வயப்படுத்தி வளர்ந்தும் வருகின்றது. அதுவும் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேகமாக வளர்ந்து வருகின்றது இஸ்லாம்.

### அமெரிக்காவை அச்சுறுத்தும் ஷரீஅத்

2012ஆம் ஆண்டில் அமெரிக்காவை அதிர வைக்கும் அறிக்கை ஒன்று வெளிவந்தது. அது ஷரீஅத் அமெரிக்காவை அச்சுறுக்கின்றது என்ற அறிக்கையை தயாரித்தது, அமெரிக்காவின் உளவுத்துறை (CIA)

அமெரிக்காவை அச்சுறுத்திட வேண்டும் என்றால், அமெரிக்கா வைத்திருக்கும் ஆயுதங் களை விஞ்சிய ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் தாம் அச்சுறுத்தும் ஆற்றலைப் பெறுவார்கள்.

ஆனால் ஷரீயத் எப்படி அமெரிக்காவை அச்சுறுத்த இயலும்? என்ற வினா இயல்பாகவே எழும்.

ஆமாம் CIA-இன் அறிக்கையின்படி அமெரிக் காவில் அதிகமான மக்கள், ஷரீயாவின் வழி காட்டுதல்களால் கவரப்பட்டு வருகின்றார்கள். அமெரிக்காவில் நடப்பிலிருக்கும் சட்டங்களின் அடிப்படையில், அமெரிக்க மக்கள் தங்கள் சொந்தப் பிரச்சனைகளில் Personal Problem களில் எந்தச் சட்டத்தின்கீழ் வேண்டுமானாலும் தங்கள் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ளலாம்.

இதைப் பயன்படுத்தி பல, அமெரிக்கர்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு ஷரீஆவின் அடிப் படையில் தீர்வு காண்கின்றார்கள்.

குறிப்பாக திருமணம், விவாகரத்து இவற்றில் ஷரீயாவின் வழிகாட்டுதல்களை பின்பற்று கின்றார்கள்.

இந்த எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருகின்றது. முடிவில் பலர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

### வல்லரசு அமெரிக்காவின் தோல்வி

இந்தப் பின்னணியில்தான் ஆகஸ்ட்,15 2021இல் தாலிபான்களிடம் அமெரிக்கா சரண டைந்தது. உலகில் இஸ்லாம், திருக்குர்ஆன், முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதுள்ள பார்வை முற்றாக மாறியது. உலகெங்கும் பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி வல்லரசுகள் இஸ்லாத்திடம் அடிவாங்கி வீழ்ந்தன.

### ஜனநாயகத்தைவிட விரிவானது இஸ்லாம்

அதேபோல் அமெரிக்கா உலக அரங்கில் மனித உரிமைகளைப் பற்றி அதிகமாக பீற்றிக் கொள்கின்றது. ஆனால் ஷரீஅத் தனிமனிதனுக்கு தந்திருக்கும் உரிமைகள், அமெரிக்கா பீற்றிக் கொள்ளும் மனித உரிமைகளைவிட விரிவானது விசாலமானது.

இஸ்லாம் வகுத்து வழங்கி இருக்கும் மனித உரிமைகள், சமுதாய சூழலுக்குத் தேவையான பாதுகாப்புகளை வழங்கிவிடுகின்றது.

அங்கே இஸ்லாம் தனிமனித உரிமைகள்,


vaigarai velicham official

பொது அமைதிக்கும் சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கைக்கும் பங்கம் விளைவிக்காமல் பார்த்துக்கொள்கின்றது.

நாம் ஜனநாயகத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்கின்றோம். ஆனால் இஸ்லாம் ஜனநாயகத்தைவிட விசாலமானது.

ஜனநாயக அமைப்பில் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில், எத்தனையோ தில்லு முல்லுகள் நடக்கின்றன. ஆனால் இஸ்லாத்தில் இறைவனைப் பற்றிய அச்சம், இந்தத் தில்லு முல்லுகளிலிருந்து ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுப் பவரிலிருந்து பாதுகாத்து விடுகின்றது.

ஜனநாயக அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள், சர்வாதிகாரிகளாகவே மாறிவிடுவார்கள்.

இஸ்லாமிய அமைப்பில், ஆட்சியாளர்கள் இறைவனுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நிலையில் - சர்வாதிகாரிகளாக மாறிவிட இயலுவதில்லை.

இவற்றால் எல்லாம், அமெரிக்கர்கள் கவரப் படுகின்றார்கள் அமெரிக்க முஸ்லிம்களின் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை. அமெரிக்கர்களைப் பெரிதாக கவருகின்றது. (மேலும் விபரங்களுக் குப் பார்க்க வைகறை வெளிச்சம் 2012, ஜனவரி அட்டைப்பட கட்டுரை.)

இப்படி ஷரீஅத் அமெரிக்காவை ஆக்கிர மித்து வருகின்றது. அது அமெரிக்க மக்களின் மனங்களில் நிலைநாட்டப்பட்டு வருகின்றது என அந்த CIA அறிக்கை கூறுகின்றது.

இதனை அடுத்து உலக அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருவது. Loosing Battle with Islam. இஸ்லாத்தோடு சண்டையிட்டு தோற்றது.?

இந்த நூலை பற்றியும் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே, சொல்லிவிட்டோம். எனினும் ஒரு சுருக்கத்தை இங்கே தருகின்றோம்.

இந்த நூல், இந்த உலகிலுள்ள எல்லா மதங்களும், ஆயுதத்தை கையிலெடுத்து தங்கள் மதத்தை நிலை நாட்ட முயற்சி செய்கின்றன. ஆனால் முஸ்லிம்கள் மட்டுந்தன் தங்கள் மார்க்கத்திற்காக மடிவதை விரும்புகின்றார்கள். செயற்களத்தில் காட்டுகின்றார்கள். அது அவர்களின் ஈமான் என்ற இறை நம்பிக்கையால் உந்தப்படுவது.

இந்த "Power of Faith" இந்த "ஈமானின் பலத் திற்கு" முன்னால் எந்தச் சக்தியாலும் நின்றிட இயலவில்லை.

மேலை நாடுகள், காலாகாலமாக எடுத்த முயற்சிகள், திட்டங்கள் சதிகள்; தீவிரவாத செயல்கள் GOT என்ற Global War on Terror" தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவியப் போர் என்ற பெயரில் இஸ்லாத்திற்கு எதிராக நடத்திய போர். இவையெல்லாம் தோற்று தவிடுபொடியான வரலாறுதான் இந்த நூல்.

### இஸ்லாம்-சத்தியம் மோத வேண்டாம்

அதேபோல் மேலை நாடுகள் தோற்றுப்போன இன்னொரு வரலாற்றை விரித்துரைப்பதுதான். Why We Lost? நாம் ஏன் தோற்றோம், என்ற நூல்.

அதனைத் தொடர்ந்து சிலுவைப் போர் 2.0 என்ற நூல் வெளியே வந்தது. இந்த நூல் மேலே நாம் குறிப்பிட்ட நூல்களுக்கு முடிவுரை எழுவதுபோல் அமைந்தது. இந்த நூலின் முக்கியத்துவம் கருதி இந்த நூல் வைகறை வெளிச்சம் இதழில் தொடராக வெளியிட்டு வருகின்றோம்.

இந்த நூல் ஒரு நீண்ட விவாதத்திற்குப் பின் மேலை நாடுகள் ஆண்டாண்டு காலமாக இஸ்லாத்திற்கு எதிராக நடத்திவரும் போர் அர்த்தமற்றது. இஸ்லாம் ஓர் சத்திய மார்க்கம். அதனோடு மோதுவது அர்த்தமற்றது. அதில் வெல்ல முடியாது. அத்தோடு சமரசம் செய்து கொள்வதே சிறந்தது. ஆனால் மேலை நாடுகள் நடத்திக் கொண்டிருப்பது ஒரு முடிவற்ற போர். அதில் வெற்றி நிச்சயமாக இல்லை. இஸ்லாம் வெல்லும் என்று கூறியுள்ளார்.

**இன்ஷாஅல்லாஹ் இதையே இறைவனும் அவனது அறுதித்தூதர் (ஸல்) அவர்களும் வாக்களித்தள்ளார்கள்.**

**- MGM**



# சிக்கந்தர் மலை / திருப்பரங்குன்றம் தர்கா!

## பாசிஸ்டுகளின் "நம்பிக்கை"தான் கலவரத்திற்கான திறவுகோல்!

டிசம்பர்-3, 2025. கார்த்திகை தீபத் திருநாள். வழக்கமாக மாலையில் ஏற்றப்படும் தீபத்தை கண்டு வழிபட, முருகனின் அறுபடை வீடுகளில் முதல் வீடான திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சுவாமி கோவிலுக்கு பக்தர்கள் வரத்தொடங்கினர். மலையின் மீதுள்ள உச்சி பிள்ளையார் கோவிலில் இருக்கும் தீபத்தூணில், தீபம் ஏற்றுவதை பார்ப்பது பாமர இந்துக்களின் வழிபாட்டு நடமுறைகளில் முக்கியமான ஒன்று. காலம் காலமாக அங்கு ஏற்றும் தீபத்தை கண்டு தங்களது பிரார்த்தனைகளையும், வழிபாடுகளையும் நிறைவேற்றி கொள்வார்கள்.

ஆனால் அந்த பாமர இந்து பக்தர்களுக்கு தெரியவில்லை! இன்றைய தினம் நமது இந்த வழிபாடு வழக்கமான, அமைதியான வழிபாடாக இருக்கப் போவதில்லை. வருடத்திற்கு ஒரு முறை, தொன்று தொட்டு அமைதியாக நடந்து கொண்டிருக்கும் இந்த வழிபாட்டில் பிரச்சினைகளை உருவாக்க சில கயவர்கள் உள்ளே புகுவார்கள் என்று!

**என்ன நடந்தது?**

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் மலை உச்சியில் உள்ள பழமையான கல் தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதி கோரி ராம ரவிகுமார், அக்டோபர் 28ம் தேதி கோவில் நிர்வாகத்திற்கு ஒரு கோரிக்கையை வைக்கிறார்.

இதனை தொடர்ந்து கோவில் நிர்வாகம், "தீபத் திருநாள் அன்று, வழக்கமாக உச்சி பிள்ளையார் கோவிலில் உள்ள தீபத்தூணில் தான், தீபம் ஏற்றப்படும். அதுதான் கோவில் நிர்வாகத்தின் இறுதி முடிவு" என்று நவம்பர் 3ம் தேதி கூறியது.

பின்னர் ராம ரவிகுமார் "தர்காவிற்கு 15 மீட்டர் தொலைவில் உள்ள தூண் ஒன்றில் தீபம் ஏற்றுவது தொடர்பாக, நவம்பர் 28ம் தேதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்கிறார்.


vaigarai velicham official



அதில், “மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றப்பட வேண்டும். ஆனால் கோயில் நிர்வாகம் மலைக்குக் கீழே உள்ள மண்டபத் திலேயே தீபம் ஏற்றுவதாக தனது வாதத்தில் குறிப்பிட்டிருந்தார்.”

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், திருப்பரங்குன்றம் மலை உச்சியில், சிக்கந்தர் பாஷா தர்காவிற்கு அருகே சுமார் 15 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பழமையான கல் தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதி வழங்கினார்.



வழக்கமாக உச்சிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் தீபம் ஏற்றப்படும் இடத்துடன் சேர்த்து, இந்த ஆண்டு மலை உச்சியில் உள்ள அந்தப் பழமையான தீபத்தூணிலும் (கல்தூண்) தீபம் ஏற்றப்பட வேண்டும் என்று கோயில் நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார்.

**டிசம்பர் 3: காலை**

நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் டிசம்பர் 1-ஆம் தேதி வழங்கிய உத்தரவின்படி, மலை உச்சியில், தர்காவிற்கு 15 மீட்டர் தொலைவில் உள்ள கல் தூணில் தீபம் ஏற்ற கோயில் நிர்வாகம் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. இதை எதிர்த்து மனு தாரர் ராம ரவிகுமார் காலை 10:30 மணியளவில் நீதிமன்ற அவமதிப்பு (Contempt of Court) வழக்கைத் தொடர்ந்தார்.

**மதியம் - நீதிபதியின் எச்சரிக்கை**

மதியம் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், "நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தத் தவறினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்; மாலை 6 மணிக்குள் தீபத் தூணில் தீபம் ஏற்றப்பட வேண்டும்" என கோயில் நிர்வாகத்திற்கும், காவல் துறைக்கும் இறுதி எச்சரிக்கை விடுத்தார்.

**மாலை 5:00 - 6:00 - உச்சகட்ட பதற்றம்**

மலை உச்சியில் தீபம் ஏற்றினால் சட்டம்-ஒழுங்கு பாதிப்பு ஏற்படும் என்றும், தர்கா பகுதி என்பதால் பதற்றம் நிலவும் என்றும், தமிழ்நாடு அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

மாலை 5:00 மணியளவில், மதுரை மாவட்ட ஆட்சியர் திருப்பரங்குன்றம் மலைப் பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பித்து அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

**இரவு 7:00 - நீதிபதியின் உத்தரவு**

மாலை 6 மணிக்குத் தீபம் ஏற்றப்படாததால் அதிருப்தியடைந்த நீதிபதி ஜி.ஆர். சுவாமி நாதன், இரவு 7:00 மணியளவில் தனது இல்லத்தில் இருந்து ஒரு பிரத்யேக உத்தரவைப் பிறப்பித்தார்:

மனுதாரர் ராம ரவிகுமார் உட்பட 10 பேர் மலை உச்சிக்குச் சென்று தீபம் ஏற்றலாம்.

தமிழக காவல்துறை ஒத்துழைக்க மறுப்ப தால், CISF (மத்திய தொழில் பாதுகாப்பு படை) வீரர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

உயர்நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ள CISF பிரிவினர் உடனடியாகத் திருப்பரங்குன்றம் செல்ல வேண்டும்.

### இரவு 9:00 - 11:30 -
### மலை அடிவாரத்தில் மோதல்

நீதிபதியின் உத்தரவு நகலுடன் ராம ரவிகுமார் மற்றும் இந்து அமைப்பினர் மலைக்குச் செல்ல முயன்றனர். மலை அடிவாரத்தில் ஆயிரக்கணக்கான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். 144 தடை உத்தரவைச் சுட்டிக்காட்டி போலீசார் அவர்களைத் தடுத்தனர்.



CISF வீரர்கள் அங்கு வந்தபோதும், மாவட்ட நிர்வாகம் மற்றும் போலீசாருடன் நீண்ட வாக்குவாதம் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

### நள்ளிரவு - தற்காலிக முற்றுப்புள்ளி

போலீசார் மற்றும் மாவட்ட நிர்வாகம் "சட்டம் ஒழுங்கு சீர்குலைவைத் தடுக்கவே தடையுத்தரவு போடப்பட்டுள்ளது, நள்ளிரவில் மலை ஏறுவது ஆபத்து" எனக் கூறி எவரையும் அனுமதிக்கவில்லை. இதனால் அன்று இரவு தீபம் ஏற்றும் முயற்சி தோல்வியில் முடிந்தது. இதனை தொடர்ந்து டிசம்பர் 4-ஆம் தேதி, திருப்பரங்குன்றம் தீப விவகாரத்தில் சட்டப் போராட்டமும் களப் போராட்டமும் உச்சக் கட்டத்தை எட்டின.

### காலையில் அவசர மேல்முறையீடு

தனி நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், CISF (மத்திய படை) பாதுகாப்புடன் தீபம் ஏற்ற உத்தரவிட்டதை எதிர்த்து, தமிழக அரசு மற்றும் கோயில் நிர்வாகம் சார்பில் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் அவசர மேல்முறையீடு செய்யப்பட்டது. நீதிபதிகள் ஜி. ஜெயச்சந்திரன் மற்றும் கே.கே. ராமகிருஷ்ணன் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்தது.

### இருவர் அமர்வின் உத்தரவு

விசாரணைக்குப் பிறகு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பில் தனி நீதிபதியின் உத்தரவை உறுதிப் படுத்தினர்.

**144 தடை ரத்து:** மதுரை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த 144 தடை உத்தரவு செல்லாது என ரத்து செய்யப்பட்டது.

**CISF பாதுகாப்பு உறுதி:** உயர்நீதிமன்ற பாதுகாப்பில் உள்ள CISF வீரர்கள், மனுதாரர் ராம ரவிகுமார் மற்றும் பக்தர்கள் மலை உச்சிக்குச் சென்று தீபம் ஏற்றப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என மீண்டும் உத்தரவிடப்பட்டது.

**அரசுக்கு கண்டனம்:** நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாமல் முட்டுக்கட்டை போடுவதாக அரசு தரப்பிற்கு நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

### மலையடிவாரத்தில் போராட்டமும் தள்ளுமுள்ளும்

நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு, ராம ரவிகுமார் மற்றும் இந்து அமைப்பினர் தீபம் ஏற்றும் பொருட்களுடன் திருப்பரங்குன்றம் மலைக்குச் செல்லத் திரண்டனர்.



ஆனால், தமிழக காவல்துறை 144 தடை ரத்து செய்யப்பட்ட பிறகும், "பாதுகாப்பு காரணங்களைக்" கூறி அவர்களை மலையேற அனுமதிக்கவில்லை. இதனால் போலீசாருக்கும், ராம ரவிகுமார் மற்றும் இந்து அமைப்பினர்களுக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

### உச்ச நீதிமன்றத்தில் அரசு முறையீடு

உயர்நீதிமன்ற இருவர் அமர்வின் உத்தரவையும் எதிர்த்து, தமிழக அரசு அதே நாளில்

உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) அவசர கால மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது.

தமிழக அரசின் மேல்முறையீட்டை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்ற இருவர் அமர்வு வழங்கிய உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்தது. "தற்போது இருக்கும் நிலையே நீடிக்க வேண்டும்" (Status Quo) என்று உத்தர விட்டதால், மலை உச்சியில் தீபம் ஏற்றும் முயற்சி நிறுத்தப்பட்டது.

**டிசம்பர் 05: நீதிமன்ற அவமதிப்பு ஒத்திவைப்பு**

தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுவை (SLP) தாக்கல் செய்ததை அடுத்து, நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகளை தொடக்கத்தில் ஒத்திவைக்கிறார்.

**டிசம்பர் 09: சம்மன் வழங்கல்**

நீதிமன்ற உத்தரவு தொடர்ந்து நிறைவேற்றப் படாததால் அதிருப்தி அடைந்த நீதிபதி சுவாமி நாதன், "வேண்டுமென்றே கீழ்ப்படியாதது" குறித்து விளக்கம் அளிக்க தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் ஏடிஜிபி (சட்டம் & ஒழுங்கு) ஆகியோரை டிசம்பர் 17 அன்று ஆஜராகுமாறு உத்தரவிடுகிறார்.

**டிசம்பர் 10-12: காவல்துறை நடவடிக்கை**

டிசம்பர் 4 அன்று நடைபெற்ற போராட் டங்கள் தொடர்பாக பாஜக மற்றும் இந்து முன்னணி தலைவர்கள் உட்பட 113 பேர் மீது தமிழக காவல்துறை வழக்குப்பதிவு செய்கிறது. மலைப்பகுதி தொடர்ந்து பலத்த தடுப்புகளுடன் பாதுகாக்கப்படுகிறது.

**டிசம்பர் 16: வக்ஃப் வாரிய உரிமை கோரல்**

மலை உச்சியில் உள்ள தூண் தர்காவிற்கு சொந்தமானது என்று வக்ஃப் வாரியம் அதிகாரப் பூர்வமாக உரிமை கோருகிறது. இது "கோயில் மற்றும் அரசு" இடையேயான மோதல், மும்முனை நிலத் தகராறாக மாறுகிறது.

**டிசம்பர் 17: தலைமைச் செயலாளர் ஆஜர்**


உயர்மட்ட அதிகாரிகள் காணொளி காட்சி மூலம் ஆஜராகின்றனர். தர்கா அருகே இரண்டாவது விளக்கை ஏற்றுவது நிரந்தர "வகுப்புவாத மோதல் புள்ளியை" உருவாக்கும் என்று அரசு வாதிடுகிறது. நீதிமன்றம் நில ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோருகிறது.

**டிசம்பர் 18: தீர்ப்பு ஒத்திவைப்பு**

நீதிபதிகள் ஜி. ஜெயச்சந்திரன் மற்றும் கே.கே. ராமகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய அமர்வு இறுதி மேல்முறையீட்டை விசாரிக்கிறது. இந்து மத நம்பிக்கையின் மீது இந்து சமய அறநிலையத்துறை "வெளிப்படையான அலட்சியத்தை" காட்டுவதாக இந்து முன்னணியினர் குற்றம் சாட்டுகின்றனர். நீதிபதிகள் தீர்ப்பை ஒத்திவைக்கின்றனர்.

**டிசம்பர் 22: மலை மீண்டும் திறப்பு**

இரண்டு வார முழு அடைப்பிற்குப் பிறகு, காசி விஸ்வநாதர் கோயில் மற்றும் தர்காவிற்குச் செல்லும் சாதாரண பக்தர்களுக்காக மலை மீண்டும் திறக்கப்படுகிறது. ஆனால் தீபத்தூண் என்று வாதிட்ட கல்தூண் பகுதிக்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.



2025 கார்த்திகை தீபம் ஏற்றுவது குறித்து, திருப்பரங்குன்றத்தில் இந்து முன்னணியினர் செய்த இந்த அட்டூழியங்களின், செய்திகளின் சுருக்கமான தொகுப்பு இவை. இந்த பாசிஸ்டு களின் இத்தனை அட்டூழியங்களுக்கும் அவர் களிடம் இருந்த ஒரே ஆதாரம் என்ன தெரியுமா? வெறும், "நம்பிக்கை" தான்.

பாசிஸ்டுகளின் "நம்பிக்கைகள்" வட இந்தியா முழுவதும் ஏற்படுத்தி கொண்டிருக்கும், விளைவுகளையும், மத மோதல்களையும், பிரிவினைகளையும் தமிழக மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருந்திருக்கிறார்கள். "இந்த

திருப்பரங்குன்ற தீபத்தூண் பிரச்சினையில் பாமர இந்துக்களின், பாசிஸ்டுகளின் “நம்பிக்கை”க்கு, எதிரான நடவடிக்கைகளே அதை நமக்கு உணர்த்துகின்றன. அதுகுறித்து பாகம் 03இல் விவரித்துள்ளோம்.

மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளின் தொகுப்புகளில் நமக்குள்ள கேள்விகள்,

28 அக்டோபர் 2025 அன்று ராம ரவிகுமார், திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாகத்திற்கு அனுப்பிய மனுவின் புகைப்படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

From
Rama.Ravikumar, S/o. S.Ramar,
W5-3-36 Nehruji Street
Sandhana mari Amman Kovil Street
Elumalai, Madurai - 625535
Mobile: 9655365696

To
The Executive Officer,
Arulmigu Subramaniaswamy Temple,
Thiruparankundram
Madurai District - 625004

Subject: Representation for Conduct of Karthigai Deepam Festival at Thiruparankundram Hill for the Year 2025 - Reg.

Respected Sir/Madam,

I am a devotee of Arulmigu Subramania swamy Temple, Thiruparankundram, and have been regularly participating in the Karthigai Deepam festival held annually at the temple.

I respectfully submit that the Hon'ble High Court of Madras, Madurai Bench, in its order in W.P.(MD)Nos.2277, 3703 & 2678 of 2025, 15565 & 23198 of 2023 and 8523/2017 and WP No.18884/1994, has recognised the traditional and customary observance of Karthigai Deepam on the Hill and permitted the continuation of the said religious practice under the supervision of the temple authorities and HR&CE Department.

Based on the directions contained in the said order, and in accordance with the established customs of the temple, I request you to kindly grant permission for lighting the Karthigai Deepam at Thiruparankundram Hill for this year (2025), and to make the necessary arrangements for smooth and peaceful conduct of the festival, ensuring participation of devotees as per tradition.

I also request that appropriate coordination may be made with the local administration and police authorities for crowd control and safety measures during the event.

I humbly seek your favourable consideration and early orders in this regard.

Yours faithfully,
[Rama. Ravikumar]
Devotee of Arulmigu Subramaniaswamy Temple

Date: 28.10.2025
Madurai

இதில், “தானொரு பக்தன் என்றும், ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை தீப விழாவில் பங்கேற்பதாகவும் கூறிவிட்டு, "கோயில் நிர்வாகம் வழக்கமாக பாரம்பரிய முறைப்படி திருப்பரங்குன்றம் மலையில் இந்த 2025 வருடம் தீபம் ஏற்ற அனுமதிக்க வேண்டும்" என்று தான் அவர் கோரிக்கை வைத்துள்ளார். அந்த கடிதத்தில், "தீபத்தூண்" என்கிற வார்த்தையே இல்லை. அதுமட்டுமல்ல. "மலை உச்சி" என்கிற வார்த்தையும் இல்லை. வெறுமனே "மலை" என்று மட்டும் தான் உள்ளது.

ராம ரவிகுமாரின் இந்த கோரிக்கைக்கு கோவில் நிர்வாகம் அளித்த பதில் கடிதத்தின் நகலையும் கீழே கொடுத்துள்ளோம்.

மேற்குறிப்பிட்டுள்ள, நீதிப்பேராணை மனு W.P.(MD).No.19422 of 2014 மற்றும் நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனு W.A.(MD).No. 1524 of 2014 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளின்படி, தங்களின் கோரிக்கையான திருக்கோயிலின் உறுதிப்படுத்தப்பட்டுள்ள வழக்காறுகளின்படியான (Established custom of the temple) தீபமேற்றும் இடமான, திருப்பரங்குன்றம் மலையில் அமைந்துள்ள (at Thirupparan kundram Hill) உச்சிப்பிள்ளையார் கோயில் தீப மண்டபத்தில், 2025ஆம் ஆண்டுக்கான கார்த்திகைத் தீபம் ஏற்றப்படும் என்பதும், மேற்படி தீபத்திருவிழாவில் பாரம்பரிய முறைப்படி பக்தர்களின் பங்கேற்பினை உறுதி செய்யவும், மேற்படி திருவிழாவை சுமூகமாகவும், அமைதியாகவும், நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை, உள்ளூர் நிருவாகம் மற்றும் காவல்துறையுடன் கலந்து திருக்கோயில் நிருவாகம் மேற்கொள்ளும் என்பதும்,

கூட்டமேலாண்மை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் தங்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

ஒம்/- ந.யக்ஞ நாராயணன்
துணை ஆணையர்/ செயல்அலுவலர்
/உண்மை நகல்/ உத்தரவுப்படி/
03/11/20
கண்காணிப்பாளர்

3/11/25

பெறுநர்
திரு.இராம.ரவிக்குமார்
த/பெ.க.இராமர்

“வழக்கம்போல மலையில் உள்ள உச்சி பிள்ளையார் கோவிலில் தீபம் ஏற்றப்படும், அதில் அமைதியாக கலந்து கொள்ளுங்கள்” என்றும் பதில் வழங்கியுள்ளது.


அதாவது அக்டோபர் 28ல் ராம ரவிகுமாரின் கோரிக்கை மனுவில், “மலை உச்சியில்”, “தீபத்தூண்” என்ற வார்த்தைகளே இல்லை. ஆனால், நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பில் இது எப்படி இடம் பெற்றது?

இங்குதான், பாசிஸ்டுகளின் சதித்திடங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தை கவனியுங்கள்,

நவம்பர் 17ஆம் தேதி அரசுபாண்டி என்ற நபர், கோவில் நிர்வாகத்திற்கு அப்படி ஒரு கோரிக்கையை வைத்து மனு அனுப்புகிறார். பின்னர் அதே நாளில், அதாவது 17 நவம்பர் அன்று, “கோவில் நிர்வாகம் தனது கோரிக்கையை நிராகரித்து விட்டதாக” வழக்கு தொடுக்கிறார்.



vaigarai velicham official



E-COURTS
HIGH COURTS OF INDIA

High Court of Madras- Madurai Bench of Madras High Court

Back

Madurai Bench of Madras High Court
Case Details

| | | |
|---|---|---|
| | : WP(MD) | |
| ber | : 99809/2025 | Filing Date: 17-11-2025 |
| n Number | : 33112/2025 | Registration Date: 17-11-2025 |
| ber | : HCMD01-168574-2025 | |

Case Status

| | |
|---|---|
| g Date | : |
| ate | : 01st December 2025 |
| s | : CASE DISPOSED |
| isposal | : --ALLOWED |
| | : 2220Honourable Mr Justice G.R.SWAMINATHAN |
| | : Single Bench |
| | : TAMIL NADU |
| | : Madurai |
| | : Writ Section |
| ame | : Regular List |
| Me | : |

Petitioner and Advocate

pandi

- A. KUMARAGURU,NIRANJAN S. KUMAR-MS/2931/2008,NIRANJAN S. KUMAR-MS/2931/2008 ,NIRANJ
K AMARAVEL PANDIYAN,R. VIGNESH,N.MAHARAJA,J.SITHARTH

Respondent and Advocate

e of Tamil nadu

- MR.P.SUBBARAJ SPL GP FOR R1 TO R4, MR.A.ALBERT JAMES GA (CRL SIDE) FOR R5,MR.V.CHAN

mmissioner,

t Commissioner,

rict Collector,

missioner of Police,

cutive Officer,

in WP(MD)No.33112 of 2025 : -

M.Arasupandi ... Petitioner

Vs.

1.The State of Tamil Nadu,
Rep.by its Additional Chief Secretary
to Government,
Hindu Religious and Charitable
Endowments Department,
Secretariat, Chennai – 600 009.

2.The Commissioner,
Hindu Religious and Charitable
Endowments Department,
119, Uthamar Gandhi Salai,
Nungambakkam,
Chennai – 600 034.

Prayer : Writ Petition filed under Article 226 of the Constitution of India, praying this Court to issue a Writ of Mandamus directing the respondents 1 to 6 to take all necessary steps and make appropriate arrangements to light the sacred Karthigai Deepam at the Dheepathoon (Ancient Stone Lamp Pillar) situated atop the Thirupparankundram Hill in accordance with the age-old religious customs and practices of Arulmighu Subramaniyaswamy Temple, Madurai henceforth ensuring that the said lighting of the Deepam at the Dheepathoon is performed in such a manner that the devotees and residents of Madurai District may receive the divine vision of the sacred flame from the top of the Hill, by considering petitioner's written representation dated 17.11.2025.

அதாவது, 17ஆம் தேதி கோவில் நிர்வாகத்திற்கு தனது கோரிக்கை மனுவை அரசுபாண்டி என்பவர் அனுப்புகிறார். அது கோவில் நிர்வாகத்திற்கு சென்று சேர்ந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அதேநாளில் தனது கோரிக்கையை கோவில் நிர்வாகம் மறுத்துவிட்டதாக, வழக்கும் தொடுக்கிறார்.


மேலும், இந்த அரசுபாண்டி என்பவருடைய வழக்கறிஞர் தான், குமருகுரு. அவர்தான், பத்திரிகையாளர் சந்திப்பில், "அந்த தூண் எங்கள் நம்பிக்கை. ஆதாரம் நாங்கள் கொடுக்க வேண்டியதில்லை. அரசாங்கம் தான் அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டும்." என்று பேசியிருந்தார்.

17 நவம்பரில் தொடுக்கப்பட்ட அரசு பாண்டி என்பரின் வழக்கு, நவம்பர் 28இல் தள்ளுபடி செய்துவிட்டு, அரசு பாண்டியின் கோரிக்கை மனுவில், அவர் வைத்திருந்த கோரிக்கைகளுக்கு, ராம ரவிகுமாருக்கு அனுமதி அளித்திருக்கிறார் நீதிபதி சுவாமிநாதன்.

## நீதிமன்றத்தில் நடந்த விவாதங்கள்

### தூண் இருக்கும் இடமெல்லாம் தீபமேற்ற வேண்டுமா?

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு, அறநிலையத் துறை, கோயில் நிர்வாகம், தர்கா நிர்வாகம்





உட்பட 26 மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது அரசு, அறநிலையத் துறை சார்பில் வாதங்கள் முன் வைக்கப்பட்டன.

### கோவில் தரப்பின் வாதம் என்ன?

**கோயில் செயல் அலுவலர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் மாசிலாமணி வாதிடுகையில்,**

"நீதிபதி கனகராஜின் உத்தரவில், தேவஸ்தானமே தீபம் ஏற்ற வேண்டும், தீபம் ஏற்றும் இடத்தை விதிகளுக்கு உட்பட்டே மாற்ற இயலும் எனக் கூறியுள்ளார்."

"மனுதாரர் மலை உச்சியில் தீபமேற்றக் கோரியுள்ளார். 2 உச்சிகளில் 1 உச்சியில் தர்காவும், மற்றொரு உச்சியில் உச்சிப்பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. கோயில் நிர்வாகத்திடம் அளித்த மனுவில் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் எனக் குறிப்பிடவில்லை."

"மனுதாரர் கோரிக்கை மனுவில் குறிப்பிடாதவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளார். தனி நீதிபதியின் உத்தரவு முழுக்க முழுக்க மனுதாரருக்கு சாதகமான விவரங்களை மட்டும் கருத்தில் கொண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர் தரப்பு வாதங்களை கருத்தில் கொள்ளவில்லை."

"வாதங்களின் அடிப்படையிலேயே உண்மை கண்டறியப்பட வேண்டும். மோட்ச தீபம் ஏற்றும் பகுதியில் கார்த்திகை தீபம் ஏற்றப்படவில்லை. அதன் அருகில் வேறொரு இடத்தில் ஏற்றப்படுகிறது. அது ஆகம விதிகளுக்கு எதிரானது என நிரூபிக்கப்படவில்லை. மலையில் 8 அடி உயரமுள்ள 1 அடி அகலம்

கொண்ட கிரனைட் தூண் தான் உள்ளது. அங்கு தீபத்தூண் இல்லை" என்றார்.

நீதிபதிகள், "அது தீபத்தூண் இல்லை என எப்படி கூறுகிறீர்கள்?" எனக் கேள்வி எழுப்பினர்.

கோயில் நிர்வாகம் தரப்பில்,

"இது பிரிட்டிஷ் காலத்தில் மலைகளை அளப்பதற்காக பயன்படுத்தப்பட்ட சர்வே தூண். இதுபோன்ற சூழலில் அது தீபத்தூண் தான் என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை. தீபத்தூண் மலை உச்சியில் இருப்பதாக தனி நீதிபதி குறிப்பிட்டுள்ளது சரியான தகவல் அல்ல."

"இரு உச்சிகள் உள்ளன. ஒன்றில் தர்காவும், மற்றொரு உச்சியில் உச்சிப்பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. மனுதாரர் குறிப் பிட்டுள்ள தூண், கோயிலுக்கு சொந்தமானது என்பதில் சந்தேகமில்லை. இரு நீதிபதிகள் முடிவு செய்த விவகாரத்தில் தனி நீதிபதி தலையிட்டு தானாக உத்தரவிட இயலாது. கருத்துகளைக் கூறி தலைமை நீதிபதிக்கே பரிந்துரைத்திருக்க வேண்டும்" எனக் கூறப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், "குதிரைச்சுனை பகுதியில் தீபமேற்றினால் தீபம் தெரியாது என்பதற் காகவே உச்சிப்பிள்ளையார் கோயில் தேர்வு செய்யப்பட்டுள்ளது" என்றனர்.

கோயில் நிர்வாகம் தரப்பில்,

"குதிரைச்சுனை தீபத்தூண் என குறிப்பிடப் படும் பகுதி அருகிலேயே உள்ளது. அப்படி யிருக்கும்போது தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி எப்படி உத்தரவிட முடியும்?" எனக் கூறப்பட்டது.

நீதிபதிகள், "அனைவருக்கும் தெரியும் வகையில் அந்த தூணில் முன்பு ஏற்றப்பட்டி ருக்கலாமே?" என்றனர்.

அதற்கு, "அப்படியே இருந்தாலும் 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு தெரியும் வகையில் தீபமேற்ற வேண்டும் என்றால் 8 அடி உயரம், 1 அடி அகலம் கொண்ட தூணில் எப்படி தீபம் ஏற்றியிருப்பார்கள்? அதற்கான ஆவணம் எதும் தாக்கல் செய்யப்படவில்லை. அந்தத் தூண் கிரானைட்டால் ஆனது. தீபமேற்றும் போது அது வெப்பத்தால் பாதிக்கப்பட்டிருக்கும்" எனக் கூறப்பட்டது.

நீதிபதிகள், "அந்தத் தூணை யாரும் ஆய்வு செய்தார்களா?" என்றனர்.

கோயில் தரப்பில்,

"தூண் தொடர்பான புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டது. அந்த தூண் உண்மையில் தீபம் ஏற்ற பயன்படுத்தப்பட்டதா? அல்லது அது சர்வே தூண் தானா? என்பதை முடிவு செய்ய தனி நீதிபதி தவறிவிட்டார். அந்தத் தூண் உண்மையில் பார்க்கையில் சர்வே தூண் அமைப்பையே கொண்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டது."



தொடர்ந்து நீதிபதிகள், "அந்த தூண் கோயில் பகுதியில் அமைந்துள்ளது. அது ஏன் தீபத் தூணாக இருக்கு முடியாது?" என்றனர்.

செயல் அலுவலர் தரப்பில், "அந்த தூணில் கார்த்திகை தீபம் ஏற்றும் வழக்கம் இல்லை" எனக் கூறப்பட்டது.

**கோயில் நிர்வாகம் தரப்பில் மூத்த வழக்கறிஞர் என்.ஜோதி வாதிடுகையில்,**

"திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்றும் முழு உரிமை கோயில் நிர்வாகத் துக்கு தான் உள்ளது. அந்த உரிமையை தனி


vaigarai velicham official


நபர் கோர முடியாது. பல ஆண்டு காலமாக மலையில் உள்ள உச்சிப்பிள்ளையார் கோயிலில் தான் தீபம் ஏற்றப்படுகிறது. அந்த பழக்கத்தை மாற்ற மனுதாரர் கோரியுள்ளார். மலை மீது விளக்கேற்றுவது வேறு. வீட்டில் விளக்கேற்றுவது வேறு. மனுதாரர் கார்த்திகை தீபத்தை வீட்டில் தீபம் ஏற்றுவதுபோல நினைக்கிறார். நூறு ஆண்டுக்கு மேலாக திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றும் நடைமுறை ஆகம விதிகள் அடிப் படையில் நடைபெற்று வருகிறது."

"கோயில் நிர்வாக விஷயங்களில் உயர் நீதிமன்றங்கள் நேரடியாக தலையிடக்கூடாது என உச்ச நீதிமன்றம் 2021-ல் கூறியுள்ளது. திருப்பதி தேவஸ்தானத்தில் கூட ஆகம விதிகளை மீறி எதையும் செய்யக்கூடாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆகம விதிகளை மீறி புதிய பழக்கங்களை நிறைவேற்றும்போது பலதரப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும். அரசு, அறநிலையத் துறை, கோயில் தரப்பு வாதங்களை தனி நீதிபதி ஏற்கவில்லை."

"பொதுவாக அர்ச்சனை பூஜையில் எவ்வாறு தனிநபர் தலையீடு இருக்கக் கூடாதோ, அதுபோல மலை மீது தீபமேற்றுவதும் ஆகம விதிகள் சம்பந்தப்பட்டது. இதை தனி நபர் உரிமையாக கோர முடியாது. மதம் சார்ந்த விஷயங்கள் மிகவும் பரபரப்பானவை தேவை யற்ற பதற்றத்தை ஏற்படுத்தக் கூடாது. கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர்களை கோயில் மீது பற்று இல்லாதவர்கள்போல் தற்போது சித்தரித்து வருகின்றனர்."

"தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத் துறையின் புத்தகத்தில் மலையில் பாதி வழியில் இறங்கி சென்றால் தீபத்தூண் ஒன்று இருப்பதை காணலாம். அது நாயக்கர் கால தீபத்தூண். அந்த தீபத்தூணில் அனுமான் உருவம் உள்ளது. அது ஆண்டவன் தலைமீது உள்ள தூண் என மக்கள் நினைக்கின்றனர். அங்கு விளக்கேற்றினால் நன்மை நடக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த தூண் தான் உச்சிப்பிள்ளையார் கோயில் அருகே யுள்ள தீபத்தூண். இதைத் தவிர மலையில் உள்ள தூண்கள் தீபத்தூண் அல்ல."

"தற்போது தீபம் ஏற்றும் தூணில் காலம் காலமாக தீபம் ஏற்றப்பட்டதற்கு பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. ஆனால் மனுதாரர்



குறிப்பிடும் தூணில் தீபம் ஏற்றப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை."

"மதுரையின் பல மலைகளிலும் திருப்பரங் குன்றம் மலை உச்சியில் உள்ளது போன்ற தூண்கள் உள்ளன. சரவணபவ கோயிலிலும் இதே போன்ற தூண் உள்ளது. இந்த தூண்கள் சமணர் காலத்தை சேர்ந்தவை. மதுரையை சுற்றியுள்ள பல மலைகளில் சமணர்கள் வாழ்ந்துள்ளனர். இதற்கான கல்வெட்டுகள், படுகைகள், எழுத்துக்கள், சிற்பங்கள் உள்ளன. சமணர்கள் மக்களை விட்டு விலகி மலை படுகைகளில் வாழ்ந்து வந்துள்ளனர். இரவில் அவர்கள் நிலா வெளிச்சத்தை தாண்டி வெளிச்சத்துக்கு இந்த தூண்களை பயன்படுத்தியிருக்கலாம்" என்றனர்.

அப்போது நீதிபதிகள்,


"சமணர்கள் பழமையானவர்கள். அவர்கள் விளக்கு ஏற்றத்தானே அந்தத் தூண்களை பயன்படுத்தி உள்ளார்கள். சில புத்தகங்களில் அது விளக்கேற்றும் தூண் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது" என்றனர்.

அதற்கு கோயில் தரப்பில்,

"அந்த தூண்கள் சமணர்கள் காலத்தை சேர்ந்தவை. இந்துக்களுக்கும் அந்த தூண் களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்த தூண்களில் கார்த்திகை தீபம் ஏற்றப்படவும் இல்லை. வைணவத்தில் வடகலை, தென்கலை பிரச்னை உள்ளது. அதுபோல திருப்பரங்குன்றத்தில் பிரச்சினை எழுப்பப்பட்டு வருகிறது. குன்றம் இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பது சரி. அதற்காக தூண் இருக்கும் இடமெல்லாம் தீபமேற்ற வேண்டுமென்றால் எப்படி?

உயர் நீதிமன்றத்துக்கு வெளியேயும் ஒரு தூண் உள்ளது. முருகனுக்கு இரு மனைவிகள்

இருப்பதால், இரு இடங்களில் கார்த்திகை தீபம் ஏற்றலாமா? இரு இடங்களில் கார்த்திகை தீபம் ஏற்றுவது சரியல்ல. இந்த வழக்கால் தற்போது பல்வேறு பிரச்சினைகள் எழுந்து திருப்பரங்குன்றம் மக்கள் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.



இப்பிரச்சினைக்கு முழு காரணம் 3 மனுதாரர்கள் தான். தனி நீதிபதி மனுவை அவசர அவசரமாக விசாரித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த திடீர் உத்தரவால் அதிகாரிகள் பாதிக்கப்பட்டனர்" என்றார்.

**தர்கா தரப்பு வாதங்கள்**

**சிக்கந்தர் தர்கா தரப்பு மூத்த வழக்கறிஞர் மோகன் வாதிடுகையில்,**

"திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றும் விவகாரத்தில் இதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை கருத்தில் கொள்ளாமல் தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். தர்கா தரப்பை தனி நீதிபதி தாமாக முன்வந்து சேர்த்ததால் நோட்டீஸ் வழங்கப்பட்டது."




"எங்களுக்கு போதுமான அவகாசம் தரவில்லை. எங்கள் தரப்பு வாதங்களை கேட்கவும் இல்லை. ரிட் மனு எப்படி விசாரிக்கப்பட வேண்டும் என விதிமுறைகள் உள்ளன. தர்காவிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு அப்பால் எங்கு வேண்டுமானாலும் தீபம் ஏற்றலாம் என்பதை ஏற்க முடியாது."

"தர்காவில் ஆடு, கோழி பலியிட அனுமதி கோரப்பட்ட வழக்கில் உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்வு காண உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் மலை உச்சியில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தர்கா நிர்வாகம் மலையை ஆக்கிரமித்திருப்பதாக தனி நீதிபதி தெரிவித்துள்ளார். இது சொத்துரிமை தொடர்பான வழக்கு அல்ல" என்றார்.

அப்போது நீதிபதிகள், "தர்காவிலிருந்து 15 மீட்டர் தொலைவில் தீபம் ஏற்றலாமா?" எனக் கேள்வி எழுப்பினர்.

அதற்கு தர்கா தரப்பில், "இதுவரை முறையாக எல்லைகள் வரையறுக்கப்படவில்லை. திருப்பரங்குன்றம் மலை முழுவதும் அளவீடு செய்தால் மட்டுமே தனி நீதிபதி உத்தரவை அமல்படுத்த முடியும். தர்கா அருகே உள்ள கல்லத்தி மரம் அருகே கொடியேற்ற தர்கா நிர்வாகம் முடிவு செய்தபோது கோயில் நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்தது. தொல்லியல் துறையிடம் தனி நீதிபதி கருத்து கேட்கவில்லை" என்றார்.

மூத்த வழக்கறிஞர் லஜபதிராய் வாதிடுகையில், "பாபர் மசூதி பிரச்சினையால் மத ரீதியான கொலைகள் நடந்தேறியது. இந்தச் சூழலில் இதுபோன்ற உத்தரவுகள் ஏற்புடையது அல்ல. உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் நீதிபதி தீர்ப்பளிக்க வேண்டும்" என்றார்.

**முன்னதாக, வக்பு வாரிய வழக்கறிஞர் முபின் வாதிடும்போது,**

"மலை உச்சியில் உள்ள தூணில் தீபமேற்றும் பழக்கம் இருந்ததில்லை. நெல்லித்தோப்பு மற்றும் அது சார்ந்த பாதைகள், அவ்விடத்துக்குச் செல்லும் படிக்கட்டுகள் தர்கா நிலங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறையிடம் தனி நீதிபதி கருத்து கேட்கவில்லை" என்றார். இதையடுத்து நீதிபதிகள், தர்காவுக்கு சொந்தமான நிலங்கள் தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டனர்.

தனி நீதிபதி, வரும் தேர்தலில் போட்டியிடு வதற்கான வாய்ப்புள்ளது

**மதுரை ஆட்சியர், காவல் ஆணையர் தரப்பு வழக்கறிஞர் விகாஸ்சிங் வாதிடும்போது,**

"தனி நீதிபதி தீர்ப்பால் திருப்பரங்குன்றத்தில் பதற்றமான சூழல் ஏற்பட்டது. 1862, 1960-ம் ஆண்டுகளில் பிரச்சினை எழுந்தபோது, தீபம் ஏற்ற அனுமதி கொடுக்கவில்லை. தர்கா அருகில் உள்ள கல் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று புதிதாக உத்தரவிட்டு, அதற்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என உத்தரவிடுவது ஏற்புடையதல்ல. தர்காவுக்குச் சொந்தமான பாதை வழியாக சென்றுதான் தீபம் ஏற்ற முடியும். இதனால், சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படும்."

"தனி நீதிபதிக்கு மதம் சார்ந்த விவகாரங்களில் முடிவெடுக்க அதிகாரம் இல்லை. அவரது உத்தரவால் பொது அமைதி பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. தனி நீதிபதி, தான் எடுத்துக்கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு எதிராக செயல்பட்டுள்ளார். அவருக்கு வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புள்ளது" என்றார். இதற்கு மனுதாரர் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர்கள் வழக்கறிஞர்கள் வாதிடும்போது, "தனி நீதிபதி ஆய்வு செய்த பின்னரே, தீபம் ஏற்ற உத்தரவிட்டுள்ளார். தர்காவில் இருந்து 15 மீட்டருக்கு அப்பால்தான் தூண் உள்ளது" என்றார்.

அப்போது நீதிபதிகள்,

"தூண் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதை முதலில் தெளிவுபடுத்துங்கள். மலை உச்சிக்குச் செல்ல எத்தனை பாதைகள் உள்ளன. அவற்றில் பயன்பாட்டில் உள்ளவை எத்தனை, அரசு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை தரப்பில், அது சர்வே தூண் என்றும், சமணர் கால கல் தூண் என்றும் கூறப்படுகிறது."

"அரசு, அறநிலையத் துறை, தர்கா, காவல் துறையின் ஆட்சேபங்களை தனி நீதிபதி கருத்தில் கொண்டாரா, 1994 தீர்ப்பில் மலை உச்சியில் உள்ள தூண் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதா, மாற்று இடத்தைப் பரிசீலிக்கத்தானே கூறப் பட்டுள்ளது, பிறகு தீபத்தூணில் தீபமேற்ற வேண்டும் என கோர முடியுமா" என்று கேள்வி எழுப்பினர்.

மனுதாரர்கள் தரப்பில், "தனி நீதிபதியின் உத்தரவை நிறைவேற்ற வேண்டியது காவல் துறையின் கடமை. வழக்கை விரைவில் விசாரித்து முடிக்க வேண்டும்" என்று கூறப்பட்டது.

திருப்பரங்குன்றம் தீப வழக்கில் தனி நீதிபதி அதிகார வரம்பை மீறியுள்ளார் - அரசு தரப்பு வாதம்

**அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் வாதிடும்போது:**

"தெளிவான, உறுதியான ஆவணங்கள், ஆதாரங்கள் இல்லாமல் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் தனி நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார். கோயிலில் பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் வழக்கத்தை மாற்ற தனி நீதிபதி உத்தரவிட்டது சட்டப்படி செல்லுமா என்பதே வழக்கின் மையக் கேள்வியாக உள்ளது."

"கலாச்சாரம், ஆகம விதிகள், பூஜை விதிகள், அர்ச்சனை முறைகள், வழிபாட்டு உரிமை சட்டம் ஆகிய அனைத்தும் முறையாகவும் சட்டப்பூர்வமாகவும் இருக்கும் நிலையில், அதை மாற்றும் வகையில் தனி நீதிபதி உத்தரவிட்டது சரியல்ல. ஒரு தனி நபர் புதிதாகக் கூறும் கலாச் சாரத்தை ஏற்குமாறு கோயில் நிர்வாகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது."



"திருப்பரங்குன்றத்தில் கோயில், அறநிலையத் துறை, தேவஸ்தானம் மற்றும் அறங்காவலர் குழு ஆகியோரின் ஒருமித்த முடிவின்படி, உச்சிப்பிள்ளையார் மண்டபத்திலேயே கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வருகிறது. இதை மாற்றக் கோரும் மனுவை தள்ளுபடி செய்திருக்க வேண்டும்."

"மலை உச்சியில் இருப்பது தீபத்தூண் என்பதற்கான எந்த ஆவணங்களும், வரலாற்று ஆதாரங்களும் இல்லை. 1920-ல் மாவட்ட நீதிபதி முழு மலையையும் ஆய்வு செய்தபோது, மலை உச்சியில் தர்கா மட்டுமே உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். தூண் இருந்தது தொடர்பாக எந்தக் குறிப்பும் இல்லை. தீபம் ஏற்றுவது போன்ற கோயில் நடைமுறைகள், உரிமையியல் தன்மை கொண்டவை."

"இதுபோன்ற வழக்குகள் உரிமையியல் நீதிமன்றத்தில்தான் விசாரிக்கப்பட வேண்டும். உயர் நீதிமன்ற தனி நீதிபதி நேரடியாகத் தலையிட முடியாது. மதுரை பாண்டி கோயில் தொடர்பான வழக்கிலும், அர்ச்சகர் பூஜை செய்யும் உரிமை குறித்து உரிமையியல் நீதிமன்றத்தை அணுகவே தீர்ப்பளிக்கப்பட்டது. எங்கு தீபம் ஏற்ற வேண்டும் என்பதை தீர்மானிக்கும் இறுதி அதிகாரம் அறநிலையத் துறைக்கே உள்ளது. ஒரு கோயிலில் பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் பழக்க வழக்கங்களை திடீர் உத்தரவால் மாற்ற முடியாது. தனி நீதிபதி தனது அதிகார எல்லையை மீறி, அவசரமாக உத்தரவு பிறப்பித்துள்ளார்." இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் நீதிபதிகள், "திருப்பரங்குன்றம் வழக்கில் உரிமையியல் நீதிமன்ற உத்தரவுகள் என்ன? உயர் நீதிமன்ற தனி நீதிபதி இதுபோன்ற விவகாரங்களில் தலையிட முடியுமா என்பதற்கான சட்ட ஆதாரங்கள் மற்றும் அறநிலையத் துறை விதிகள் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்" என்று அரசுத் தரப்புக்கு உத்தரவிட்டனர்.

**முன்னதாக 12 நவம்பர் 2025 அன்று வாதத்தில்,**

"திருப்பரங்குன்றத்தில் 73 ஆண்டுகளாக உச்சிப்பிள்ளையார் கோயிலில் தான் கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது. மனுதாரர்களின் தனிப்பட்ட கோரிக்கையை உரிமையாக கோர முடியாது. விளக்கு ஏற்றுவதாக இருந்தால் கோயில் நிர்வாகம் தான் ஏற்ற வேண்டும். தனிநபர்கள் விளக்கு ஏற்றக் கூடாது. மனுதாரரின் கோரிக்கையை அப்படியே ஏற்க முடியாது. மத நல்லிணக்கம், பொது அமைதியைக் கருத்தில் கொள்ள வேண்டும். திருக்கார்த்திகைக்கு 3 நாட்களுக்கு முன்பு உத்தரவிட்டு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றால் எப்படி?"



"102 ஆண்டுக்கு முந்தைய உரிமையியல் நீதிமன்ற உத்தரவு, பிரிவி கவுன்சில் உத்தரவு, நீதிபதி கனகராஜின் உத்தரவு அனைத்திலும் உச்சிப்பிள்ளையார் கோயில் மண்டபத்திலேயே தீபமேற்றுவதை உறுதி செய்கின்றன.

பொது அமைதியை நிலைநாட்டுவது அரசின் தலையாய பணி. எந்த மதமாயினும், பொது அமைதியைக் குலைக்காத வகையில் வழிபாடு நடக்க வேண்டும். பழமையான பழக்க வழக்கங்களை மாற்றுமாறு கோர இயலாது. இது கோயில் சொத்துரிமை தொடர்பான வழக்கும் அல்ல. ஒரு புதிய பழக்கத்தை கொண்டு வருவது தொடர்பானது."

"இதுவரை வழக்கத்தில் இல்லாத ஒரு விஷயத்தை அமல்படுத்த கோரிய வழக்கு. தனி நீதிபதி உத்தரவில் ராமஜென்ம பூமி வழக்கை மேற்கோள் காட்டியுள்ளார். அந்த உத்தரவு இவ்வழக்கில் பின்பற்றப்பட்டால் மனுதாரர் உரிமையியல் நீதிமன்றத்தையே நாட உத்தரவிட்டிருக்க வேண்டும். வழிபாட்டுத் தலங்களுக்கான சிறப்புச் சட்டப்படி 1947-ம் ஆண்டு ஒரு வழிபாட்டுத் தலம் எந்த நிலையில் இருந்ததோ, அதே நிலையிலே பராமரிக்கப்பட வேண்டும். அதனடிப்படையிலும் இந்த உத்தரவு ஏற்கத்தக்கதல்ல. தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும்" என்றார்.

அப்போது நீதிபதிகள், "தீபம் அனைவருக்கும் தெளிவாக தெரிய வேண்டும் என்பதற்காக மலையில் உள்ள தூணியில் தீபம் ஏற்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதை ஏன் செய்யக் கூடாது?" என்றனர்.

அதற்கு அரசு தரப்பில், 'எந்த முடிவாக

இருந்தாலும் தேவஸ்தானம் மட்டுமே எடுக்க வேண்டும். இந்த வழக்கு முழுக்க முழுக்க சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே செல்ல வேண்டும் என அரசு விரும்புகிறது' எனக் கூறப்பட்டது.

### மனுதாரர் தரப்பு வாதம்

மனுதாரர் ராம.ரவிக்குமார் தரப்பில், "தனி நீதிபதி முன்னிலையில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு உகந்தது இல்லை என்று கூற முடியாது. பூஜை, அர்ச்சனை, தரிசனம் ஆகியவை ஆகம விதிகளுக்கு உட்பட்டவை. கார்த்திகை தீபம் ஏற்றுவதில் எங்கும் ஆகம விதிகள் நடைமுறைப்படுத்தவில்லை. மதச்சார்பற்ற அரசு, ஒரு சார்புடன் நடந்து கொள்ளக் கூடாது. பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என்று கூறப்பட்டது. மற்றொரு மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், தர்கா தரப்பு, மலை உச்சியில் உள்ள கோயில் தல விருட்சத்தை ஆக்கிரமித்து வருவதாகக் கூறி, அது தொடர்பான புகைப்படங்களைத் தாக்கல் செய்தார்.


அப்போது தர்கா தரப்பில் "மனுதாரர் தரப்பு வாதங்களை ஏற்கக் கூடாது. இது உரிமையியல் சார்ந்த மனு" என்று கூறப்பட்டது. பின்னர் மேல்முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் நீதிபதிகள் தள்ளிவைத்தனர். நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை ஜன. 7-ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.


## மதவாதத்திற்கு தமிழ்நாட்டில் "NO ENTRY"

நடந்த இத்துனை நிகழ்வுகளையும், தமிழக அரசு மற்றும் தமிழ்நாட்டு மக்கள் கையாண்ட விதம் இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியாக உள்ளது. குறிப்பாக மதுரை மக்கள் அவர்கள் இந்த பாசிஸ்டுகளின் சதிகளை புரிந்து கொண்டு, மதநல்லிணக்கம் தான் எங்கள் வழி, இது தமிழ்நாடு அயோத்தி அல்ல என்று சூலுரைத்துள்ளனர்.


Trend-ஆன, "We're not allowing... We'll face the Consequences"

ராம ரவிகுமார், பத்து நபர்களோடு சென்று, மலை உச்சியில் தீபம் ஏற்றலாம், என்ற ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் உத்தரவை எடுத்துக் கொண்டு, CISF வீரர்களை அழைத்துக்கொண்டு பல்வேறு இந்து அமைப்பினர் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வந்தனர். ஆனால் அவர்களை அனுமதிக்காத போலீஸ் அதிகாரிகள் We're not allowing...We'll face the consequences என்று குறிப்பிட்டது அன்றைய தினம் தமிழகம் முழுவதும் டிரண்ட் ஆனது. ஹேஷ்டேக்குகள் பறந்தன. இந்தியா முழுவதும் இது பேசும் பொருளானது.


Kavin Malar
4 December at 21:33
"We are not allowing. We will face the consequences"
#Thirupparankunram
143 · 10 comments 3 shares
Like Comment Share


செல்வன் அருண் · Follow
4 December 2025 at 10:45
"We are not allowing.... We will face the consequences"
Words of the year from Tamilnadu...
#thiruparankundram
#திருப்பரங்குன்றம்


வளவன் வசந்தா சித்தார்த்தா · Follow
5 December 2025 at 08:23
"அம்பாள் எப்போதடா பேசினாள்" - என "பராசக்தி" திரைப்படத்தில் ஒரு வசனம் வரும்.
அதே போலதான்...
தமிழர்கள் எப்போதடா கோயிலகளில் "பார்த் மாதா கீ ஜே" னு கூப்பாடு போட்டாங்க.
இந்த ஒரு "கொண்டை" போதும் உங்க அஜெண்டாவை புரிந்துக் கொள்ள.
பக்தர்களையும் கலவரக்காரர்களையும் அடையாளம் காணும் பகுத்தறிவு ஊட்டப்பட்டவர்கள் நாங்கள். புரிஞ்சிக்கோங்க.
அந்த அதிகாரி சொன்னதுதான்...
We are not allowing...
We will face the consequences...
ஆம் இதுவே எங்களின் ஒட்டு மொத்த குரலும் கூட....
ஏன்னா...
Tamilnadu always stands for Secularism!
#தமிழ்நாடுடா


Jeyachandra Hashmi · Follow
3 December 2025 at 23:16
பாபர் மசூதி இடிப்பிற்கு முன்பு நடந்த சம்பவங்களை படித்துப் பார்த்தால், எப்படி கொஞ்சம் கொஞ்சமாக திட்டமிட்டு அது அரங்கேற்றப்பட்டது என்பதை உணர்ந்திருந்தால், திருப்பரங்குன்றத்தை மையமாக வைத்து நடக்கும் மதவெறி அரசியல் எத்தனை அபாயகரமானது என்பதை புரிந்து கொள்ளலாம்.
இது உரைத்தாலே போதும், தமிழக அரசின் இன்றைய எதிர்வினை வீரியமானது மட்டுமல்ல, சமூக அமைதிக்கு, சகோதரத்துவத்திற்கு, தமிழ்நாடு தமிழ்நாடாகவே இருப்பதற்கு, தமிழ் மண்ணை பிரிவினையில் இருந்து காப்பதற்கான கேடயம் என்பது விளங்கும்.
சமத்துவம், பிரிவினை என அதிகாரத்தை வைத்திருக்கும் இருபெரும் சித்தாந்தங்களுக்கு இடையேயான நேரடிச் சண்டையிது. இதில் ராணுவமே வந்தாலும் எங்கள் மண்ணில் பிரிவினையை அனுமதிக்க முடியாது என்று தமிழக அரசு உறுதியாக நின்றது தலை வணங்கத்தக்கது.
நீதிமன்ற அவமதிப்பு என்ற பூச்சாண்டியை புறந்தள்ளி வழக்கமான இடத்திலேயே தீபம் ஏற்றியது, CISF வீரர்களை அழைத்துக் கொண்டு புது இடத்தில் மனுதாரர் விளக்கேற்றலாம் என்ற விந்தையான தீர்ப்புக்கு 144 தடையுத்தரவு மூலம் செக் வைத்தது என பல உறுதியான மாஸ்டர் ஸ்ட்ரோக்குகள்.
அந்த கூட்டத்தை உறுதியாக மறுத்து நிற்கும் காவல்துறை அதிகாரியிடம் ஒருவர் "இது ஹைகோர்ட் ஆர்டர் சார்" என்கிறார். அதற்கு அந்த தமிழக காவல்துறை அதிகாரி இப்படிக் கூறுகிறார்.
"No problem. We are not allowing. We will face the consequences!"
சத்தியமாய் பெருமையாய் இருந்தது. இதுதான் தமிழ்நாடு! மதுரை மாவட்ட ஆட்சியருக்கும், காவல் துறைக்கும், தமிழக திமுக அரசுக்கும் முதல்வருக்கும் பாராட்டுக்களும், நிறைய நன்றிகளும்!
AbuShuhaib, எடிட்டர் அலாவுதீன் and 1.2K others · 16 comments 307 shares
Like Comment Share

Vivekanandan Ramadoss · Follow
3 December 2025 at 23:41

"We are not allowing ! We will face the Consequences!"
இது வரலாற்றில் பதிக்கப்படும்.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

Kudos to TN Govt & CM Stalin!

76 · 5 shares

எஸ்.ஆர்.செந்தில்குமார் தமிழ்நாடு
3 December 2025 at 22:16

We're not allowing... We will face the consequences.

மூடிட்டு கிளம்பு சொல்லிட்டார்.




32 · 2 comments 6 shares

Like Share

Mithun Selvaraj · Follow
4 December 2025 at 07:45

We've all seen those iconic punch dialogues in movies, and sometimes we hear them in real life too!

One such powerful statement that stands out is:

"We are not allowing, we will face the consequences!"

8

Like Comment Share

ஜெகதீஷ் ரவி · Follow
4 December 2025 at 09:43

கலவரக்காரர்களுக்கு இன்று தமிழகம் பதில் சொல்லி இருக்கிறது

No problem , we are not allowing, we will face the consequences என்பதின் வழியே

கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் திமுக அரசு செய்த ஒரே சாதனை இதுவாக மட்டும் தான் இருக்கும்

தமிழகம் என்றுமே சங்கிகளோடு போரிடும் தமிழகம் சமத்துவத்திலும் , சகோதரத்துவத்திலும் என்றும் வெல்லும்

11 · 2 comments

Like Comment Share

Napa · Follow
4 December 2025 at 11:30

நேற்று திருப்பரங்குன்றத்தில் கலவரநோக்கத்துடன் வந்த சங்கிகூட்டம்

காவல்துறை அதிகாரியிடம்
"இது ஹைகோர்ட் ஆர்டர் சார்" என்று மிரட்டுகின்றனர்.

தமிழக காவல்துறை அதிகாரி பதட்டமில்லாமல் கூறுகிறார்.

"No problem. We are not allowing.
We will face the consequences!"

#தமிழ்நாடு_போராடும்_வெல்லும் — with **ராஜ லிங்கம்** and **9 others**.

26 · 1 comment 1 share

Like Comment Share

மேலும், காவல்துறை அதிகாரி, அப்படி சொல்லும்போது, திருப்பரங்குன்ற மக்கள் காவல்துறை அதிகாரிகளின் பின் நின்று கொண்டு ஆராவரமாக கத்திய காணொளிகளும் இணையம் முழுவதும் வைரல் ஆனது.

**"NO ENTRY"**

இத்தோடு சேர்த்து தமிழக முதல்வர் ஸ்டாலின், அக்டோபரில் பேசிய காணொளி ஒன்றை பரப்ப தொடங்கினர். அதில்,

"தமிழகத்தில் அனைத்து மக்களும் மத நல்லிணக்கத்தோடு, ஒற்றுமையோடும் இருப்பதை பார்த்த பா.ஜ.க.வின் கண்களை அது உறுத்திக் கொண்டிருக்கின்றது. எவ்வளவு அடிமைகளை சேர்த்துகொண்டு அந்தர் பல்டி அடித்தாலும் சரி, தமிழ்நாட்டில் மதவாதத்தை தூண்ட முடியாது. அவர்களின் மதவெறி ஆட்டத்திற்கு இந்த திராவிட மாடல் ஆட்சியில் இடம் கிடையாது. அடக்குமுறைக்கு, ஆதிக்கத் திற்கு, திணிப்புக்கு தமிழ்நட்டில் "NO ENTRY". மொத்தத்தில் தமிழகத்தில் பாஜகவிற்கு "NO ENTRY". என்று பேசியிருந்தார்.

**ஒற்றுமையின் பக்கம் தமிழ்நாட்டு மக்கள்**

இது ஒரு புறமிருக்க, சிறிய யூடியூப் சேனல்கள் முதல், பி.பி.சி வரை, திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றுவது குறித்து, இந்து முன்னணியினர் ஏற்படுத்திய பிரச்சினைகள் குறித்து, அப்பகுதியை சார்ந்த மக்களிடம் கருத்துகளை கேட்டு வெளியிட தொடங்கினர். அது இன்னும் பாசிஸ்டுகளுக்கு இடியாய் விழுந்தது.

**ராஜேஷ் - திருப்பரங்குன்றம் வீதியில் கடை வைத்திருப்பவர்**

144 - தடை உத்தரவு போட்டுவிட்டார்கள். எங்கள் வியாபாரமே போய்விட்டது. 50 ஆயிரம் ரூபாய் வியாபார பொருட்கள் முடங்கி கிடக் கின்றன. என்ன பிரச்சினை என்றே புரியவில்லை. தீர்ப்பும் இன்னும் முடியலனு சொல்றாங்க. மொத்தத்துல எங்களது வியாபாரமே போச்சு.

**மணிகண்டன் - திருப்பரங்குன்றம் பொதுமக்களில் ஒருவர்**

தீபம் மேல ஏத்துனாலும் எங்களுக்கு சந்தோஷம் தான். கடந்த நான்கு வருடங்களா கத்தான், இப்படி தீவிரமாக பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த பகுதியில் இந்து முஸ்லிம், மாமன், மச்சானாகத்தான் பழகிக் கொண்டிருக்கிறோம்.

**அஜ்மல் கான் - திருப்பரங்குன்றம் பொதுமக்களில் ஒருவர்**

இப்போது பிரச்சினையை எழுப்பியவர்கள்


vaigarai velicham official

யாரும் இந்த ஊரை சேர்ந்தவர்கள் இல்லை. எல்லாரும் வெளியூரிலிருந்து வந்திருப்பவர்கள் தான். இங்கு எல்லோரும், மாமன், மச்சான், அண்ணன், தம்பியாகத்தான் இருக்கிறோம். யார், யாரோ வந்து இங்கு பிரச்சினைகளை எழுப்புகின்றார்கள். நன்றாக பழகி கொண்டிருந்தவர்கள் எல்லாம், இப்போது எதிரி போல் பார்க்கும் நிலைமையை ஏற்படுத்தி விட்டார்கள்.

**ஜமால் – திருப்பரங்குன்றம் வீதியில் கடை வைத்திருப்பவர்**

வருடா, வருடம் பேருந்து நிலையத்தின் அருகில் ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள். கலைந்து சென்று விடுவார்கள். ஆனால், இந்த முறை பெரிய அளவில் பிரச்சினை செய்து விட்டார்கள். இந்த முனையிலிருந்து, பேருந்து நிலையம் வரை ஒரே கலவரம், காவல்துறையினருக்கும், அவர்களுக்கும் தள்ளுமுள்ளு தான்.

**பாலாஜி – திருப்பரங்குன்றம் பொதுமக்களில் ஒருவர்**

நான், எனது மனைவி, பிள்ளைகளை அழைத்துகொண்டு கோவிலுக்கு வந்திருந்தேன். இந்த பக்கம் ஒரு நூறு பேர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பின்னர் சாமிகிட்ட(கோவில் அருகில்) சென்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இது சரிபட்டு வராது என்று, நான் என் குடும்பத்தினரை அழைத்து கொண்டு திரும்ப சென்று விட்டேன்.

**தாஸீம் பீவி – திருப்பரங்குன்றம் வீதியில் கடை வைத்திருப்பவர்**

உண்மையில் இங்கே கலவரம் தான் நடந்தது. நாங்கள் பயந்துவிட்டோம். பேரிகார்டையெல்லாம் தள்ளி, சண்டையிட்டு கொண்டனர். நான் கடையெல்லாம் அடைத்துவிட்டு சென்றுவிட்டேன்.

(நன்றி – பி.பி.சி. தமிழ் யூடியூப்)

**மாரிமுத்து – திருப்பரங்குன்றம் பொதுமக்களில் ஒருவர்**

எப்போதும் அங்குதான் கார்த்திகை தீபம் ஏற்றுவார்கள். தர்காவில் கடா வெட்டுவார்கள். இவ்வளவு நாள் எல்லாம் சரியாகத்தான் இருந்தது. திடீரென்று இவர்கள் மாற்றி சொல்லி பிரச்சினை செய்கிறார்கள். சிறுவயதிலிருந்தே தர்காவிற்கு நான் சென்றிருக்கிறேன். இப்போது கால் வலியால் என்னால் அங்கு செல்ல முடியவில்லை. பிள்ளைகளுக்கு உடல் முடியவில்லை என்றால், அங்கு சென்று மந்திரித்து வாங்கி வருவோம். வியாழன் மாலை சென்று, இரவு அங்கு தூங்கி, வெள்ளியன்று திரும்பி வருவோம். இதுநாள் வரைக்கும் எங்களுக்குள் சண்டையே வந்ததில்லை.

**முத்துமாரி – திருப்பரங்குன்றம் பொதுமக்களில் ஒருவர்**

இதுவரைக்கும் எங்களுக்குள் எந்த பிரச்சினையும் வந்ததில்லை. எங்கள் இரு சமூகமும், சம்மந்தம் தான் செய்து கொள்ளவில்லை. மற்றுபடி எல்லோரும் ஒன்றாகத்தான் இருக்கிறோம். மேலே மலையின் மேல் உள்ள, முருகனை தொட்டாலும் அவன் கெட்டான், சிக்கந்தரை தொட்டாலும் அவன் கெட்டான். அந்த இரு தெய்வங்கள் தான் எங்களை காக்கின்றன. இரண்டு தெய்வங்களும் மலையின் மீது இருக்கின்றன என்று சொன்னால் தான், மக்கள் ஒற்றுமையாக இருக்க முடியும். எனக்கு 57 வயது ஆகின்றது. எனது இளம் வயதில், பலமுறை மேலே சென்றிருக்கிறேன். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் வந்ததில்லை. எங்களை பார்த்து சில நேரங்களில், "பாய் வீட்டு ஆட்கள்" என்று சொல்லுவார்கள். இப்போதுதான், இந்த இந்து முன்னணியினர் பிரச்சினையை கிளப்புகின்றனர். நிச்சயமாக மதுரை மக்கள் இதற்கு ஆதரவளிக்க மாட்டார்கள்.

**திருப்பரங்குன்றம் மலையடிவாரத்தில் இருக்கும் தெருவில் வசிப்பவர்கள் கூறும் போது,**

இது முஸ்லிம் தெருதான். நாங்கள் இந்துக்கள் தான், நாங்களெல்லாம் இங்கே ஒற்றுமையாக இல்லையா? எங்கள் வீட்டின் சுவரும், பள்ளிவாசலின் சுவரும் ஒரே சுவர் தான். எங்களுக்குள் என்ன பிரச்சினை வந்துவிட்டது? (இப்படி கூறிக்கொண்டிருக்கும் போதே அருகில் இருந்த ஒரு முஸ்லிம் பெண்ணை காட்டி) இதோ, அது எங்க மாமிதான். அதுக்கு இங்க என்ன பிரச்சினை நடக்கின்றது என்றே தெரியவில்லை. என்று சிரித்துகொண்டே கூறுகிறார் அருணாதேவி.

**அதே தெருவில் இருக்கும் இன்னொரு நபர் கூறுகையில்,**

“மோடி ஆட்சிக்கு வந்தவுடன் தான் இப்படியெல்லாம் நடக்கிறது. சிக்கந்தர் தர்காவில் நானே கடா வெட்டியுள்ளேன். இங்கே யாருக்கும் எந்த பிரச்சினையும் வந்ததில்லை. மாமன், மச்சானாக பழகி கொண்டிருக்கிறோம்.” என்கிறார்.

**அதே தெருவில் வசிக்கும் இன்னொரு வயதான பெண்மணியான பேச்சியம்மா கூறும்போது,**

“அந்த மலையின் மீது சென்று அனைத்து மத மக்களும் அன்னதானம் சாப்பிடுவார்கள். இதுவரைக்கும் நாங்கள் யாரும் அழிச்சாட்டியம் செய்ததில்லை. இவர்கள்தான் இப்போது புதிதாக அழிச்சாட்டியம் செய்கிறார்கள்.” என்கிறார்.

**இன்னொருவர் கூறுகையில்,**

“மேலே காசி வீஸ்வநாதர் கோவிலுக்கும் செல்வோம். அல்லாஹ் தர்காவுக்கும் செல்வோம். பிள்ளைகளுக்கு உடம்பு முடியலனா, தர்காக்கு தான் போவோம். அன்னதானம் சாப்பிடுவோம். எல்லோரும் ஒற்றுமயாகத்தான் இருக்கிறோம். தமிழ்நாட்டின் எந்த மூலையில் தகராறு செய்தாலும், மதுரையில் முடியாது. மதுரை மக்கள் அதற்கு விடமாட்டோம். இங்கு இந்து முஸ்லிம் மாமன், மச்சானாக பழகி கொண்டிருக்கிறோம். (நன்றி - நக்கீரன் யூடியூப்)

**மற்ற நாட்களில் தீபம் ஏற்றுவது வழக்கமில்லை**

இப்படி ஒரு பக்கம் பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்க. பாசிஸ்டுகளுக்கு இன்னொரு பக்கத்திலிருந்து இடி வந்து இறங்கியது. திருப்பரங்குன்றம் பட்டர்கள், கோவில் நிர்வாகத்திற்கு ஒரு அறிக்கையை கொடுத்தனர். அதில்,

“திருக்கோவில் வழக்கு படி, டிசம்பர்3 ஆம் தேதி, மாலை 6 மணிக்கு, திருக்கோவிலுக்குள் வழக்கமாக தீபம் ஏற்றக்கூடிய, உச்சிப் பிள்ளையார் கோவிலில் உள்ள தீபமண்டபத்தில், தீபம் ஏற்றப்பட்டது. மற்ற நாட்களில் மலை மீது தீபம் ஏற்றும் வழக்கம் இல்லை.” என்று ஆணித்தரமாக கூறிவிட்டனர்.


மொத்தமாக, இந்த தீபம் ஏற்றும் நிகழ்வை வைத்து, எப்படியாவது தமிழகத்தை கலவர பூமியாக மாற்றி விடலாம் என்ற திட்டத்தில், களமிறங்கிய இந்துத்துவ பாசிஸ்டுகளுக்கு, தமிழக மக்கள் தங்களின் ஒற்றுமை, மத




நல்லிணக்கம், சகோதரத்துவம் எனும் ஆயுதங்களை கொண்டு, ஓரணியில் நின்றதால், தனித்து விடப்பட்டு கோமாளிகளாக்கப்பட்டனர்.

- தொடரும்

**- Adv. Jasmine Fathima.**



# மயிலேறும் ராவுத்தன்



## முன்னுரை

ரா.சுந்தர்ராமன் தமிழ் மக்களின் முதல் மற்றும் மூத்த கடவுள் முருகனுக்கு திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர் சோலை என அறுபடை வீடுகள் உள்ளன. ஆண்டு தோறும் உலகெங்கும் அமைந்துள்ள முருகன் கோயில்களில் கந்தசஷ்டி, பங்குனி உத்திரம் என இரண்டு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அருணகிரிநாதர் இயற்றிய கந்தர் அலங்காரம், திருப்புகழ் ஆகிய இரு நூல்களும் முருக பக்தர்களிடம் புகழ்பெற்றவை. கந்தர் அலங்காரத்தில் இரண்டு இடங்களில் இன்றையப் தமிழ்ப் பேச்சு வழக்கில் முஸ்லிம்கள் அதிகம் பயன்படுத்தும் 'இராவுத்தன்' (இராவுத்தர்) என்ற அரேபிய வார்த்தையை அருணகிரி நாதர் பயன்படுத்தியிருப்பார்.

இராவுத்தன் (இராவுத்தர்) என்பதற்குக் குதிரை வீரன் என்பது பொருள். இது 'ரவா' 'துதா' என்ற சொற்களிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ரவா என்றால் அரசன், துதா-செய்தியாளன், முற்காலத்தில் அரசனுக்குச் செய்தி கொண்டுவரும் குதிரை வீரன் என்ற அர்த்தத்தில் இச்சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. பின்பு அரேபிய நாட்டிலிருந்து தமிழகத்துக்குக் குதிரைகள் விற்க வந்த இஸ்லாமியர்களைக் குறிப்பதாயிற்று. இன்றும் இஸ்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த பலர் தங்களுடைய பெயரோடு இச்சொல்லை இணைத்துக் கொள்ளும் வழக்கமும் இருந்து வருகிறது.

இதுதவிர முஸ்லிம்களில் ஒரு இனத்தார்க்குரிய சிறப்புப் பெயராகவே இன்றைய நாளில் இச்சொல் கையாளப்பட்டு வருகிறது. இந்த விளிப்பை முருகனுக்குரிய பெயர்களுள் ஒன்றாக, முருகனின் தலை சிறந்த அடியார்களுள் ஒருவரான அருணகிரிநாதர் பயன்படுத்தி நமக்கு வழங்கியுள்ளார்.

முருகன் மீது இனிமையான பண்களைப் பாடிய அருணகிரிநாதர் கி.பி.15-ம் நூற்றாண்டில் விஜயநகர சிற்றரசர் காலத்தில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இஸ்லாமியர்கள் தென்னிந்தியாவில் பரவலாகப் பெருகி ஆங்காங்கே ஆட்சிசெய்து வந்த காலம் அது.

எனவேதான், அன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் சொற்கள் தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் கலந்து வரத் தொடங்கியது. "கற்பக கந்திரு நாடுயர் வாழ்வுறச் சித்தர் விஞ்சையர் மாகர் சபாசு எனக் கட்ட வெங்காடு சூர்கிளைவேர்அற விடும்வேலா" (திருநள்ளாறு பற்றிய திருப்புகழ் பாடலில்)"சுராதி பதிமால் அயனொடு சலாம்இடுசுவாமி மலை வாழும் பெருமானே" (சுவாமிமலை பற்றிய திருப்புகழ் பாடலில்) என்று தம்முடைய திருப்புகழ் பாடல்களில் 'சபாசு'இ 'சலாம்' என்ற வேறுமொழிச் சொற்களைப் பயன்படுத்தியிருப்பார். திருப்புகழில் செந்தமிழின் சிறப்பு சிதையாமல் சந்தம் செறிந்து சிறப்பாக இருக்கும். சைவ வைணவ சமரசப் போக்கும் நோக்கும் அருணகிரி நாதரால் பெரிதும் போற்றப்பட்டன. "காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி" என்பது பழமொழி. வழிபாட்டில் திளைத்து மகிழ்ந்த அருணகிரிநாதர் உள்ளத்தில் இனமொழி வேறுபாட்டைக் காண முடியவில்லை.

எனவேதான், தன்னுடைய வழிபடு கடவுளும் தமிழின் முதல் கடவுளாகிய முருகனையே 'இராவுத்தன்' எனப் பாடிப் புகழ்ந்து, மகிழ்ந்து மனமாறப் போற்றுகிறார். மனிதகுலமனைத்தும் ஒரு குலமாக ஒன்றி வாழ 'மயிலேறும் இராவுத்தன்' எனப் போற்றப்படும் முருகனின் மலரடிப் பாதங்களை வணங்குவோம்.

**ரா. சுந்தரராமன் என்பவர் 2020 ஆண்டு ஜூலை மாதத்தில் தி ஹிந்து தமிழ் திசை இதழில் ஆன்மிக புத்தக மான ஆனந்த ஜோதியில் மயிலேறும் ராவுத்தன் என்ற தலைப்பில் முருகனை குறித்து ஒரு கட்டுரை எழுதி உள்ளார். முருகனை வைத்து தமிழகத்தில் மலம் கலவரம் தூண்ட நினைக்கும் வேளையில் இந்த கட்டுரையை நாமும் மக்களிடையே கொண்டு சேர்ப்பது மிகுந்த பலனளிக்கக் கூடியதாக இருக்கும். இதோ அந்த கட்டுரை.**

*தமிழ் மக்களின் முதல் மற்றும் மூத்த கடவுள் முருகனுக்கு திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை என அறுபடை வீடுகள் உள்ளன. ஆண்டுதோறும் உலகெங்கும் அமைந்துள்ள முருகன் கோயில் களில் கந்தசஷ்டி, பங்குனி உத்திரம் என இரண்டு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அருண கிரிநாதர் இயற்றிய கந்தர் அலங்காரம், திருப்புகழ் ஆகிய இரு நூல்களும் முருக பக்தர்களிடம் புகழ்பெற்றவை.*

*கந்தர் அலங்காரத்தில் இரண்டு இடங்களில் இன்றையப் தமிழ்ப் பேச்சு வழக்கில் முஸ்லிம்கள் அதிகம் பயன்படுத்தும் 'இராவுத்தன்' (இராவுத்தர்) என்ற அரேபிய வார்த்தையை அருணகிரி நாதர் பயன்படுத்தியிருப்பார். இராவுத்தன் (இராவுத்தர்) என்பதற்குக் குதிரை வீரன் என்பது பொருள், இது 'ரவா' 'துதா' என்ற சொற்களிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின் றனர். ரவா என்றால் அரசன், துதா-செய்தியாளன். முற்காலத்தில் அரசனுக்குச் செய்தி கொண்டு வரும் குதிரை வீரன் என்ற அர்த்தத்தில் இச்சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.*

*பின்பு அரேபிய நாட்டிலிருந்து தமிழகத் துக்குக் குதிரைகள் விற்க வந்த இஸ்லாமியர் களைக் குறிப்பதாயிற்று. இன்றும் இஸ்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த பலர் தங்களுடைய பெயரோடு இச்சொல்லை இணைத்துக்கொள் ளும் வழக்கமும் இருந்து வருகிறது. இதுதவிர முஸ்லிம்களில் ஒரு இனத்தார்க்குரிய சிறப்புப் பெயராகவே இன்றைய நாளில் இச்சொல் கையாளப் பட்டு வருகிறது.*

*இந்த விளிப்பை முருகனுக்குரிய பெயர் களுள் ஒன்றாக, முருகனின் தலைசிறந்த அடியார் களுள் ஒருவ ரான அருணகிரிநாதர் பயன்படுத்தி நமக்கு வழங்கியுள்ளார்.*

**“கண்டுண்ட செல்லியர் மெல்லியர்**
**காமக் கலவிக் கள்ளை**
**மொண்டுண் டயர்கினும், வேல்மறவேன்:**
**முது கூளித் திரள்**
**டுண்டுண் டுடுடுடு டூடூ**
**டுடுடுடு டுண்டு டுண்டு**
**டிண்டிண் டெனக்கொட்டி ஆட,**
**வெம்சூர்க் கொன்ற ராவுத்தனே”**

**“படிக்கும் திருப்புகழ் போற்றுவன்:**
**கூற்றுவன் பாசத்தினாற்**
**பிடிக்கும் பொழுது வந்து, அஞ்சல்**
**என்பாய்; பெரும்பாம்பில் நின்று**
**நடிக்கும் பிரான் மருகா! கொடு**
**சூரன் நடுங்கவெற்பை**
**இடிக்கும் கலாபத் தனிமயில்**
**ஏறும் ராவுத்தனே”**

**- கந்தர் அலங்காரம்**

*என்ற இருபாடல்களில் அருணகிரி நாதர் முருகப் பெருமானை 'ராவுத்தன்' எனச் சிறப்பித்துக் குறிப்பிட்டு வழிபட்டுப் பாடியிருப்பது அவரு டைய கலைநிலையையும், சமரச மனப்பான்மை யையும் விளக்குகிறது.*

*முருகன் மீது இனிமையான பண்களைப் பாடிய அருணகிரிநாதர் கி.பி.15-ம் நூற்றாண் டில் விஜயநகர சிற்றரசர் காலத்தில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இஸ்லாமியர்கள் தென்னிந்தியாவில் பரவலாகப் பெருகி ஆங்காங்கே ஆட்சி செய்து வந்த காலம் அது. எனவேதான், அன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் சொற்கள் தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் கலந்து வரத் தொடங் கியது.*

**“கற்பக கந்திரு நாடுயர் வாழ்வுறச்**
**சித்தர் விஞ்சையர் மாகர் சபாசுஎனக்**
**கட்ட வெங்காடு சூர்கிளை**
**வேர்அற விடும்வேலா”**

*(திருநள்ளாறு பற்றிய திருப்புகழ் பாடலில்)*

**“சுராதி பதிமால் அயனொடு சலாம்இடு**
**சுவாமி மலை வாழும் பெருமானே”**

*(சுவாமிமலை பற்றிய திருப்புகழ் பாடலில்)*


vaigarai velicham official

என்று தம்முடைய திருப்புகழ் பாடல்களில் 'சபாசு', 'சலாம்' என்ற வேறுமொழிச் சொற் களைப் பயன்படுத்தியிருப்பார்.

திருப்புகழில் செந்தமிழின் சிறப்பு சிதையாமல் சந்தம் செறிந்து சிறப்பாக இருக்கும். சைவ வைணவ சமரசப் போக்கும் நோக்கும் அருணகிரி நாதரால் பெரிதும் போற்றப்பட்டன. "காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி" என்பது பழமொழி. வழிபாட்டில் திளைத்து மகிழ்ந்த அருணகிரிநாதர் உள்ளத்தில் இனமொழி வேறுபாட்டைக் காண முடியவில்லை.


எனவேதான், தன்னுடைய வழிபடு கடவுளும் தமிழின் முதல் கடவுளாகிய முருகனையே 'இராவுத்தன்' எனப் பாடிப் புகழ்ந்து, மகிழ்ந்து மனமாறப் போற்றுகிறார்.

மனிதகுலமனைத்தும் ஒரு குலமாக ஒன்றி வாழ 'மயிலேறும் இராவுத்தன்' எனப் போற்றப்படும் முருகனின் மலரடிப் பாதங்களை வணங்குவோம். இது தான் அந்த முழு கட்டுரை.

இதில் இருந்து நாம் இரண்டு செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. ஒன்று முஸ்லிமாக வாழ்ந்து அனைத்து மக்களுக்கும் சேவையாற்றி முஸ்லிமாக மரணித்த ஷீரடி சாய்பாபாவை கோயில் கட்டி வணங்கி வருகிறார்கள் இந்தியா முழுவதும். ஈரோடு மாவட்டத்தில் அபயம் தேடிவந்த மக்களை அரவணைத்து தங்க இடமும் தந்து காப்பாற்றிய முத்து ராவுத்தர் என்பவருக்கு கோயில் கட்டி வழிபாடு செய்து வருகிறார்கள்.

இதுபோலவே முஸ்லிமாக வாழ்ந்து அனைவருக்கும் தொண்டு செய்து வாழ்ந்தவரை முருகன் என்று வழிபாடு செய்திருக்க வாய்ப்பும் உண்டு. இரண்டாவது அரபி சொற்களின் பயன்பாடு அதிகம் இருந்திருக்க வேண்டும். அரபி சொற்கள் கலப்பு எப்படி ஏற்பட்டு இருக்கும் என்றால் இந்து முஸ்லிம் மக்கள் அந்த அளவு கலந்து உறவாடி இருக்க வேண்டும். இங்கு இந்த ராவுத்தர்கள் வழிபாட்டிற்கு உரியவர்கள் அல்ல. அந்த ராவுத்தர்களையும் படைத்த அந்த ராவுத்தர்கள் வழிபட்ட ஏக இறைவனை அடையாளம் காட்டுவதும் நம் முன் உள்ள பொறுப்பாகும்.

**– நன்றி: தி ஹிந்து தமிழ் திசை இதழ்**


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குமு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

**தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887**





# இஸ்லாமியருக்கு கோவில் கட்டி கும்பிடும் இந்துக்கள்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அழகிய சிற்றூர் காகம். பச்சை பசேல் என்று செயற்கைகளுக்கு அதிகம் இடம் கொடுக்காமல் இயற்கையாய் அழகாக அந்த ஊர் காட்சியளிக்கிறது. அந்த அழகிய சிற்றூரில் தான் இருக்கிறது அந்த அதிசய கோயில். கோயிலில் என்ன அதிசயம் என்றால் ஊரில் முழுக்க முழுக்க 100 சதவீதம் இந்துக்கள் தான். ஆனால் அவர்கள் கோவில் கட்டியுள்ளதோ ஒரு இஸ்லாமியருக்கு.

சுமார் 600 ஆண்டுகளில் இருந்து ஆயிரம் ஆண்டுகள் இருக்கும் என்று பகுதி மக்கள் சொல்கின்றனர். பல நூறு ஆண்டுகள் முன்பு கன்னிவாடி என்ற ஊரில் கண்ணன் கூட்டம் மக்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்துள்ளனர். வேறொரு கூட்டத்தால் அவர்கள் அங்கே வாழ முடியாத அளவுக்கு ஏதோ ஒரு பிரச்சனை ஏற்படுகிறது. அவர்களிடமிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள அவ்வூர் மக்கள் காகம் கிராமத்தை நோக்கி நகர ஆரம்பிக்கிறார்கள்.

அங்கு முத்து ராவுத்தர் என்ற இஸ்லாமியர் செல்வ செழிப்போடு வணிகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். அவர் அந்தக் கண்ணன் கூட்டத்தாரின் பரிதாப நிலையைக் கண்டு அவர்களுக்கு அடைக்கலம் தருகிறார். தனது நிலத்திலேயே இடமும் தந்து அவர்களை அங்கேயே தங்க வைத்து பாதுகாக்கவும் செய்கிறார். கன்னிவாடியில் வாழ்ந்த கண்ணன் கூட்டத்தார் காகம் கிராமத்தில் முழுவதுமாக தஞ்சம் அடைகிறார்கள். அவர்களை தங்கள் சொந்த உறவுகளாக பாவித்து பாதுகாக்கிறார் முத்து ராவுத்தர். அவர்களின் அனைத்து இன்ப துன்பங்களிலும் இரண்டற கலந்து அவர்கள் முழுவதுமாக பாதுகாக்கிறார்.

இந்நிலையில் அவரும் மனிதன் தானே மனிதனுக்கு மரணம் நிச்சயிக்கப்பட்ட ஒன்றுதானே அவரும் ஒரு நாள் மரணித்து விடுகிறார். மக்களுக்காக பாடுபட்டவர்கள் இறந்த பின்பு அவர்களை குலதெய்வங்களாக மாற்றி விடுவது நமது பகுதிகளில் இருக்கும் ஒரு நடைமுறை. அதுபோலவே கண்ணன் கூட்டத்தார் தன்னை அரவணைத்து பாதுகாத்து அடைக்கலம் தந்து காப்பாற்றிய முத்துராவுத்தரை குல தெய்வமாக கோவில் கட்டி வழிபாடு செய்து கொண்டுள்ளனர். அவரின் நினைவாக அந்த ஊரில் பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைவருக்கும் முத்து ராவுத்தர் என்று தான் பெயர் சூட்டுகின்றனர் பெண் குழந்தைகளுக்கு ராவுத்தம்மாள் ராவுத்தாயி என்று பெயர் சூட்டுகின்றனர்.

இந்த ராவுத்தர் கோயிலில் சிறு சிறு மினாராக்கள் உள்ளது அதை தர்கா என்று தான் அம்மக்கள் நம்மிடம் குறிப்பிட்டனர். கோவிலின் முன்புறம் கதவின் மேல் புறத்தில்



vaigarai velicham official

படுத்த நிலையில் ராவுத்தர் சிலையை செய்து வைத்துள்ளனர். கோவிலில் உட்புறத்தில் மெத்தை போன்ற அமைப்பில் ஒரு சிறிய மேடை கட்டி வைத்து உள்ளனர். கோவில் திருவிழாவின் போது மண்ணால் ராவுத்தர் போன்ற சிலையை செய்து அதில் வைக்கின்றனர். அதற்கு பக்தர்கள் நிறைய பூ மாலைகளையும் போடுகின்றனர். மண்ணால் செய்யப்பட்ட ராவுத்தர் சிலையை யும் அதற்கிடப்பட்ட பூ மாலைகளையும் எடுத்துச் சென்று ஆற்றில் கொட்டுகின்றனர். சென்ற ஆண்டும் இந்த திருவிழாவின் போது இதே போல எடுத்துச் சென்று ஆற்றில் வேறொரு இடத்தில் கொட்டுகின்றனர். அவைகளை ஏற்றி சென்ற வாகனம் ஆற்றில் சிக்கிக் கொள்கிறது. வழக்கமாக கொட்டும் இடத்தில் கொட்டாமல் வேறொரு இடத்தில் கொட்டியது ராவுத்தருக்கு பிடிக்கவில்லை அதனால் தான் இப்படி நடந்து உள்ளது என்று நம்பிக்கை யோடு சொல்கின்றனர். அந்த அளவிற்கு அந்த ராவுத்தரின் மீது இன்றும் அபாரமான பக்திகளை வைத்து உள்ளனர். அவர்கள் ராவுத்தரை இறைவன் என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்கின்றனர்.

கோவிலின் கருவறையில் இரண்டு ராவுத்தர் சிலைகள் உள்ளன. அந்த சிலைகள் அரிய வகை ஒரு மரத்தால் செய்யப்பட்டு உள்ளது. அந்த மரத்தை ஒருவர் மிகுந்த சிரமத்திற்கு இடையே எடுத்து வந்து சிலை செய்ததாக சொல்லப்படுகிறது. அந்த மரத்தை எடுத்து வந்தவரின் பேரன்கள் இன்று ஒருவர் IPS அதிகாரியாகவும் இன்னொருவர் IRS அதிகாரி யாகவும் உள்ளனர். அந்த மரத்தை சிரமத்திற்கு இடையே எடுத்து வந்ததால்தான் இந்த உயரிய பதவிகள் அவர்களுக்கு கிடைத்ததாக நம்புகின்றனர்.

அந்தக் கோவிலின் வளாகத்திலேயே இன்னொரு கோவிலும் உள்ளது. அந்தக் கோவிலில் முத்து ராவுத்தர் அவர்களின் மனைவியை ராவுத்தம்மாள் என்ற பெயரில் வணங்கி வருகின்றனர். அந்த மக்கள் இந்த முத்து ராவுத்தரை எந்த அளவுக்கு நேசிக்கிறார்கள் என்றால் அவருக்கு பிடிக்காத எதையுமே பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் அவர்கள் செய்வது இல்லை. அந்த முத்து ராவுத்தற்கு கருப்பு வண்ணம் பிடிக்காதாம் அதனால் இன்றும் கருப்பை முற்றிலுமாக அந்த மக்கள்







தவிர்த்து விடுகின்றனர் கருப்பு கயிறை கையில் கட்டுவது இல்லை அரைனான் கயிறாகவும்





ஒன்று உள்ளது. அந்தக் கோவிலின் இந்த முத்து ராவுத்தரின் தம்பியையும் குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

மேலும் ஈரோடு அருகே உள்ள காஞ்சி கோவில் என்ற ஊரிலும் இந்த முத்துராவுத்தருக்கு கோயில் கட்டி வழிபட்டு வருகின்றனர் முஸ்லிம்கள் இந்தியாவை ஆட்சி

கருப்பு வண்ணத்தை உபயோகப்படுத்துவதில்லை. எங்களிடம் பேசிய ஒருவர் கருப்பு வண்ணத்தில் வாகனம் ஒன்றை அறியாமல் வாங்கி வந்துள்ளார். வந்த பின்பு தான் கருப்பு முத்து ராவுத்தருக்கு பிடிக்காது என்பது நினைவில் வந்துள்ளது பின்னர் அந்த வாகனத்தை அவர் விற்றுவிட்டார் எவ்வளவு பெரிய நேசம்.

முத்துராவுத்தருக்கு ஆடு கோழி மற்றும் இன்ன பிற உயிர்கள் பலி கொடுப்பது பிடிக்காதாம். அதனால் அந்த கோவிலில் கிடா வெட்டு போன்ற எந்த பலிகளும் கொடுப்பது இல்லை. யாரேனும் தவிர்க்க முடியாமல் கிடா வெட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் கோவிலில் இருந்து சற்று தள்ளி சென்று பலி கொடுக்கின்றனர். அந்த மக்கள் தங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால் அதை நீக்க வேண்டி முத்து ராவுத்தரிடம் வேண்டுதல் செய்கின்றனர். அந்த வேண்டுதலை சிறு சிறு சிலைகளாக செய்து அந்த கோவிலுக்கு எதிர் புறத்தில் வைத்துள்ளனர். அந்த சிலைகளில் குழந்தைகளை கையில் ஏந்தி கொண்டும் புத்தகங்களை ஏந்தி கொண்டும் அவர்கள் என்ன என்ன வேண்டுதல் எல்லாம் செய்தார்களோ அந்தந்த வடிவங்களில் செய்து வைத்துள்ளனர்.

அந்தக் கண்ணன் கூட்டத்தார் தமிழகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகின்றனர் 747 குடும்பங்கள் அங்கு வந்து வழிபாடு செய்வதிலும் திருவிழா நடத்துவதையும் வழமையாக கொண்டுள்ளனர். இந்தக் கோவிலில் இருந்து சிறிது தள்ளி திரௌபதி அம்மன் கோவில்



செய்தபோது இந்துக்களை கொடுமைப்படுத்தினார்கள். கட்டாய மதமாற்றம் செய்தார்கள் என்று திட்டமிட்டு பரப்பப்படும் வெறுப்பு பிரச்சாரத்தை சம்மட்டியால் அடித்து உடைக்கிறது இந்தக் கோவில்.

தன்னிடம் அடைக்கலம் தேடி வந்தவர்களை கொடுமைப்படுத்தவில்லை. கட்டாய மத மாற்றம் செய்யவில்லை என்பது அவர்கள் இன்றும் இந்துக்களாக வாழ்ந்து கொண்டிருப்பதில் இருந்து தெரிகிறது. இதுபோன்ற ஒரு ஒற்றுமை அடையாளங்கள் இந்தியா முழுக்க இருக்கத்தான் செய்யும். அவைகளை தோண்டி எடுத்து மக்களிடையே வெளிச்சம் போட்டு காட்டுவதுதான் இந்தியா ஒற்றுமைக்கு வழிவகுக்கும். இது போன்ற வரலாறுகள் வட மாநிலங்களில் அதிகம் நிறைந்து இருக்கும். அவைகளை மீட்டு எடுத்தால் இந்தியா மதவெறியிலிருந்து விலகி அமைதி பூங்காவாக திகழும்.


vaigarai velicham official




# கிறிஸ்துமஸ் சமயங்களில் இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த தாக்குதல்கள்

கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 25 அன்று இயேசு பிறந்ததாக சொல்லி விமர்சையாக கிறிஸ்துமஸ் கொண்டாடி வருகிறார்கள். அதுபோலவே 2025ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்றும் இந்தியா முழுவதும் விமர்சையாக கிறிஸ்துமஸை கொண்டாடினார்கள். அதில் எப்போதும் இல்லாத வகையில் இந்த வருடம் கிறிஸ்தவர்களுக்கு அதிக இடையூறுகள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் ஏற்படுத்தப் பட்டன. பல இடங்களில் சங்க பரிவார் கும்பல்களால் மோசமாக தாக்குதலுக்கு உள்ளாக் கப்பட்டனர்கிறிஸ்தவர்கள். டெல்லியில்கிறிஸ்து மஸ் பாடல்களை பாடி சென்ற குழந்தைகளை பஜ்ரங் தள் அமைப்பினர் மிரட்டி உள்ளனர்.

ஒரிசாவில் சாலையோரம் கிறிஸ்துமஸ் பொம்மைகள் தொப்பிகள் போன்றவற்றை வியாபாரம் செய்து கொண்டிருந்த வியாபாரியை காரில் வந்த ஒரு சங்பரிவாரத்தை சேர்ந்தவர் இது இந்துராஷ்டிரம் என்று பகிரங்கமாக மிரட்டுகிறார். இங்கே கிறிஸ்துமஸ் பொருட் களை விற்கக் கூடாது இந்து பண்டிகை சார்ந்த பொருட்களை தான் விற்க வேண்டும் என்று மிரட்டுகிறார். மத்திய பிரதேசத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாடிக் கொண்டிருந்த மாற்றுத்திறனாளி பெண்ணை பாஜக பிரமுகர் ஒருவர் தாக்கி அவரது குறையை இழிவு படுத்தியும் மதத்தோடு தொடர்பு படுத்தியும் பேசியுள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் கங்கை நதிக் கரையில் ஹரித்துவாரில் உள்ள அரசு ஹோட் டல்களில் திட்டமிடப்பட்டிருந்த கிறிஸ்மஸ் விழாக்களை சங்கப் பரிவாளர்களின் மிரட்டலால் ரத்து செய்யப்பட்டன. சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் கிறிஸ்துமஸ் விழாவிற்காக செய்யப் பட்டிருந்த அலங்காரங்களை சங்பரிவார கும்பல்கள் அடித்து நொறுக்கியது.

வடமாநிலங்களில் தான் இவ்வாறு என்றால் நமது அண்டை மாநிலமான கேரளத்தில் பாலக்காட்டில் கிறிஸ்துமஸ் பாடல்களை பாடி சென்ற சிறுவர்கள் மீது ஆர்.எஸ்.எஸ் தாக்குதல் நடத்தி உள்ளது. இது குறித்து கேரள முதல மைச்சர் பிணராயி விஜயன் அவர்கள் மதச் சார்பின்மைக்கு விடப்பட்டுள்ள இந்த சவால் களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது வன்முறையை தூண்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்து உள்ளார்.

அதே கிறிஸ்துமஸ் தினத்தன்று ஒரு கிறிஸ்துவ குடும்பமே கட்டாயமாக இந்துவாக மதம் மாற்றப்பட்டுள்ள சம்பவம் நடந்துள்ளது. சத்தீஸ்கர் மாநிலம் தம் தரி மாவட்டத்தில் உள்ள போராய் கிராமத்தில் 65 வயதான புனிரோ பாய் சாகு என்ற கிறிஸ்தவர் இறந்துவிட்டார். அவரது உடலை அடக்கம் செய்ய விடவில்லை



சங்க பரிவாரத்தனர்.

மூன்று நாட்களுக்குப் பின் அவரது குடும்பத்தினர் கட்டாயமாக இந்து மதத்திற்கு மாற்றப்பட்டு சடங்கு சம்பிரதாயங்கள் செய்யப்பட்டு அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. காவல்துறையினரின் முன்னிலையில் அவரது குடும்பத்தினர் இந்து அமைப்புகளிடம் மன்னிப்பு கேட்க வைக்கப்பட்டனர். மேலும் எக்காலத்திலும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற மாட்டோம் கிறிஸ்துவ பாதிரிகளிடம் தொடர்பு வைக்க மாட்டோம் கிறிஸ்தவ மதத்தை பின்பற்ற மாட்டோம் என்று கட்டாயப்படுத்தி காவல் துறை முன்னிலையில் எழுதி வாங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல சம்பவங்கள் சத்தீஸ்கர் மாநிலத்தில் நடந்து வருவதாக சொல்லப்படுகிறது. சங்பரிவாரத்தினர் முஸ்லிம்களை மட்டும் தான் குறி வைக்கின்றனர் என்று மற்ற சமூகங்கள் கண்டும் காணாமல் இருக்கின்றன அது அனைவருக்கும் தான் இழப்பு. முதலில் முஸ்லிம்கள் என்று இருந்தாலும் அடுத்ததாக கிறிஸ்தவர்கள் தலித்துகள் பௌத்தர்கள் சீக்கியர்கள் பார்சிகள் இடைநிலை ஜாதிகள் என்று அவர்கள் பட்டியல் நீளம் அதை அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணைந்து முறியடிப்பது அத்யாவசிய கடமையாகும். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கட்டாய மதமாற்றம் செய்தனர் என்று பொய் பிரச்சாரம் செய்து வரும் சங்கப் பரிவாரம் இப்போது கட்டாயம மதமாற்றம் செய்து வருகிறது.

ஆசை காட்டியோ அச்சுறுத்தியோ மத மாற்றம் செய்ய இந்தியாவில் எந்தப் பகுதியிலும் அனுமதி இல்லை. ஆனால் சங்கபரிவார் அதை செய்து கொண்டிருக்கிறது. இதை சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள காவல்துறையோ நீதிமன்றமோ அரசோ அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பது யாவரும் அறிந்ததே. மக்கள் நலனை விரும்பும் அனைவரும் ஒன்றிணைந்து இவர்களை வீழ்த்துவது இப்போதைய கடமை யாக இருந்துகொண்டு இருக்கிறது.



நீதிபதி பி. குலாம் முஹம்மது அவர்களுக்கு வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் 24.12.2025 அன்று நேரில் சந்தித்து இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் நூல் வழங்கிய போது, உடன் சீர்காழி தாஹா, நிடூர் அப்துல் ரவூப்



vaigarai velicham official

# எஸ்.எம். முஷ்ரிப் அவர்கள் தலைமை நீதிபதிக்கு எழுதிய கடிதம்

அனுப்புநர்,

**எஸ்.எம். முஷ்ரிப்,** IPS (Rtd).
101, அமித் ஆனந்த், மாடர்ன் கல்லூரி சாலை அருகில்,
சிவாஜி நகர், புனே - 411005.

பெறுநர்,

மாண்புமிகு **தலைமை நீதிபதி,**
இந்திய உச்சநீதிமன்றம், டெல்லி.

பொருள்: 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கின் மேல்முறையீட்டை விசாரிக்க மும்பை உயர் நீதிமன்றத்தில் ஒரு சிறப்பு அமர்வை அமைக்கக் கோருதல் தொடர்பாக.
(குற்றவியல் மேல்முறையீடு எண். (stamp) 17975 / 2025).

ஐயா,

சமீபகாலமாக, இந்தியாவில் நாம் மிக மோசமான பயங்கரவாதத்தை அனுபவித்து வருகிறோம். இதை 'மிக மோசமானது' என்று நாங்கள் குறிப்பிடுவதற்கு காரணம், இது நாட்டின் நீதித்துறையையே அச்சுறுத்துகிறது. சமீபகாலத்தில் குண்டுவெடிப்பு வழக்குகள் தொடர்பாக வழங்கப்பட்ட சில நீதிமன்றத் தீர்ப்புகளை மட்டும் நாம் ஆய்வு செய்தால், இந்த உண்மை உறுதியாகும்.

RSS, அபிநவ் பாரத், பஜ்ரங் தளம், ஜெய் வந்தே மாதரம் போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளில், அவர்களுக்கு எதிராக மறுக்க முடியாத மற்றும் அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் இருந்தபோதிலும், அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மெக்கா மஸ்ஜித் (ஹைதராபாத்), சம்ஜௌதா எக்ஸ்பிரஸ், நந்தேத், பர்பானி, ஜால்னா, பூர்ணா போன்ற குண்டுவெடிப்பு வழக்குகள் இந்த வகையைச் சேர்ந்தவை. மறுபுறம், முஸ்லிம் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட மற்றும் வெறும் கட்டாயப்படுத்தப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஜோடிக்கப்பட்ட கைப்பற்றல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

2006 மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கு (அமர்வு நீதிமன்றத் தீர்ப்பு), ஜெர்மன் பேக்கரி (புனே) வழக்கு, ஜெய்ப்பூர் வழக்கு, அகமதாபாத் வழக்கு, தில்சுக்நகர் (ஹைதராபாத்) வழக்கு போன்றவை இத்தகையவை.

சமீபத்தில் விடுவிக்கப்பட்ட வழக்குகளின் பட்டியலில் நான், 2008 மாலேகான் வழக்கைச் சேர்க்கவில்லை, ஏனெனில் இது அனைத்து விதத்திலும் ஒரு தனித்துவமான வழக்கு. இந்த வழக்கில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளும் விடுவிக்கப்பட்டமையானது, ஒரு குண்டுவெடிப்பு வழக்கின் தீர்ப்பு மட்டுமல்ல, அது ஹேமந்த் கர்காரேவின் இரண்டாவது கொலையாகும்.

26/11 மும்பை தாக்குதலைத் திட்டமிட்டு அனுமதித்த மற்றும் அதில் ஹேமந்த் கர்கரேவை வஞ்சகமாகக் கொன்ற சதிகாரர்கள், கர்கரேவின் கொலையோடு திருப்தி அடையவில்லை. ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரை 2008 மாலேகான் வழக்கின்

வடிவில் கர்கரே இன்னும் உயிரோடு இருந்தார். அவரை முழுமையாகக் கொல்ல அந்த வழக்கைப் புதைக்க வேண்டியிருந்தது; இல்லையெனில் பிராமிணிஸ்டுகளின் நாடு தழுவிய தேசவிரோதச் சதி அம்பலமாகிவிடும். கர்கரேவின் பிம்பத்திலிருந்து விடுபட, மாலேகான் வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் இருப்பதையும், அந்த வழக்கு மேலும் தொடராமல் இருப்பதையும் பிராமணிஸ்டுகள் உறுதி செய்ய வேண்டியிருந்தது.

புலனாய்வு செய்யப்பட்டு, அதன் தர்க்கரீதியான முடிவுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். இந்த நோக்கத்தை அடைய அவர்கள் தங்கள் வசம் இருந்த அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்தினர். ஆனால் கர்கரே மிக நுணுக்கமாகவும் முறையாகவும் புலனாய்வு செய்திருந்ததால், அது அவர்களுக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை.

கர்கரே பல அறிவியல் மற்றும் இதர ஆதாரங்களை ஆவணப்படுத்தியிருந்தாலும், இந்த வழக்கு அதன் தர்க்கரீதியான முடிவை எட்டுவதற்கு அவர் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. ஆனால், அவர் இந்தப் பணியை முடிப்பதற்குள், சதியாளர்களால் கொல்லப்பட்டார். அவர் இறந்த சுமார் இரண்டு மாதங்களுக்குப் பிறகு, கர்கரே தனது வாழ்நாளில் சேகரித்த ஆதாரங்களின் அடிப்படையில் மகாராஷ்டிரா பயங்கரவாத எதிர்ப்புப் படை (ATS) நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தது. முக்கியமான ஆதாரங்கள் அனைத்தும் ஏற்கனவே பொதுவெளியில் இருந்ததால், ATS அமைப்பால் எந்தவொரு முக்கிய உண்மையையும் மறைக்க முடியவில்லை.

எனவே, புலனாய்வு முழுமையடையாமல் இருந்தபோதிலும், ATS நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை பெருமளவு சரியாக இருந்தது. ஆனால், அந்த குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டபடி, தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து (FSL) பெற்ற ஏராளமான ஆவணங்களின் அடிப்படையில் ATS மேல் விசாரணையை மேற்கொள்ளவில்லை. இவ்வாறு பிராமணீய சதியாளர்கள் வழக்கின், மேல் விசாரணையை முடக்குவதில் வெற்றி பெற்றனர்.

ATS தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் மிகவும் உறுதியான ஆதாரங்களாக இருந்தது சதியாளர்களின் கூட்டங்களின் வீடியோக்கள், ஆடியோக்கள் மற்றும் அவற்றின் எழுத்துப்பரிமாற்றங்கள் (Transcripts) ஆகும். குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து முக்கியமான கூட்டங்கள்:

1) 11/12 ஏப்ரல் 2008 அன்று போபாலில் நடந்த கூட்டம்.

2) 11 ஜூன் 2008 அன்று இந்தூரில் நடந்த கூட்டம்.

3) ஜூலை 2008 முதல் வாரத்தில் இந்தூரில் நடந்த கூட்டம்.

4) 3 ஆகஸ்ட் 2008 அன்று உஜ்ஜைனியில் நடந்த கூட்டம்.

5) 25/26 ஜனவரி 2008 அன்று ஃபரிதாபாத்தில் நடந்த கூட்டம்.

A) நான்கு கூட்டங்களின் வீடியோக்கள் / ஆடியோக்கள் மாலேகான் குண்டுவெடிப்புச் சதியை நிரூபித்தன.

இந்தக் கூட்டங்களில் முதல் நான்கு கூட்டங்கள் மகாராஷ்டிராவின் மாலேகானில் குண்டுவெடிப்பு நடத்துவதற்கான சதி தொடர்பானவை. அந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றிருந்தன. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### ஏப்ரல் 2008 போபால் கூட்டம்

இக்கூட்டத்தில் பிரக்யா சிங் தாகூர் (A-1), ரமேஷ் உபாத்யாய் (A-4), சமீர் குல்கர்னி (A-5),

பிரசாத் புரோஹித் (A-9), சுதாகர் திவேதி என்கிற தயானந்த் பாண்டே (A-10), சுதாகர் சதுர்வேதி (A-11) மற்றும் சிலர் கலந்துகொண்டனர். மகாராஷ்டிராவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நகரமான மாலேகானில் குண்டுவெடிப்பு நடத்த அவர்கள் ஒருமனதாக முடிவு செய்தனர். லெப்டினன்ட் கர்னல் புரோஹித் இதற்கான வெடிபொருட்களை வழங்க முன்வந்தார், பிரக்யா சிங் தாகூர் இந்த காரியத்திற்காக ஆட்களை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

### ஜூன் 2008 இந்தூர் கூட்டம்

இந்தக் கூட்டம் இந்தூரில் உள்ள சர்க்யூட் ஹவுஸில் (Circuit House) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரக்யா சிங் தாகூர், ராமச்சந்திர கல்சங்க்ரா மற்றும் சந்தீப் டாங்கே ஆகிய இருவரையும் சுதாகர் திவேதிக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் இருவரும் தனது நம்பிக்கைக்குரியவர்கள் என்று அவர் கூறினார்.

### ஜூலை 2008 இந்தூர் கூட்டம்

லெப்டினன்ட் கர்னல் புரோஹித்திடமிருந்து தனக்கு இன்னும் வெடிபொருட்கள் கிடைக்கவில்லை என்று பிரக்யா சிங் தாகூர் புகார் தெரிவித்தார். ராம்கி கல்சங்க்ரா மற்றும் சந்தீப் டாங்கே ஆகியோரிடம் வெடிபொருட்களை வழங்குமாறு புரோஹித்திற்கு உத்தரவிடுமாறு அவர் சுதாகர் திவேதியைக் கேட்டுக்கொண்டார்.

### ஆகஸ்ட் 2008 உஜ்ஜைனி கூட்டம்

பிரசாத் புரோஹித் தனது நம்பிக்கைக்குரிய ராகேஷ் தவாடேவை (A7) தன்னுடன் அழைத்து வந்திருந்தார். அவர் வெடிபொருட்களில் பயிற்சி பெற்ற நிபுணர் ஆவார். இக்கூட்டத்தில் அஜய் ரஹிர்கரும் (A6) கலந்து கொண்டார். புனேவில் ராமச்சந்திர கல்சங்க்ரா மற்றும் சந்தீப் டாங்கே ஆகியோரிடம் வெடிபொருட்களை வழங்குமாறு ராகேஷ் தவாடேவிற்கு பிரசாத் புரோஹித் உத்தரவிட்டார். (கல்சங்க்ரா மற்றும் டாங்கே புனேவிற்குச் சென்று 9 ஆகஸ்ட் 2008 முதல் 11 ஆகஸ்ட் 2008 வரை அங்கேயே தங்கி வெடிபொருட்களைப் பெற்றனர்).

### ATS-இன் குற்றப்பத்திரிகை இவ்வாறு கூறுகிறது

“குற்றம் சாட்டப்பட்ட சுதாகர் உதயாபன் தார் திவேதியிடமிருந்து (A10) கைப் பற்றப்பட்ட மடிக்கணினிகளில், ஆடியோ மற்றும் வீடியோ கோப்புகளின் வடிவில் ஆதாரங்கள் இருந்தன. அவை ஹார்ட் டிஸ்க்கிலிருந்து (Hard disc) எடுக்கப்பட்டு அதன் நகலாக (Mirror image) வழங்கப்பட்டன. இந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளால் ஃபரிதாபாத், உஜ்ஜைனி, போபால் போன்ற பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட பல்வேறு கூட்டங்களின் முழுப் பதிவுகளும் இந்த ஆடியோ மற்றும் வீடியோ கோப்புகளில் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.”

### குற்றப்பத்திரிகை மேலும் கூறுகிறது

“விசாரணை இன்னும் நடைபெற்று வருகிறது. குரல் மாதிரிகள் மற்றும் மின்னணு டைமர்கள் (Electronic timers) தொடர்பான தடய அறிவியல் ஆய்வக (FSL) அறிக்கைகள் இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றன. இருப்பினும், விசாரணையின் போது கைப்பற்றப்பட்ட மடிக்கணினிகள், மொபைல் போன்கள், பென் டிரைவ்கள் ஆகியவற்றின் உள்ளடக்கங்களை பகுப்பாய்வு செய்த அறிக்கை 17-1-2009 அன்று மும்பை FSL-லிருந்து பெறப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட சுதாகர் தார் திவேதியின் (A10) மடிக்கணினியின் ஹார்ட் டிஸ்க்கிலிருந்து FSL-ஆல் எடுக்கப்பட்ட சில ஆடியோ டேப்களின் எழுத்துப் பிரதிகள் (Transcripts) தயாரிக்கப்பட்டு குற்றப்பத்திரிகையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.”

மேற்கூறிய உண்மைகளிலிருந்து, அபிநவ் பாரத் அமைப்பின் பல்வேறு கூட்டங்களின் வீடியோ மற்றும் ஆடியோ பதிவுகள் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான சுதாகர் தார் திவேதியால் (A10) செய்யப்பட்டன என்பதும், அவை அவரிடமிருந்து மீட்கப்பட்ட மடிக்கணினிகளில் கண்டறியப்பட்டன என்பதும் தெளிவாகிறது. மிக முக்கியமாக, அவை தடய அறிவியல் ஆய்வகத்தால் (FSL) மீட்கப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மேலும், லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோஹித், மேஜர் (ஓய்வு) ரமேஷ் உபாத்யாய் மற்றும் சுதாகர் தார் திவேதி என்கிற தயானந்த் பாண்டே ஆகியோரின் குரல் மாதிரிகள் குறித்த FSL அறிக்கைகளும் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றிருந்தன. அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்யப்பட்ட இந்த நான்கு கூட்டங்களின் உள்ளடக்கங்களும், சில குற்றவாளிகளின் குரல் மாதிரி அறிக்கைகளும் 2008 மாலேகான் குண்டுவெடிப்புச் சதியை நிரூபிக்க போதுமானவை.

ஆடியோக்கள் மற்றும் வீடியோக்கள் சேதமடைந்த நிலையில் இருந்தன, எனவே அவற்றை இயக்க முடியவில்லை என்று நீதிமன்றம் கூறுவது ஒரு நொண்டிச் சாக்காகும். ATS தங்களுக்கு வழங்கிய ஹார்ட் டிஸ்க்குகளின் நகல்களை (Mirror images) சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் FSL-க்கு உத்தரவிட்டிருக்கலாம் அல்லது தடய அறிவியல் ஆய்வகத்தால் (FSL) தயாரிக்கப்பட்டு குற்றப்பத்திரிகையுடன் இணைக்கப்பட்ட ஆடியோ மற்றும் வீடியோக்களின் எழுத்துப் பிரதிகளை (Transcripts) நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

B) ஃபரிதாபாத் கூட்டம் ‘அபிநவ் பாரத்’ அமைப்பின் தேசவிரோத நடவடிக்கைகளை நிரூபித்தது ஜனவரி 2008–ல் ஹரியானா மாநிலம் ஃபரிதாபாத்தில் நடைபெற்ற அபிநவ் பாரத் அமைப்பின் கூட்டம் மிகவும் முக்கியமானதாகும். இது குறிப்பாக மாலேகான் குண்டுவெடிப்பு பற்றியது மட்டுமே அல்ல என்றாலும், இது அந்த அமைப்பின் ஒட்டுமொத்த சதியையும் உள்ளடக்கி, “ஆர்யவர்த் ஹிந்து ராஷ்ட்ரா” (பிராமண ராஷ்ட்ரா) அமைப்பதற்கான செயல்திட்டத்தை வகுத்தது.

**அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகள்:**

1) இந்திய அரசியலமைப்பைத் தகர்ப்பது.

2) அரசியலமைப்பால் நிறுவப்பட்ட ஜனநாயக அரசாங்கத்தைப் பதவியிறக்குவது.

வேதங்கள் மற்றும் ஸ்மிருதிகளின் அடிப்படையிலான அரசியலமைப்புடனும், தனித்துவமான காவிக்கொடியுடனும் ‘ஆர்யவர்த்த ஹிந்து ராஷ்ட்ரா’வை அமைப்பது.

ஹிந்து ராஷ்ட்ராவை அமைப்பதற்கு நேபாளம், இஸ்ரேல் போன்ற வெளிநாடுகள் மற்றும் நாகாலாந்தின் கிளர்ச்சிக் குழுக்களின் உதவியைப் பெறுவது.

வெளிநாட்டில் ஒரு அரசாங்கத்தை (Government in exile) அமைத்து, இப்பிரச்சினையை சர்வதேச தளத்திற்குக் கொண்டு செல்வது.

ஹைதராபாத்தின் மெக்கா மஸ்ஜித் மற்றும் நாட்டின் பிற இடங்களில் செய்தது போலத் தொடர்ந்து குண்டுவெடிப்புகளை நடத்துவது; இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது சீக்கியர்கள் தாக்கப்பட்டதைப் போல, ஹிந்துக்கள் ஆவேசமடைந்து முஸ்லிம்களைத் தாக்கத் தொடங்கும் நிலையை உருவாக்குவது.

பல்வேறு அரசியல், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளில் ஆர்.எஸ்.எஸ் (RSS) ஆட்களை ஊடுருவச் செய்வது.

ஹிந்து ராஷ்ட்ரா அமையும் பாதையில் குறுக்கே வருபவர் யாராக இருந்தாலும்

அவரைக் கொல்வது. (வெளிப்படையாகச் சொன்னால், இந்த முடிவின் அடிப்படை யிலேயே ஹேமந்த் கர்கரே கொல்லப்பட்டார்).

அந்தக் கூட்டத்தில் பணியில் இருந்த அல்லது ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் கூறிய சில கருத்துகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

பணியில் இருந்த ராணுவ அதிகாரி லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோஹித் கூறுகையில்:

"நாங்கள் அரசியலமைப்புக்கு எதிராகப் போரிடுவோம், தேசத்திற்கு எதிராகப் போரிடுவோம்; இந்த அரசியலமைப்பு எங்களுடையது அல்ல. இந்த அரசியலமைப்பை ஏற்க வேண்டிய அவசியமில்லை. இதைத் தகர்ப்பது ஒன்றே வழி."

**ஓய்வு பெற்ற ராணுவ மேஜர் ரமேஷ் உபாத்யாயா கூறுகையில்:**

"இந்த அரசியலமைப்பு எங்களுக்குப் பொருந்தாது, இதை நாங்கள் ஏற்க மாட்டோம்; மற்றொரு அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்; அப்போது ஹிந்து ராஷ்ட்ரா நிறுவப்படும்."

இந்தக் கூட்டத்தின் பதிவுகள் குற்றப்பத்திரிகையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டன. அதன் எழுத்துப் பிரதியும் (Transcript) குற்றப்பத்திரிகையின் தொகுதி-III B-ஆக இணைக்கப்பட்டது. அந்த எழுத்துப் பிரதியின் முக்கியமான அம்சங்கள் இந்த மனுவுடன் இணைப்பு I-ஆக (Annexure I) இணைக்கப்பட்டுள்ளன.

கூட்டத்தின் பதிவுகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, தடய அறிவியல் ஆய்வ கத்தால் (FSL) எடுக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட அதன் எழுத்துப் பிரதிகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கும்போது, அதை ஏற்காமல் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்ற ஆதாரங்களான குற்றவாளிகளின் உரையாடல் பதிவுகள், RDX தொடர்பான தடய அறிவியல் ஆய்வக அறிக்கை போன்றவை அறிவியல் மற்றும் டிஜிட்டல் அளவுகோல்களின் அடிப்படையில் சோதிக்கப்பட்டவை என்பதால் அவை சமமான நம்பகத்தன்மை கொண்டவை. ஆனால் ஆச்சரியப்படும் விதமாக, விசாரணை நீதிமன்றம் அனைத்து அறிவியல் பூர்வமான மற்றும் மறுக்க முடியாத ஆதாரங்களையும் அற்பமான காரணங்களைக் கூறி நிராகரித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்துள்ளது.

2002–ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் நடந்த குண்டுவெடிப்பு வழக்குகளில், 2008 மாலேகான் வழக்குதான் அறிவியல், டிஜிட்டல் மற்றும் பிற மறுக்க முடியாத ஆதாரங் களின் அடிப்படையில் அமைந்த முதல் வழக்காகும். இந்த ஆதாரங்களில் சதியாளர் களின் கூட்டங்களின் வீடியோக்கள் மற்றும் ஆடியோக்கள், குற்றவாளிகளின் மொபைல் உரையாடல் பதிவுகள், வீடியோ, ஆடியோ மற்றும் மொபைல்கள் குறித்த தடய அறிவியல் அறிக்கைகள், குற்றஞ்சார்ந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டது போன்றவை அடங்கும்.

இந்த வழக்கு ஹேமந்த் கர்காரேவின் குழுவினரால் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் புலனாய்வு செய்யப்பட்டது. முக்கியமான ஆதாரங்கள் அன்றாடம் ஊடகங்களுடனும் பொதுமக்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இவ்வாறு, கிட்டத்தட்ட அனைத்து ஆதாரங்களும் பொதுவெளியில் இருந்ததால், கடந்த 16 ஆண்டுகளாக முதன்மை ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் பிற பொதுத் தளங்களில் இது விரிவாக விவாதிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. பல்வேறு தரப்பினரிடையே அலசி ஆராயப்பட்ட பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்பதில் மக்கள் உறுதியாக இருந்தனர், அதற்கு தகுந்த காரணங்களும் இருந்தன.

எனவே, இந்த வழக்கில் நீதிமன்றத்தின் எதிர்மறையான தீர்ப்பு அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்தத் தீர்ப்பின் மூலம் நீதித்துறை தனது நம்பகத்தன்மையை இழந்துவிட்டது.

சட்டப்படி, இந்தத் தீர்ப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதுதான் தீர்வாகும். மேல்முறையீடு செய்யும் விவகாரத்தில் மாநில அரசு தயக்கம் காட்டி வருகிறது. இருப்பினும், பாதிக்கப்பட்ட ஆறு நபர்களின் இரத்த உறவுகள் மும்பை சிறப்பு MCOCA நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக மும்பை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர். (குற்றவியல் மேல்முறையீடு எண். (stamp) 17975 / 2025 நிசார் அகமது சையத் பிலால் மற்றும் பலர் எதிர் பிரக்யா சிங் தாகூர் மற்றும் NIA, மகாராஷ்டிரா மாநிலம் உள்ளிட்ட பிறர்).

இந்த மனுவில் நான் குறிப்பிட்டுள்ள உண்மைகளைத் தவிர, லெப்டினன்ட் கர்னல் புரோஹித் (A4) தனது மேலதிகாரிகளின் அனுமதியின்றி அபிநவ் பாரத் கூட்டங்களில் கலந்து கொண்டார் என்ற மற்றொரு முக்கியமான உண்மையை இந்த மேல்முறையீடு சுட்டிக்காட்டியுள்ளது. அந்த மேல்முறையீட்டில், “சதிக் கூட்டங்களில் அதிகாரப்பூர்வமாக கலந்துகொண்டதாக A9 (புரோஹித்) ஒப்புக்கொண்டது அத்தகைய கூட்டங்கள் நடந்ததை நிரூபித்தது, ஆனால் நீதிமன்றம் இந்த முக்கியமான ஆதாரத்தைப் பாராட்டத் தவறிவிட்டது.

மேலும், A9 பல தரப்பு சாட்சிகளை விசாரித்தார், அவர்கள் A9 சதிக் கூட்டங்களில் கலந்துகொண்டு தகவல்களைச் சேகரித்ததாக சத்தியப்பிரமாணம் செய்து வாக்குமூலம் அளித்தனர், என்று கூறப்பட்டுள்ளது. ஆதாரங்களைச் சேகரித்ததாகவும் அவர்கள் கூறினர். ஆனால், சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அவரது மேலதிகாரிகளில் ஒருவர் கூட, A9 அவர்களுக்கு அறிக்கைகளை அனுப்பியதாகத் தெரிவிக்கவில்லை.

இதன் மூலம், A9 தனது மேலதிகாரிகளால் அதிகாரப்பூர்வப் பணிக்காக அக்கூட்டங்களுக்கு அனுப்பப்படவில்லை என்பதும், அக்கூட்டங்கள் குறித்து அவர் மேலதிகாரிகளுக்கு எந்த அறிக்கையும் அனுப்பவில்லை என்பதும் விசாரணை நீதிமன்றத்தின் முன் தெரியவந்துள்ளது. மதிப்புக்குரிய சிறப்பு நீதிபதி அவர்கள், A9 (பிரசாத் புரோஹித்) அளித்த இந்த ஒப்புதலைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். இந்த ஒப்புதல் ஒன்றே அனைத்துக் குற்றவாளிகளையும் தண்டிக்க போதுமானதாக இருந்தது.

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் உள்ள இதுபோன்ற பல பலவீனங்களை இந்த மேல்முறையீடு சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுவாக, உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீடுகள் விசாரணைக்கு வர 8 முதல் 10 ஆண்டுகள் வரை ஆகும். ஆனால் இது ஒரு சாதாரண வழக்கு அல்ல. இது ஒரு சிறப்பு வழக்கு; முன்னரே குறிப்பிட்டபடி, இது அனைத்துத் தளங்களிலும் விரிவாக விவாதிக்கப்பட்டு, இந்த நாட்டின் குடிமக்கள் இது குறித்து ஒரு தெளிவான கருத்தைக் கொண்டுள்ளனர். எனவே, இந்த எதிர்மறையான தீர்ப்பின் மூலம் நீதித்துறை மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று நான் கூறவில்லை. மேல்முறையீடு அதன் சட்டப்பூர்வப் போக்கில் செல்லட்டும். இந்தியத் தலைமை நீதிபதியிடம் (CJI) எனது ஒரே வேண்டுகோள் என்னவென்றால், இந்த வழக்கை ஒரு சாதாரண வழக்காகக் கருதாமல், ஒரு சிறப்பு வழக்காகக் கருதி, உயர் நீதிமன்றத்தில் ஒரு சிறப்பு அமர்வை (Special Bench) அமைத்து, இந்த மேல்முறையீட்டை அன்றாட அடிப்படையில் (Day to day basis) விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்பதே. அதுவே சரியான நோக்கமாக இருக்கும். அது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கும் மற்றும் சதியாளர்களை அம்பலப்படுத்தும்.

தங்கள் உண்மையுள்ள

**எஸ்.எம். முஷ்ரிப்,** IPS (Rtd).

புனே



vaigarai velicham official



நாரே தக்பீர்! அல்லாஹு அக்பர்! முஸ்லிம் லீக்! ஜிந்தாபாத்!

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - மஹல்லா ஜமாஅத் மாநில மாநாடு

**மஹல்லா ஜமாஅத் மாண்பை போற்றுவோம்! சிறுபான்மையினர் உரிமை மீட்போம்!!**

**நாள் : 28.01.2026 புதன்கிழமை மாலை 4.00 மணி**

**இடம் : கும்பகோணம் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையிலுள்ள தாராசுரம் பைபாஸ் அருகிலுள்ள திடல்**

**பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலந்தொட்டு ‘கபிலா’கள் முறைதான் தற்போது மஹல்லா ஜமாஅத்துக்களாக இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதிலும் வதிகின்ற முஸ்லிம் சமுதாயம் மஸ்ஜிதை – பள்ளிவாசலை முன்னிலைப்படுத்தி மஹல்லா ஜமாஅத்துக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

**மஹல்லா ஜமாஅத் கட்டுக்கோப்புடன்** தன்னிறைவோடும் இருக்க வேண்டும். சன்மார்க்க கடமைகளை கற்றறிந்த சங்கைக்குரிய **உலமாக்களின் அறிவுரை** ஏற்று நடக்க வேண்டுமென நாளும் முழங்கி வரும் பேரியக்கம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்.

அவ்வப்போது தமிழகம் முழுவதிலுமுள்ள மஹல்லா ஜமாஅத்துக்களை ஒன்றிணைக்கும் மாநாடுகளை நடத்தி **‘முன்மாதிரி மஹல்லா ஜமாஅத் விருது’** வழங்கி வருகின்றோம்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றது முதல் சிறுபான்மையினர், பின்தங்கிய மக்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களை கொண்டு வந்து பிரச்சினைகளை எதிர்கொள்வதிலேயே நம் காலங்கள் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. **‘உமீத் சட்டம்’ (UMEED ACT)** என்ற ஒருங்கிணைந்த வக்பு மேலாண்மை, அதிகாரமளித்தல், செயல்திறன் மற்றும் மேம்பாட்டுச் சட்டம் மூலம் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட வக்பு சொத்துக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலைகளில் ஒவ்வொரு மஹல்லா ஜமாஅத்துக்களையும் முன்மாதிரி மஹல்லாக்களாக உயர்வடையச் செய்ய வேண்டும். அதற்குரிய திட்டங்களை வகுத்தளித்து, சமுதாய மக்களுக்கு உணர்வும் உத்வேகமும் ஊட்ட வேண்டுமென்ற உன்னதமான நோக்கத்தில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 2026, ஜனவரி 28 புதன்கிழமை, கும்பகோணம் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையிலுள்ள தாராசுரம் பைபாஸ் அருகிலுள்ள மைதானத்தில் மஹல்லா ஜமாஅத் மாநில மாநாடு நடைபெறுகின்றது.

இம்மாநாட்டில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத திட்டங்கள், சிறுபான்மை முஸ்லிம்களை வஞ்சிக்கும் சட்டங்களை துணிவுடன் எதிர்த்து இந்திய நாட்டில் ஜனநாயகம், சமூகநீதி, மதச்சார்பின்மை, சிறுபான்மையினர் உரிமை பாதுகாப்பை நிலைநிறுத்திட பணிகளாற்றி வரும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

**‘நபி வழித்தோன்றல்’ தேசிய பி.ஏ.சி. சேர்மன் செய்யிது சாதிக்அலி சிஹாப் தங்ஙள்,** கேரள சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவரும் தேசிய பொதுச் செயலாளருமான **பி.கே. குஞ்ஞாலிக்குட்டி** எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இம்மாநாட்டில் ‘முன்மாதிரி மஹல்லா ஜமாஅத் விருது’ சன்மார்க்க அறிஞர்கள், சான்றோர்களின் சேவைகளைப் பாராட்டி பல்வேறு விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

**சமுதாய தலைவர், தகைசால் தமிழர்**

## பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அழைக்கிறார்!




## அலைகடலென அணி திரண்டு வாரீர்!

அன்புடன் அழைக்கும்

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - தலைமை நிலையம்**

காயிதே மில்லத் மன்ஸில், 36, மரைக்காயர் லெப்பை தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொலைபேசி : 044 - 2521 8786

● Facebook : https://www.facebook.com/IUMLTNOfficial ● Instagram: https://www.instagram.com/iumltnofficial Twitter : https://twitter.com/IUMLTNOfficial ● Website : www.iumltn.in Email: info@iumltn.in

# காந்திஜி கொலைக்குப் பிறகு சர்தார் பட்டேல் ஆர்.எஸ்.எஸ் தலைவர் கோல்வாருக்கு எழுதிய கடிதம்



இந்துக்களை திரட்டி அவர்களுக்கு உதவுவது என்ற முகம் ஒரு புறமாக இருந்தாலும்., பழிவாங்குதல் என்கிற பெயரில் அப்பாவிகள், குழந்தைகள், பெண்களை துன்புறுத்துவது RSSன் மறுபுறமாக இருக்கின்றது. அதையெல்லாம் தாண்டி காங்கிரசின் மதிப்பிற்குரிய தலைவர்களை அவமரியாதை செய்வது, அவர்களுக்கு எதிராக வெறுப்பு பேச்சு பேசுவது என விஷம வேலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. அவ்வாறு நீங்கள் பேசும் பேச்சு எல்லாம் சமூகத்தின் விஷமாக பரவுகிறது. ஹிந்துக்களை பாதுகாக்கிறோம் என்கிற பெயரில் சமுதாயத்தில் விஷமத்தை பரப்புவது தேவையற்ற செயலாகவே இருக்கின்றது. உங்களுடைய இந்த விஷம பேச்சுகளின் விளைவாக இந்த நாட்டின் உன்னத உயிரான நம் நாட்டின் தேசிய தந்தையின் வாழ்வை பறித்து விட்டீர்கள். இனி துளி அளவு கூட ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களுக்கு இந்திய அரசின் கரிசனமும், இந்திய மக்களின் கரிசனமும், இனி கிடையவே கிடையாது.

சொல்லப் போனால் காந்திஜி கொலையை இனிப்புகளுடன் கொண்டாடிய உங்கள் RSS உறுப்பினர்களின் செயல்கள் உங்களுக்கு எதிரான எதிர்ப்பை இன்னும் அதிகமாக்கவே செய்தது. இது எல்லாம் கணக்கில் கொண்டுதான் ஆர்எஸ்எஸ்க்கு எதிரான அரசின் நடவடிக்கை மிகவும் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. போதும் 6 மாதங்கள் கடந்துவிட்டது அனைத்து



REGD. NO. M. 2776. MORNING.

The Indian Express

VOL. XVI. NO. 91. MADRAS: THURSDAY, FEBRUARY 5, 1948. 8 PAGES: 1½ ANNAS.

ARYA VAIDYA PHARMACY
Head Office: :: COIMBATORE :: Phone No. 103.
MADRAS BRANCHES:
149, Lloyds Road, ROYAPETTAH. Phone No. 84110. | 63, Usman Road, Mambalam Bus Terminus, T'NAGAR.
Arya Vaidyan P. V. RAMA VARIER will be available for consultation at MADRAS
(Royapettah Branch) on 2nd & 4th Sunday of every month.

…KEN TO PROTECT

HIS LIFE WAS FAR FROM A BED OF ROSES

R. S. S. Declared Unlawful Throughout India

MOVE FOR ROOTING OUT FORCES OF HATE & VIOLENCE

Govt. Communique Issued

NEW DELHI, Feb. 4.

THE R. S. S. HAS BEEN DECLARED AN UNLAWFUL ORGANISATION THROUGHOUT THE INDIAN DOMINION, IT IS OFFICIALLY ANNOUNCED.

A communique issued by the Ministry of Home Affairs says that the cult of violence sponsored and inspired by the Sangh claimed many victims—the latest and the most precious to fall was Mahatma Gandhi himself.

It adds that members of the Sangh indulged in acts of violence involving arson, robbery, dacoity and murder, collected illicit arms and ammunition, resorted to terrorist methods to create



vaigarai velicham official

ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களும் அவர்களின் கருத்திலிருந்து திரும்பினார்கள் என்று அறிக்கை எனது மேஜைக்கு வரவேண்டும். என்று எழுதினார்!

சர்தார் பட்டேல் ஹிந்து மகாசபா தலைவர் ஆன சியாம பிரசாத் முகர்ஜிக்கு July 8 1948 அன்று எழுதிய கடிதம்.


காந்திஜி கொலையில் ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து மகா சபாவின் பங்களிப்பின் மூலம் நடந்தது என நான் கூற விரும்பவில்லை. ஆனால் ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து மகா சபாவின் செயல்பாடுகள் தான் அவர்களினால் ஏற்படுத்தப்பட்ட சதிவலைகள் ஆனால்தான் இவ்வளவு துக்கமான (தேசப்பிதா காந்தியின் கொலை) நிகழ்வு நடந்தது என்பதை அறிக்கைகள் உறுதி செய்கின்றது. அதி தீவிரவாத பிரிவான ஹிந்து மகா சபாதான் இந்த சதி வலையில் ஈடுபட்டுள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மேலும் ஆர்.எஸ்.எஸ்-இன் செயல்பாடு அரசின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. RSS அமைப்பை தடை செய்தாலும் அந்த அமைப்பின் செயல்பாடுகள் சாகாது என்பதை எங்களுக்கு எங்களின் அறிக்கை காண்பிக்கின்றது. என்று எழுதினார்.

நாட்டிற்கு எதிரான சதி வேலையில் ஆர். எஸ். எஸ்.ஐ தடை செய்ய வேண்டி வல்லபாய் பட்டேலுக்கு February-5,1948 அன்று நேரு எழுதிய கடிதம்.

ஒரு சில RSS உறுப்பினர்கள் ஆயுதங்களை திரட்டி கொண்டு சில மாநிலங்களுக்கு சென்று குறிப்பாக பாரத்பூர் மற்றும் ஆழ்வார் போன்ற இடங்களில் நாட்டிற்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபட உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இன்னும் வேறு சில இடங்களில் அவர்கள் ஆட்களை திரட்டி கொண்டு சதி வேலைகளில் ஈடுபட வாய்ப்புள்ளது ஆகவே அந்தந்த மாநில அரசுகள் அதை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள செய்ய முடியுமா...? என்று கேள்வியுடன் அந்த கடிதத்தை வல்லபாய் பட்டேலுக்கு நேரு அவர்கள் எழுதினார்கள்..

February-5, 1948 அன்று நேரு எழுதிய கடிதத்திற்கு பதில் கடிதமாக February 6 அன்று வல்லபாய் பட்டேல் அவர்கள் எழுதிய பதில் கடிதம்.

எனது அருமை ஜவஹர்லால் நேரு அவர்




களுக்கு, பிப்ரவரி 5 அன்று எழுதிய கடிதத்திற்கு நன்றி. RSS-ஐ தடை செய்வதற்காக அது சம்பந்தமான விடயங்களை அந்தந்த மாநிலங்களுக்கு டெலிகிராம் அனுப்பியுள்ளோம். குறிப்பாக பாரத்பூர் மற்றும் ஆழ்வார் போன்ற பகுதிகளுக்கும், RSSக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்குமாறு தகவல் கொடுத்துள்ளோம். அவர்கள் நமக்கு கட்டுப்படுவார்கள் என நினைக்கிறேன். அப்படி கட்டுப்படாதவர்களை நாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற பதில் கடிதத்தை சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தொடர்கிறார்கள்.

SOURCES: Sardar patels correspondence (1945 - 1950) - Volume 6Written by : Ruben Das

**- பாபா நாகே.**



25-12-2025 அன்று சென்னை, அம்பத்தூரில் இப்ராகிம் அவர்கள் சகோதர சமுதாயத்தை சேர்ந்தவருக்கு அவருடைய கோரிக்கையின் பேரில் திருக்குர்ஆன் வழங்கியது.

அல்லாஹ்வை கூலியாகப் பெறுங்கள்...

# வாழ்த்தவும் வணங்கவும் வழங்கவும்

# வருகிறது ரமழான்

## பெருமானார் (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்திற்கு முந்தைய ஷாபான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில்

# ரமழானை வரவேற்று ஆற்றிய உரை!

மக்களே!

**உங்களுக்கு எதிரே அருளை அள்ளி வழங்கிடும் ஒருமாதம் வருகின்றது. அது அருளின் மாதம், கருணையின் மாதம், பாவமன்னிப்பை வழங்கிடும் மாதம். எல்லா மாதங்களின்றும் (அல்லாஹ்விடம்) சிறந்த மாதம். அதன் நாட்கள் ஏனைய எல்லா நாட்களையும் விட சிறந்த நாட்கள். அதன் இரவுகள் இரவுகளிலெல்லாம் சிறந்த இரவுகள். அதன் மணித்துளிகள், மணித் துளிகளிளெல்லாம் சிறந்த மணித்துளிகள்.**

*அது அல்லாஹ்வின் விருந்தினராக ஆகிட உங்களைஅழைக்கும் மாதம். அது அல்லாஹ் வுடன் நெருங்கி இருப்பவர்களோடு நீங்களும் இருக்க உங்களை அழைக்கும் மாதம். நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் அல்லாஹ்வின் புகழைப் பாடுகின்றது.*

*உங்களுடைய தூக்கம் ஒரு வணக்கம். உங்களுடைய செயல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.*

*உங்களுடைய வேண்டுதல்களுக்கு துஆக் களுக்குப் பதில் அளிக்கப்படுகின்றது. ஆகவே உங்கள் அல்லாஹ்விடம் ஆரோக்கியமான உடலைத் தந்திடும்படி கேளுங்கள். உங்கள் இதயத்தை விசாலாமாக்கித் தரும்படி கேளுங்கள், இதன் வழி நீங்கள் நோன்பு நோற்கும் தினத்தில் ஆரோக்கியத்தையும் அவனுடைய அருள் மறையை ஓதும் ஆரோக்கியத்தையும் கேளுங்கள், பெறுங்கள். இந்த மாண்புமிகு மாதத்தில் பாவ மன்னிப்பைப் பெற முடியாதவர்களே, சோகத் திற்குச் சொந்தக்காரர்கள். அந்த நியாயத் தீர்ப்பு நாளின் பசியையும், தாகத்தையும், நோன்பு காலத்தின் பசியோடும், தாகத்தோடும் ஒப்பிட்டுப் பாருங்கள்.*

*ஏழைகளுக்கு வாரி வழங்குங்கள், முதியவர் களை கண்ணியப்படுத்துங்கள், இளையவர் களிடம் இரக்கம் காட்டுங்கள். உங்களுடைய இரத்தப் பந்தங்களிடம் நல்ல உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நாவைப் பேணுங்கள், பார்த்திட அனுமதிக்காதவற்றிலிருந்து உங்கள் பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.*

*கேட்கக் கூடாது என விலக்கப்பட்டவற்றி லிருந்து காதுகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அநாதைகள் மீது அன்பு காட்டுங்கள், அதனால் உங்களின் மீது அல்லாஹ்வின் அன்பு காட்டப் படும்.*

*அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். துஆவிற்காக அல்லாஹ்விடம் உங்கள் கைகளை இந்த நேரங்களில் உயர்த்துங்கள். ஏனெனில் இவை தாம் நேரங்களிலெல்லாம் சிறந்தது. அல்லாஹ் தன் படைப்பினங்களை இந்த மாதத்தில் கருணையோடு பார்க்கின்றான். அவர்கள் கேட்பவற்றிற்குப் பதில் சொல்லுகின் றான். அவர்கள் அவனிடம் கேட்பவற்றை யெல்லாம் கொடுக்கின்றான்.*

*மக்களே! உங்கள் ஆத்மாக்கள் உங்கள் செயல் களைச் சார்ந்தே இருக்கின்றன. ஆத்மாக்களை பாவமன்னிப்புக் கொண்டு விடுதலை செய்யுங்கள். அவற்றின் அழுத்தங்களை, பாரங்களை நீண்ட நேரம் "சஜ்தா" செய்வதன் மூலம் எளிதாக்குங்கள். இதை உங்கள் நினைவில் நிறுத்துங்கள். அல்லாஹ் தன் ஆளுமையைக் கொண்டு உறுதியளிக்கின்றான்.*

"தொழுபவர், நீண்டநேரம் சஜ்தா செய்பவர் இவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தின் அதிபதியின் முன் அவர்கள் நின்றிடும்போது எந்தத் தண்டனையுமில்லை, எந்த பயமுமில்லை.

மக்களே! இந்த மாதத்தில் நோன்பு நோற்கும் ஒரு மனிதனுக்கு, நோன்பு துறக்க விருந்து தரும் ஒருவர்,ஒருவரை விடுதலை செய்தவராவார். அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக் கப்பட்டு விடும். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிலர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சொன்னார்கள்.

எங்களில் எல்லோருக்கும் நோன்பாளிகளை அழைத்து விருந்து வைக்கும் அளவுக்கு வசதி இல்லையே?

இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்

"நீங்கள் நோன்பு துறக்க வைக்கும் விருந்து ஒரு மிடறு தண்ணீராக இருந்தாலும் அல்லாஹ் இந்தப் பெருங்கூலியைத் தருகின்றான்."

இந்த மாதத்தில் சிறந்த ஒழுக்கங்களைப் பேணும் ஒருவர் "சிராத்' பாலத்தை எளிதாகக் கடந்து விடுவார்.அடுத்தவர்களின் குறைகளுக்கு ஈடு செய்பவர் பலன் பல அடைவார்.

அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில் அவர்மீது கொள்ளும் கோபத்தையும் குறைத்துக் கொள்வான்.

ஓர் அநாதையைக் கண்ணியப்படுத்துபவரை அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில், கண்ணியப் படுத்துவான். தனது இரக்கத்தை விசாலப் படுத்துபவர் மீது நியாயத் தீர்ப்பு நாளில் அல்லாஹ் தன் இரக்கத்தை விசாலப்படுத்துவான்.

"தன் உறவினர்களின் உறவைத் துண்டிப்ப வரிடமிருந்து அல்லாஹ் தன் இரக்கத்தை துண் டித்து விடுவான். இந்த மாதத்தில் (ரமழான் மாதத்தில்) சிறப்பான தொழுகையை தொழு பவருக்கு அல்லாஹ் நரகத்தை தூரமாக்குவான். இந்த மாதத்தில் கூடுதலான நஃபிலான, பரிந் துரைக்கப்பட்ட ஒரு தொழுகையை நிறைவேற்று பவருக்கு அல்லாஹ் 70 நஃபீலான பரிந்துரைக் கப்பட்ட தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான்.

இந்த மாதத்தில் கடமையாக்கப்பட்ட தொழுகையை நிறை வேற்றுபவனுக்கு அல்லாஹ் 70 தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான். இந்த மாதத்தில், அதிகமான தொழுகைகளை தொழுபவரின் சுமை நியாயத் தீர்ப்பு நாளில் எளிதாக்கப்படும்.

இந்த மாதத்தில் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதுபவருக்கு இதர மாதங்களில் மொத்த திருக்குர் ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும்.

மக்களே! இந்த மாதத்தில் சொர்க்கத்தின் வாசல்கள் திறந்திருக்கும். ஆகவே அல்லாஹ் விடம் உங்களுக்கு அதை ஒருபோதும் உங்களுக்கு மூடிவிட வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் நரகத்தின் வாசல்கள் மூடியே இருக்கும். உங்கள் விஷயத்தில் அது எப்போதும் மூடியே இருக்கட்டும் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் ஷைத்தானை கட்டிப் போட்டிருப்பான் அல்லாஹ். அந்த ஷைத்தான் ஒருபோதும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்திட அனுமதிக்க வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

**ஆதாரம் – "பைஹக்கி"**






# இந்துக்கள் ஆபத்தில் உள்ளனரா?

## - சங்கிகளின் முகத்தில் அறைந்த பட்டேல்

படேலின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, "இந்து காத்ரே மே ஹைன் (இந்துக்கள் ஆபத்தில் உள்ளனர்)" என்ற வெற்று குரலை நாடு முழுவதும் சங்கிகள் எழுப்பி வருகின்றனர். இந்நிலையில் 1950 மே 15 அன்று கேரளாவில், திருவிதாங்கூர் சமஸ்தானம் இந்திய ஒன்றியத்தில் இணைந்த பிறகு, "இந்து மதமும் இந்துக்களும் ஆபத்தில் உள்ளனர்" என்ற முழக்கத்தை பட்டேல் மறுபரிசீலனை செய்து ஆணித்தரமாக மறுத்ததை, அரை நூற்றாண்டுகளுக்கு பிறகு பாசிஸ சங்கிகள் மீண்டும் உயிர்பிக்க முயற்சிக் கின்றனர்.

### திருவிதாங்கூர் இந்தியாவுடன் இணைவதைத் தடுத்த இந்து தெய்வம்

இந்தியாவின் முதல் துணைப் பிரதமர் சர்தார் படேல், இந்தியாவை ஒன்றிணைக்க மற்ற சுதேச அரசுகளிடம் கேட்டது போல, திருவிதாங்கூர் இந்து இராஜ்ஜியத்தையும் இந்திய ஒன்றியத்தில் சேருமாறு கேட்டுக் கொண்டார். அந்த இராஜ்ஜியத்தின் இறையாண்மை இந்து தெய்வமான ஸ்ரீ பத்மநாபரிடமிருந்து வந்தது, அவரை இந்தியாவின் இறையாண்மைக்கு உட்படுத்த முடியாது என்ற காரணத்தால் அந்த இராஜ்ஜியத்தின் அதிகாரிகள் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டனர்.

ஒரு சுதேச அரசை இந்தியாவுடன் இணைப் பதற்கான வரலாற்று முயற்சிகளை முறியடிக்க ஒரு இந்து தெய்வம் பயன்படுத்தப்பட்டதைக் கண்டு திகைத்துப் போன படேல், "அப்படி யானால், திருவிதாங்கூர் ஆட்சியாளர்கள் எப்படி பகவான் பத்மநாபரை பிரிட்டிஷ் மகுடத்திற்கு அடிபணிய அனுமதித்தார்கள் என்று தயவுசெய்து சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

இது ஒரு பக்கம் இருக்க, பாசிச இந்துத்துவ சித்தாந்தவாதியான விநாயக் தாமோதர் சாவர்க்கர், திருவிதாங்கூர் ஆட்சியாளர்கள் இந்திய ஒன்றியத்தில் சேரக்கூடாது என்ற விசித்திரமான தேவராஜ்ய தர்க்கத்தை ஆதரித்தார்.

விக்ரம் சம்பத் தனது "சாவர்க்கர்: ஒரு போட்டி யிட்ட மரபு 1924-66" என்ற புத்தகத்தில்,

"இந்து சமஸ்தானத்தின் சுயாட்சி மற்றும் சுதந்திரத்தை அறிவிக்கத் திட்டமிட்டிருந்த திருவிதாங்கூர் திவான் சர் சி.பி. ராமசாமி ஐயருக்கு சாவர்க்கரின் தவறான ஆதரவு துரதிர்ஷ்டவசமானது மற்றும் புதிய இந்திய ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பு செயல்முறைக்கு தீங்கு விளைவிக்கும்" என்று எழுதினார்.


இத்தகைய தடைகள் அனைத்தையும் மீறி, இறுதியில் திருவிதாங்கூர் இந்து இராஜ்ஜியம் 1949இல் இந்திய ஒன்றியத்தில் இணைந்தது, சர்தார் படேலின் மதச்சார்பற்ற அரசு மேலாண்மை கொள்கையின் வெற்றியாக இது குறிப்பிடப்படுகிறது.

சரி இந்த நிகழ்வுகளின்போது சர்தார் பட்டேலின் பேச்சுகள், உரைகளை நாம் இப்போது கவனிப்போம்.

### இந்து மதம் ஆபத்தில் உள்ளது என்ற கட்டுக்கதை

மே 15, 1950 அன்று திருவனந்தபுரத்திற்கு வருகை தந்தபோது, ஒரு லட்சம் பேர் கொண்ட ஒரு பிரமாண்டமான பேரணியில் உரையாற்றிய படேல்,

"... திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத்தில் உள்ள ஒரு பிரிவினர் எழுப்பிய 'இந்து மதம் ஆபத்தில் உள்ளது' என்ற பொய்யான கூச்சலால் ஏமாற வேண்டாம்" என்று அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். பழங்காலத்திலிருந்தே சகிப்புத்தன்மை கொண்ட பூமியாகப் போற்றப்



படும் இந்தியாவில் இந்து மதம் ஒருபோதும் ஆபத்தில் இருந்ததில்லை என்று அவர் அவர்களுக்கு உறுதியாக கூறினார்.. அனைத்து மதங்களும் எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளாமல் செழித்து வளர்ந்தன.."

அட! இன்று இந்தியா முழுவதும் பாசிஸ்டுகள், அக்பர் ஆட்சியில் இந்து மதம் ஆபத்தில் இருந்தது, அவுரங்கசீப் ஆட்சியில் இந்து மதம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது என்றெல்லாம் வரலாற்று திரிபுகளை அப்பாவி மக்களின் உள்ளங்களில் விதைத்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த சைக்கோ பாசிஸ்டுகளின் காலத்திற்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே, இவர்கள் வானுயர சிலை எழுப்பிய பட்டேலே அதை மறுத்துள்ளாரா? ஆச்சரியம் தான்.

அதேநாளில் எர்ணாகுளத்தில் நடந்த மற்றொரு பெரிய கூட்டத்தில் உரையாற்றும் போது,

"மாநில மக்களில் சிலர் முதல் முறையாக 'இந்து மதம் ஆபத்தில் உள்ளது' என்று சொல்வதைக் கேட்டபோது, இந்துக்கள் இங்கிருந்து மறைந்துவிட்டார்களோ என்று நான் பயந்தேன்" என்று கூறினார்.

மகாத்மா காந்தியைப் பற்றி அவர் குறிப்பிடுகையில்,

"உலகம் முழுவதும் இந்தியாவிற்கு நற்பெயரைச் சம்பாதித்த ஒரு இந்து இருந்தார். அவர் காந்திஜி. ஆனாலும் அவரைக் கொன்றது ஒரு இந்துதான்" என்று கூறினார்.

இப்போது பட்டேலின் இந்த வார்த்தைகளை படிக்கும் இல்லை.. இல்லை..! படிக்க தெரியாமல், படிக்க தெரிந்த யாரையாவது அழைத்து இதில் என்ன எழுதியுள்ளது என்று கேட்டு தெரிந்து கொள்ளும் ஒரு பாசிஸ்டு சங்கியின் மனநிலை என்னவாக இருக்கும்...! ஒரு திரைப்பட காமடி காட்சியில் வரும் டைலாக் தான் நினைவில் வருகிறது. அது, "அத வேற நியாபகப்படுத்திட்டீங்க..! நெஞ்சமெல்லாம் புன்னா இருக்கு தம்பி." (மொ-ர்)

அந்த உரையின் இறுதியில் இப்போதுள்ள பாசிஸ்டுகளின் கண்ணத்தில் பளார் என அறைந்தார்போல் ஒரு கேள்வி கேட்கிறார்,

"(கோட்சே செய்த செயலான) அது இந்து மதமா? அந்த முறையின் மூலம் நீங்கள் இந்து மதத்தைப் பாதுகாக்கிறீர்களா?" என்று கேட்டார்.

இந்து மதத்திற்குள் உள்ள ஏராளமான சாதிகள், மதங்கள் மற்றும் துணை சாதிகளைப் பற்றி அவர் வெளிப்படையாகக் குறிப்பிட்டார், மேலும் கிறிஸ்தவர்களிடையே கூட இதுபோன்ற வேறுபாடுகள் நிலவுவதாகக் குறிப்பிட்டார். பின்னர் அவர் வலியுறுத்தினார்.

"நமது சொந்த மதத்தைப் பின்பற்றுவோம், அதை முறையாகப் பின்பற்றினால், எதுவும் ஆபத்தில் இல்லை. கிறிஸ்தவர்களாகவோ, இந்துக்களாகவோ, முஸ்லிம்களாகவோ, சீக்கியர்களாகவோ அல்லது பார்சிகளாகவோ ஒழுக்கமான மனிதர்களாக வாழ்வோம்."

இந்தியாவில் இந்து மதம் ஒருபோதும் ஆபத்தில் இருக்க முடியாது" என்று வலியுறுத்திய அவர், இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ளனர் என்ற கருத்தை சுட்டிக்காட்டி, "பெரும்பான்மை இல்லாவிட்டாலும், கடந்த காலத்தில் நாம் மதவாதிகளை உருவாக்கவில்லையா?" என்று கேட்டார்.

சங்கராச்சாரியாரை ஒரு சிறந்த ஆன்மாவாக அவர் மேற்கோள் காட்டினார், மேலும் அவர் ஒருபோதும் இந்து மதம் ஆபத்தில் உள்ளது என்ற கூக்குரலை எழுப்பவில்லை என்றும் வலியுறுத்தினார். அந்தப் பின்னணியில், "மதம் என்பது மனிதனுக்கும் அவனைப் படைத்தவனுக்கும் இடையிலான விஷயம்" என்று அவர் கூறினார்.

மதச்சார்பற்ற இந்தியாவுடன் இணைந்த பிறகு, திருவிதாங்கூரில் எழுப்பப்பட்ட "இந்து மதம் ஆபத்தில் உள்ளது" என்ற கூக்குரலை, படேல் "ஒரு பொய்யான கூக்குரல்" என்று நிராகரித்தார்.

Source : The Wire - 31-10-2025 / by, S.N. Sahu served as an officer on special duty to former President K.R. Narayanan.

தமிழில் : **Advocate Jasmine Fathima.**

## பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

- தொடர்



# உச்ச நீதிமன்றமும் குண்டு வெடிப்புகளும்

**பிராமிணிஸ்ட்டுகள் இந்தியா முழுவதும் குண்டுவெடிப்புகளை நடத்தினார்கள். பின்னர் முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டுகளை வைத்தார்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். ஏன் முஸ்லிம்கள் குண்டு வைக்கின்றார்கள் எனக் கேட்டால், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு பழி தீர்க்கின்றார்கள் என்று முதலிலும், பின்னர் குஜ ராத் இனப்படுகொலைக்குப் பழி வாங்குகின்றார்கள் என்றும் கூறினார்கள்**

**டிசம்பர் மாத தொடர்ச்சி...**

காரணம் இவர்கள் பல குண்டுவெடிப்புகளை நடத்தியவர்கள். அத்தோடு மும்பைத் தாக்கு தலின்போது நடந்த மும்பை ரெயில் நிலை யத்தில் நடந்த தாக்குதல், (அதில் அப்பாவி மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்) காமா மருத்துவமனை தாக்குதல், ரெங்கபவன் பகுதியில் கர்கரே போன்ற வர்கள் கொலை செய்யப்பட்டது ஆகிய வற்றிலும் இவர்கள் உண்டு. இவையெல்லாம் பின்னர் தெரிந்துவிடும் என அவர்கள் அஞ்சி னார்கள். அதனால் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டார்கள். (சில புலனாய்வு களின்படி, அவர்கள் அவர்களின் இயக்கத்தவர் களாலேயே கொலை செய்யப்பட்டார்கள்)

முதன்முறையாக மூன்று ஆர்.எஸ்.எஸ். காரரர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

ஜெய்ப்பூரிலுள்ள (Special NIA Court) சிறப்பு தேசிய புலனாய்வு முகமை வழக்கை நடத்தி, மார்ச்–8,2007ஆம் ஆண்டு தனது தீர்ப்பை வழங்கியது.

இது கைது செய்யப்பட்ட 10 குற்றவாளி களுக்காக நடத்தப்பட்ட வழக்கும் தீர்ப்பும். இதில் மூன்று ஆர்.எஸ்.எஸ்.காரரர்கள் தண்டிக்கப் பட்டார்கள். ஏழு பேர் விடுவிக்கப்பட்டார்கள். இதில் சுவாமி அசீமானந்தாவையும் நீதி மன்றம் விடுதலை செய்துவிட்டது. அவர்களுக்குச் சந்தேகத்தின் பயனை அளிப்பதாகக் கூறிற்று. தண்டிக்கப்பட்ட மூன்று பேர் சுனில்ஜோஷி, தேவேந்திர குப்தா, பாவேஷ் பட்டேல். இதில் சுனில்ஜோஷி இந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பே இறந்துவிட்டார். (இவரை மாலேகான் பிளாஸ்ட் 2008–இல் குற்றம் சுமத்தப்பட்ட பெண் சந்நியாசி பிரக்யா சிங் தாக்கூர் ஓர் இரகசிய இடத்தில் வைத்துக் கொலைச் செய்துவிட்டார். பிரக்யா சிங்தாக்கூர் மீது இந்த கொலை வழக்கும் நடந்து கொண்டிருக்



vaigarai velicham official

கின்றது)

இவர் சுனில்ஜோஷி மிகவும் அபாயகரமான சூழலில், மத்தியப் பிரதேசத்திலுள்ள தேவாஸ் எனுமிடத்தில் 29, டிசம்பர் 2007–இல் இறந்து கிடந்தார். இந்த அஜ்மீர் ஷெரீஃப் வழக்கில்தான் முதன்முதலில் ஆர்.எஸ்.எஸ்.–ஐ சார்ந்த ஒருவர் குண்டு வைக்கும் தீவிரவாதச் செயலில், அதாவது தெளிவாக ஆர்.எஸ்.எஸ். காரர் என அறியப்பட்ட ஒருவர் முதன் முதலாகத் தண்டிக்கப்பட்டார்.

சுவாமி அசீமானந்தாவின் வாக்குமூலம் முழுக்க முழுக்க தானாகவே முன்வந்து வழங்கப் பட்ட ஒன்று. ஆனாலும் நீதிமன்றம் சில சில்லரைக் காரணங்களைச் சொல்லி அதை நிராகரித்துவிட்டது. இந்த விவகாரத்தை அத்தியாயம் 10–இல் விரிவாக விவாதித்திருக்கின்றோம். அதில் ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் (பள்ளிவாசல்) குண்டுவெடிப்பை விரிவாக விவாதித்திருக்கின்றோம். அசீமானந்தா அந்த வழக்கிலும் இதே போன்றதொரு வாக்குமூலத்தை வழங்கி இருந்தார்.

## 2. மக்கா மஸ்ஜித் (ஹைதராபாத்) குண்டுவெடிப்பு – 2007

இந்த குண்டுவெடிப்பு மே–18, 2007ஆம் ஆண்டில் நடந்தது. அதில் ஒன்பது பேர் கொலை செய்யப்பட்டார்கள். பலர் காயம் பட்டார்கள்.

மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிற்கு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பிற்குமிடையே பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டு குண்டுகள்தாம். இரண்டு குண்டுவெடிப்புகளிலும் வைக்கப் பட்டிருந்தன. இரண்டும் இரண்டு இடங்களில் ஒரு குண்டு வெடித்தது, ஒரு குண்டு வெடிக்க வில்லை. இந்த இரண்டு குண்டு வெடிப்பு களிலும் (மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பு) குண்டுகளை வெடிக்கச்செய்ய பயன்படுத்தப்பட்ட உக்தி – வழிமுறை – ஒன்றுதான்.

இரண்டு குண்டுவெடிப்புகளிலும் உள்ள ஒற்றுமைகள், இத்தோடு நின்றுவிடவில்லை. அவற்றில் பின்பற்றப்பட்ட வழிமுறைகளும் ஒன்று போன்றவைதான்.

இந்த மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிலும் குண்டை வெடிக்கச் செய்த ‘சிம்’ (SIM) கார்டு பாபுலால் யாதவ் என்பவரின் பெயரில்தான் வாங்கப்பட்டிருந்தது. ஆனால் முகவரிகள் வேறாகக் கொடுக்கப்பட்டிருந்தது. இது மேற்கு வங்க மாநிலம், அசான்ரோல் என்ற இடத்திலிருந்து வாங்கப்பட்டிருந்தது. ‘சிம்’ கார்டு வாங்குவதற்காக ஓட்டுநர் உரிமம் பயன்படுத்தப் பட்டிருந்தது. இது டைம்ஸ்ஆஃப்இந்தியா நாளிதழில் மே–21, 2007–ல் வெளிவந்தது.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பில் எப்படி முதலில் கிடைத்த உருப்படியான, உண்மையான தடயங்கள் அமுக்கப்பட்டனவோ, அதேபோல் இதிலும் – மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிலும் முதலில் கிடைத்த தடயங்கள், பின்னுக்குத்தள்ளப்பட்டிருந்தன. முஸ்லிம்கள்தாம் அந்தக் குண்டுவெடிப்பை நடத்தினார்கள் என்ற கொள்கையின் அடிப் படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டன. முஸ்லிம் இளைஞர்களை பல்வேறு காரணங்களைச் சொல்லி கைது செய்தார்கள்.

மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு நடந்த உடனேயே பல்வேறு குற்றப் பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளின் அடிப்படையில் அவர்கள் முஸ்லிம்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்றானது. பின்னர் அவர்களை சித்திரவதைச் செய்து தாங்கள் விரும்பும் விதத்தில் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றார்கள்.

இப்படி நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களை கைது செய்தபின், இப்படிப் பலரைக் கைது செய்து சித்திரவதைச் செய்து அவர்களின் இளமையையும் – எதிர்காலத்தையும் சிதற அடித்தபின், 28 முஸ்லிம் இளைஞர்கள் மீது தங்கள் அறுதி பார்வையைச் செலுத்தினார்கள். அவர்களைத்தான் இந்தக் குண்டுவெடிப்புக் களில் முறையாகக் கைது செய்திருப்பதாக அறிவித்தார்கள். பின்னர் இவர்களைக் கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கினார்கள். தாங்கள் சொல்வதைப்போல் சொல்லிட வேண்டும், எல்லா குண்டுவெடிப்புகளையும்

நீங்கள் தாம் செய்தீர்கள் என ஒப்புக்கொள்ள வேண்டும் என்றார்கள்.

அந்த 28 இளைஞர்களும் அடுத்து வந்த சித்திரவதைகளை ஏற்றுக்கொண்டார்களே தவிர, தாங்கள் செய்யாததை செய்ததாக ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால் காவல்துறை ஸ்தம்பித்து நின்றது. ஆனாலும் அவர்கள் மீதே பழியையும், குற்றத்தையும் சுமத்துவது என முடிவு செய்தார்கள் காவல் துறையினர் – அவர்கள்மீது பொய், புனைந் துரைக்கப்பட்ட சாட்சியங்கள் இவற்றின் அடிப்படையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்கள். ஆனால், விசாரணை நீதிமன்றம் அவர்கள் அனைவரையும் விடுதலை செய்தது. காவல்துறையினரை கடுமையாகச் சாடியது. அவர்களை – அந்த முஸ்லிம் இளைஞர்களைப் பொய்யான வழக்குகளில் இணைத்ததற்குக் கண்டனம் தெரிவித்தது.

இதனால் 28 முஸ்லிம் இளைஞர்கள், மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில்தான் சித்திரவதைச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதால் ஆந்திரப் பிரதேச அரசு அவர்களுக்கு நிவாரணங்களை வழங்கிட முன் வந்தது. இதற்கு அங்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளே காரணம்.

நிவாரணங்களை வழங்கிய ஆந்திரப் பிரதேசத்தில், மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பில் மக்கள் எப்படி – குறிப்பாக சில வழக்கறிஞர்கள் எப்படிச் செயல்பட்டார்கள் என்பதை ‘வைகறை வெளிச்சம்’ இதழில் வெளியிட்டுள்ளோம். நாடெங்கும் குண்டு வெடிப்புகளை நடத்தியது இந்துத்துவ வாதிகளே! இந்த உண்மையை உலகுக்கு அறிவித்தார்கள் – வைகறை வெளிச்சம் – வேர்கள் பதிப்பகம் மற்றும் வைகறை வாசகர் வட்டம்.

நாம் மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி களை நடத்தி வந்தோம். ஆந்திராவில் இடை விடா முயற்சியால் – இழப்பீடுகளையும் பெற்றார்கள்.

மாநில முதல்வர் பிறப்பித்த ஆணையில் (YSR. YS - இராஜசேகர் ரெட்டி) இப்படி அறிவித்தார்.

"The Victims of Police Atrocities in Mecca Masjid Blast Case" அதாவது “மக்கா மஸ்ஜித் வெடி குண்டு வழக்கில் காவல்துறையின் குரூரங்களுக் குப் பலியானவர்கள்.”

பின்னர் இந்த வழக்கு, NIA என்ற தேசியப் புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் NIA மெக்கா மஸ்ஜித் குண்டுவெடிப் பையும், அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பையும் ஒன்றாகவே விசாரணை செய்தார்கள். ஏனெனில் இவை இரண்டு குண்டுவெடிப்புகளும், எல்லாவகையிலும் ஒன்றுபோல் இருந்தன.

குண்டுவெடிப்பு சதியிலும், இரண்டும் ஒன்று போலவே இருந்தன. NIA, National Investigation Agency தேசிய புலனாய்வு முகமை தான் மேற் கொண்ட சீரிய புலனாய்வுக்குப் பின்னர் ஓர் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது. அதில் குற்வாளிகளாக, அதே, ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதிரம் என்ற அமைப்பு களைச் சார்ந்தவர்களே அறிவிக்கப்பட்டனர்.

### குற்றம் சுமத்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்

இந்த வழக்கின் முடிவில் ஆந்திர நீதி மன்றம் குற்றம் சுமத்தப்பட்ட மூன்று அமைப்புகளைச் சார்ந்தவர்களையும் ஒட்டு மொத்தமாக விடுதலை செய்தது. இந்தத் தீர்ப்பு ஏப்ரல்–18, 2018 இல் வந்தது.

இதில் தடயங்களை மறைத்ததாக, NIA தேசிய புலனாய்வு முகமையை நீதிபதி சாடினார். இதனை 10ஆவது அத்தியாத்தில் விரிவாக விவாதித்துள்ளோம்.

### 3. சம்சவ்தா ரெயில் விரைவு வண்டி குண்டுவெடிப்பு வழக்கு

### 2007 – இரண்டு முறை வழிமறிக்கப்பட்ட விசாரணை

சம்சவ்தா எக்ஸ்பிரஸ் என்பது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரெயில் போக்குவரத்து. அதுவே சம்சவ்தா என்பதன் பொருள்.

ஆனால் 2007 பிப்ரவரி 19 ஆம் தேதி அது இரண்டு நாடுகளுக்கிடையேயும் தவறான புரிதல்களை வளர்க்கும் ரெயில் போக்குவரத்தாக மாறிப்போய்விட்டது.

இந்த நாளில், இந்த ரெயில் வண்டியில் குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டுகள்

ஹரியானா மாநிலத்தில் ‘பானிப்பட்’ என்ற இடத்தில் வைத்து வெடித்தன. இதில் 68 பேர் இறந்தார்கள். (பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள்) இந்தக் குண்டுவெடிப்பால் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமிடையே, யார் குற்றவாளி என்பதைக் கண்டுபிடிக்கும் மிகப்பெரிய பழி சுமத்தும் படலம் தொடங்கியது.

இந்திய அரசாங்கம், மத்திய உளவுத்துறை தந்தத் தவறான தகவல்களின் அடிப்படையில் பாகிஸ்தானின் 'ISI' என்ற உளவுத் துறையின் தூண்டுதலின் கீழ் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாம் இதைச் செய்கின்றார்கள் என்றது. ஆனால் இதற்கான எந்த ஆதாரத்தையும் தந்திடவில்லை.

(2007) அந்த வருடம் மார்ச்சு 6ஆம் நாள் நடந்த Counter Terror Mechanism - தீவிரவாத எதிர் நடவடிக்கைகள் என்ற பெயரில் இந்தியாவும் பாகிஸ்தானும், கூட்டுப் பேச்சுவார்த்தைகளை நடத்தின. அப்போது, ஒரு புகைப்படம் ஒன்றைத் தந்து அந்தப் புகைப்படத்திலிருப்பவர் பாகிஸ்தானைச் சார்ந்தவர் என்றார்கள்.

ஆனால், அதே நேரத்தில், ஹரியானா காவல் துறையைச் சார்ந்த, சிறப்பு புலன் விசாரணை அதிகாரிகள், உண்மையான குற்றவாளிகளின் பக்கம் நெருங்கிவிட்டார்கள். அந்த உண்மையான குற்றவாளிகள், ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த பிராமணிஸ்ட்டுகள்தாம். அவர்களுக்குக் கிடைத்த உறுதியான தகவல் மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூர் என்ற இடத்திற்கும், இந்தக் குண்டுவெடிப்புகளுக்கும் நிறைய தொடர்பு உண்டு என்பதாகும்.


இந்த இந்தூர் பகுதியில் நயாபாசார் என்றொரு அங்காடி. இந்த அங்காடியிலுள்ள கடை ஒன்றிலிருந்துதான் குண்டுவெடிப்பிற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் இந்துத் தீவிரவாதிகள் வாங்கி இருந்தார்கள். அதேபோல் அங்கே கோத்தாரி என்றொரு சந்தை, இந்தச் சந்தையில்தான் குண்டுகளைக் கொண்டு செல்வதற்கான, சூட்கேஸுகள் என்ற பெட்டிகள் வாங்கப்பட்டிருந்தன. அந்த சூட்கேசுகளைப் போர்த்திட உறையைத் தைத்த டெய்லர் கடையையும் கண்டுபிடித்துவிட்டனர். இந்தக் கடைக்காரர்களை, முழுமையாக விசாரித்தார்கள். இந்த விசாரணையில் இந்தக் குண்டுவெடிப்பில் சம்மந்தப்பட்ட முக்கியப் புள்ளிகளைக் கண்டு கொண்டனர். அவர்களைக் கைது செய்திட தயாரானார்கள்.

ஆனால் அந்த இந்தூர் (மத்திய பிரதேசம்) காவல்துறையினர் ஹரியானா காவல்துறையினருடன் கிஞ்சிற்றும் ஒத்துழைக்கவில்லை. அதனால் ஹரியானா காவல்துறையினர் வெறுங்கை யோடு திரும்ப வேண்டியதாயிற்று. மத்திய பிரதேச (இந்தூர்) காவல்துறைக்கு யார் அழுத்தங்களைத் தந்திருப்பார்கள் என்பதை நாம் எளிதில் புரிந்திட இயலும். (அது மத்திய உளவுத்துறைதான்).

ஒன்றரை ஆண்டுகளாக இந்த வழக்குக் கிடப்பில் போடப்பட்டது. அதன்பின்னர் திடீர் என அது உயிர்ப்பெற்றெழுந்தது.

ஆமாம், மாலேகான் குண்டுவெடிப்பின் கதாநாயகன், தளபதி கலோனல் பிரசாத் புரோகித் என்பவரை (Narco Analysis Test) நார்கோ அனாலிஸிஸ் டெஸ்ட்டுக்கு உட்படுத்தியபோது, அவர் பல உண்மைகளை ஒத்துக்கொண்டார்.


**- தொடரும்...**





# காலநிலையும் அதன் காரணங்களும்

## (Climate and its Causes)



ரஹ்மத் ராஜகுமாரன்

மழைக்கும் மன்னிப்பிற்கும் உள்ள தொடர்பு பற்றி அறிவியல் கூறும் காலநிலையும், ஆன்மீகம் கூறும் அதன் காரணங்களும் (Climate and its Causes ) பற்றிய விளக்கம்

மேலும், "நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள்; நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்" என்றுங் கூறினேன்.

"(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான்.

"அன்றியும் அவன் உங்களுக்குப் பொருள்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான்; இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான்; உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான். (குர்ஆன் : 71:10,11 ,12)

அல்ஹதீஸ்:- மன்னிப்புக் கேட்குதலை எவன் கொடுத்திருக்கிறானோ அவன் மன்னிப்பைத் தடுத்துக்கொள்ள மாட்டான் (அதாவது மன்னிப்புக் கேட்கும்படி கூறியவன் மன்னிக்காமல் இருக்க மாட்டான்.)

இதனால்தான் ஹளரத் அலீ (ரழி) அவர்கள் "அல்லாஹ் ஒரு அடியானை வேதனை செய்ய நாடிவிட்டால் அவனுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்க மாட்டான்" என்று கூறியிருக்கிறார்கள்.

ஒரு தடவை உமர் (ரழி) அவர்களின் கிலாஃபத்தின் போது மழையின்றி பெரும் பஞ்சம் ஏற்பட்ட பொழுது அவர்கள் மழைத் தொழுகை தொழுவித்து மேடை மீது ஏறி இஸ்திஃபார் மட்டும் திரும்பத் திரும்பக் கூறி வேறு ஒன்றும் ஓதாது கீழே இறங்கி விட்டனர்.

மக்கள் அவர்களை அணுகி, "தாங்கள் மழைக்காக வேண்டி 'துஆ' செய்யவில்லையே" என்று கூறியபொழுது, "நான் இஸ்திஃபாரைக் கொண்டு மழையை வேண்டினேன்" என்று கூறி மேற்கண்ட ஆயத்தை அவர்கள் ஓதிக் காட்டினர்கள்.

இஸ்திஸ்கா (மழைத்தொழுகை) வின் ஹகீகத்தே இஸ்திஃபார்தான் என்று இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.

ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடத்தில் ஒருவர் தனக்கு நேர்ந்துள்ள வறுமையைக் குறித்து முறையிட்டார். இஸ்திக்பார் செய்யுமாறு அதாவது இறைவனிடம் பாவ மன்னிப்புக் கேட்குமாறு) பதிலளித்தார்.


vaigarai velicham official

வேறொருவர் வந்து பஞ்சத்தைக் குறித்தும், இன்னொருவர் மக்கள் பேறு இல்லாததைக் குறித்தும், மற்றொருவர் தனது பூமியில் விளைச்சல் குறைவாக இருக்கிறது என்பதைக் குறித்தும் முறையிட்டனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் இஸ்திக்பார் செய்யும்படியாகவே இமாம் ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கட்டளை யிட்டார்கள்.

அங்கிருந்த றபீஉப்னு ஸுபைஹ் 'தங்களி டத்தில் பலரும் வருகின்றனர். தங்களுக்கு உள்ள பல வகையான கஷ்டங்களையும் கூறி முறையிடு கின்றனர். அவர்கள் யாவருக்கும் தாங்கள் இஸ்திக்பார் செய்யுமாறு கட்டளையிடுகிறீர்கள். இது எவ்வாறு நியாயமாகும்?' என வினவினார்.

அப்பொழுது ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மேற்கண்ட இம்மூன்று ஆயத்துகளையும் ஓதிக் காண்பித்தார்கள்

### 1) மழை - அறிவியல் பார்வை (Physical Climate System)

அறிவியல் கூறுவது மழை ஏற்பட வேண்டு மெனில், சூரிய ஆற்றல், ஆவியாக்கம் (Evaporation), மேக உருவாக்கம் (Condensation), காற்றழுத்தம் & காற்றோட்டம், புவியின் சமநிலை (Atmospheric Balance) இவை அனைத்தும் சரியாக செயல்பட வேண்டும்.

ஆனால் இந்த சமநிலைகள் எப்போது குலைகின்றன?

காடுகள் அழிப்பு, அளவுக்கு மீறிய இயற்கை நுகர்வு, மாசு, இயற்கையோடு பகை. இதனால் மழைத் தோல்வி (Drought) உருவாகிறது.

### 2) குர்ஆன் கூறும் அடிப்படை விதி - "அகத்தும் புறமும் ஒன்றே"

குர்ஆன் ஒரு முக்கியக் கோட்பாட்டை நிறுவுகிறது:

"மக்களின் கைகளால் செய்தவற்றின் காரண மாகவே, நிலத்திலும் கடலிலும் குழப்பம் தோன்றியது" (குர்ஆன் 30:41)

- மனிதனின் செயல்பாடுகள் காலநிலையைச் சீர்குலைக்கின்றன.
- மனிதனின் பாவங்கள் தெய்வீக சமநிலையைச் சீர்குலைக்கின்றன.
- இரண்டும் ஒரே உண்மை - சமநிலை குலைவு


### 3) இஸ்திஃபார் என்றால்:

"நான் தவறியிருக்கலாம்" என்ற தாழ்மை, Ego கரைதல், மன அழுத்தம் குறைதல், சமூக அகங்காரம் உடைதல், இது தனிநபரின் உள்நிலை காலநிலையை சீரமைக்கிறது.

**அறிவியல் கூறும்:**

கூட்டு பணிவு ஒத்துழைப்பை உருவாக்கு கிறது; ஒத்துழைப்பு நிலைத்த வாழ்க்கை முறைகளை வளர்க்கிறது;

நிலைத்த நடத்தை இயற்கைச் சமநிலையை மீட்டெடுக்கிறது உள் மாற்றம் அடைந்தால் புற மாற்றம் அடையும்.




### 4) நுஹ் (அலை) அவர்கள் கூறிய 71:10-12 - ஒரு Climate Formula

**குர்ஆன் வசனம்:**

"நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள்

அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான், பொருள்களையும், புதல்வர் களையும் தருவான், தோட்டங்களையும், ஆறுகளையும் உண்டாக்குவான்"

இது ஒரு ஆன்மீக - சமூக - பொருளாதார - பருவநிலை சங்கிலி

இஸ்திஃபார்

| | |
|---|---|
| மழை? | மழை! |
| விளைச்சல்? | விளைச்சல்! |
| செல்வம்? | செல்வம்! |
| சந்ததி? | சந்ததி! |

காலநிலை என்பது இயற்கை மட்டும் அல்ல; மனிதனின் ஆன்மீக நிலையும் சமூக நடத்தையும் சேர்ந்து உருவாகும் சமநிலையே காலநிலை.

**5) ஹழ்ரத் அலீ (ரழி) அவர்களின் கூற்று மிக ஆழமான உளவியல்**

“அல்லாஹ் ஒருவரை தண்டிக்க விரும்பினால் அவனுக்கு மன்னிப்புக் கேட்கும் எண்ணமே தரமாட்டான்”

ஒருவன் பாவத்தில் மூழ்கியும், “நான் தவறி விட்டேன்” என்று நினைத்தால், அது தண்டனை அல்ல, அழைப்பு

**6) உமர் (ரழி) - இஸ்திஸ்கா தொழுகையின் ஹகீகத்**

உமர் (ரழி) அவர்கள், துஆ செய்யவில்லை, நீண்ட கோரிக்கைகள் இல்லை, இஸ்திஃபார் மட்டும். ஏன்? ஏனெனில்:

மழை என்பது பாவமன்னிப்பின் வெளிப்பாடு

**இமாம் அபூஹனீஃபா (ரஹ்):**

“இஸ்திஸ்காவின் உண்மை - இஸ்திஃபார்தான்”

**7) ஹஸன் பஸரி (ரஹ்) - ஒரே மருந்து, பல நோய்கள்**

நான்கு பேர்: வறுமையைப் பற்றி, பஞ்சம் பற்றி, சந்ததியின்மைப் பற்றி, விளைச்சல் குறைவுப் பற்றி

- ஒரே பதில்: இஸ்திஃபார். ஏன்? ஏனெனில்:

எல்லா பிரச்சினைகளுக்கும் வேரானது இஸ்திஃபார் பாவமன்னிப்பு

மழை என்பது வெறும் நீர் அல்ல; அது இறைவன் - மனிதன் - இயற்கை மூன்றின் ஒற்றுமையின் சாட்சி.

மிகச் சுருக்கமாக : இஸ்திஃபார் என்பது வானத்தை மாற்றும் மந்திரம் அல்ல,

மனிதனை மாற்றும் உண்மை.
மனிதன் மாறினால் - வானமும் மாறும்.





# காஸா : வீராங்கனை கிரேட்டா துன்பெர்க்



**சுவிடன் நாட்டின் தலைநகர் ஸ்டாக்கோலம்-இல் பிறந்தவர். 23 வயதே ஆன ஓர் வீரமங்கை. உலக அரங்கில் பல மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தவர்.**

நாம் வாழும் சுற்றுச்சூழல்கள், சீதோஷ்ண நிலைகள், இவற்றைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுபவர். மாசுபட்டு மாசுபட்டு, நாம் சுவாசிக்கும் காற்றே மாசு பட்டுவிடுகின்றது. ஏன் விஷமாகவே மாறிவிட்டது. இதில் குடிமக்களும் அரசாங்கங்களும் அதிக அக்கறையுடன் செயல்பட்டிட வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

15 வயதிலேயே (2018இல்) சுற்றுப்புறச் சூழல் குறித்து மக்களின் கருத்தை கவர்ந்திட சுவீடன் நாடாளுமன்றத்திற்கு முன்பு மாணவர்களைத் திரட்டி ஒரு பெரும் போராட்டத்தை நடத்தினார்.

சுற்றுப்புறச் சூழல் குறித்து இவர் ஏற்படுத்திய விழிப்புணர்வை, "Greta Effect" "கிரேட்டா தாக்கம்" என அழைப்பார்கள்.

2019ஆம் ஆண்டில் Person of the year என்ற "வருடத்தின் மாமனிதர்" என்ற விருதைப் பெற்றவர்.

2018ஆம் ஆண்டில் துன்பெர்க் ஐக்கிய நாடுகளின் சபையில் Un Climate Change Conference (COP) ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுபுறச் சூழல் மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.

அந்த உரையில் "இங்கே குழுமியிருக்கும் உலகத்தலைவர்கள் சுற்றுபுறச் சூழல் மாசு படுவதை புரிந்துகொள்ளும் அளவுக்கு பக்குவம் பெற்றவர்களல்ல." என உலக தலைவர்களை இடித்துரைத்தார்.

2019இல் கிரேட்டா துன்பெர்க், ஐரோப்பா முழுவதும் போராட்டங்களைத் தொடங்கினார். ஒரு கட்டத்தில் 2711 நகரங்களில், 2,70,000 பேர் கலந்துகொண்ட போராட்டங்கள் நடைபெற்றன.

இதனால் உலகின் கவனம், கிரேட்டா துன்பெர்க்-இன் மீதும், சுற்றுச்சூழல் மாசுபடும் அபாயத்தையும் நோக்கி திரும்பிற்று. பின்னர் உலகில் நடந்த பல விவாத அரங்குகளில் கலந்துகொண்டார். உரை நிகழ்த்தினார்.

இதன் விளைவாக ஐக்கிய நாடுகள் சபை, சுற்றுச்சூழல் செயல்பாட்டு குழு என்றொன்றை தொடங்கிற்று. இதில் 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற செயல்பாட்டு குழுவில், துன்பெர்க் உரை நிகழ்த்தினார். ஒவ்வொரு வெள்ளிக்

கிழமைகளிலும், இதுகுறித்து ஒரு போராட்டத்தை நடத்தினார். அதற்கு Friday for Future! "வெள்ளிக்கிழமை நமது எதிர்காலத்திற்கு" எனப் பெயர் வைத்தார்.

இப்படி தன் முழு கவனத்தையும், சுற்றுச் சூழல், மாசுபடுதல், அதனால் மனித இனத்திற்கு ஏற்படும் அலாதியான இழப்புகள், இவை பற்றிய, விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொண்டிருந்த போதுதான் - காஸாவில், இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலைகள், கிரேட்டா துன்பெர்க்-இன் பார்வையில் பட்டது.

காஸாவில் நடந்த குரூரம் நிறைந்த கொலைகள், அவரை பாதித்தன. தனது கவனத்தில் ஒரு பகுதியை காஸாவின் பக்கம் திருப்பினார்.

காஸாவில் நடக்கும் கூட்டுப் படுகொலைகளைக் கண்டிக்க வேண்டும். இஸ்ரேலின் கையைப் பிடிக்க வேண்டும் எனப் பேசிட தொடங்கினார்.

இஸ்ரேல் நடத்திவரும், கூட்டுப்படுகொலைகளின் ஒரு பகுதியாக அந்த மக்களைப் பட்டினிப் போட்டுக் கொலை செய்து வருகின்றது, இதை இந்தப் போர் தொடங்கிய அக்டோபர்-7,2023லிருந்தே செய்து வருகின்றது.

காஸாவுக்குள், உணவுப் பொருள்கள் வருகின்ற பிரதானமான நுழைவாயில் "ரஃபா" அதனை அடைத்துவிட்டது.

காஸாவுக்குள் உணவு பொருள்கள் செல்ல இன்னொரு முக்கிய நுழைவாயில், கடல்வெளி, காஸா மத்திய தரைக்கடல் ஓரத்தில் அமைந்திருக்கின்றது.

வேறு வார்த்தைகளால் சொன்னால், காஸாவின் ஓர் எல்லை முழுவதும் நீள கடற்கரை.

இந்தக் கடல் வெளியைப் பயன்படுத்தி, காஸா வாழ், பாலஸ்தீனியர்கள் மீன் பிடிப்பார்கள். இதுவும் அவர்களின் முக்கிய வாழ்வாதாரம்.

இஸ்ரேல் அக்டோபர்-7,2023 தாக்குதலுக்குப் பின், இந்தக் கடல் வழியையும் அடைத்துவிட்டது. ஆகவே பட்டினிச் சாவுகள், போதிய சத்துணவு இல்லாமல் சாவு என காஸா மக்கள் மடிய தொடங்கினார்கள்.

இப்படி கடல்வழி தடையை போடுவதற்கு எந்த அதிகாரமுமில்லை இஸ்ரேலுக்கு.

எந்த வகையிலும் காஸா இஸ்ரேலுக்குச் சொந்தமானதல்ல. அது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று.

இப்படி உணவு வரும் வழிகளையெல்லாம் இஸ்ரேல் அடைத்துவிட்டது. கிரேட்டா துன்பெர்க்-ஐ பெரிதும் பாதித்தது.

தன்னுடைய "ட்வீட்டர்" பக்கத்தில் தொடர்ந்து இஸ்ரேலின் குரூரங்களை வெளிப்படுத்தி வந்தார்.

இது உலக அளவில் இஸ்ரேலின் கோர முகத்தை பெரிய அளவில் தோலுரித்துக் காட்டிற்று.

"கிரேட்டா துன்பெர்க்கு" உலகெங்கும் இருந்த நற்பெயர் - இஸ்ரேலின் அநீதிகளையும், குரூரங்களையும் கூட்டுப்படுகொலைகளையும் பெரிதாகத் அம்பலப்படுத்திற்று.

இதனால் சொல்லொன்னா அவமானங்களுக்கு ஆளாகினார் நெதன்யாஹு.

வந்த கோபத்தில் என்ன செய்வது என்பதறியாமல் திணறிய நெதன்யாஹு, இஸ்ரேலின் பள்ளிப் பாடங்களில், "கிரேட்டா துன்பெர்க்"-ஐ ஓர் முன்மாதிரி பெண்ணாகக் காட்டி யூத மாணவர்களுக்கு, பாடம் புகட்டி வந்ததை ரத்து செய்தார். இஸ்ரேலில் அத்தனைப் பாட நூல்களிலிருந்தும், கிரேட்டா துன்பெர்க்-ஐ நீக்கினார்.

ஆனால், கிரேட்டா துன்பெர்க் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை.

இஸ்ரேலும், நெதன்யாஹுவும் சர்வதேச கண்டனங்களுக்கு ஆளாகினார்கள்.

இஸ்ரேல் பழி ஒன்றை சுமத்தியது. கிரேட்டா துன்பெர்க், அக்டோபர்-7,2023இல் ஹமாஸ் நடத்திய தாக்குதலை கண்டிக்கவில்லை என்றது.

உடனே கிரேட்டா துன்பெர்க் தனது X வளைதளங்களில் இப்படி அறிக்கை விட்டார்.

"It goes without saying or so I thought" i am against the horrific attack by Hamas we should speak up and call for an immediate Cease fire, Justice and freedom for Palestinians and all civilians affcted.

அதாவது ஹமாஸ்-ஐ கண்டிப்பது என்பது சொல்லாமலே எடுத்துக்கொள்ள வேண்டியது



தான், நான் ஹமாஸ்-இன் அகோர தாக்கு தலுக்கு எதிரானவள். நாம் இப்போது போர் நிறுத்தத்திற்கு குரல் கொடுக்க வேண்டும். அதேபோல் பாலஸ்தீன மக்களுக்கு நீதியும், விடுதலையும் கிடைக்க உரக்க பேசிட வேண்டும்.

இங்கேயும், கிரேட்டா துன்பெர்க், பெரிய அளவில் ஹமாஸ்-ஐ கண்டிக்கவில்லை என்று இஸ்ரேலிய அமைச்சர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

இதனிடையே கிரேட்டா துன்பெர்க் Friday for Future (FFF) வெள்ளிக்கிழமைகள், எதிர் காலத்திற்கு என்ற அமைப்பின் ஆய்வாளர் களோடு காஸாவில் இஸ்ரேல் நடத்திய கூட்டுப்படுகொலைகளை ஓர் ஆய்வுக்கு உட்படுத்தினார். உலகப் பிரசித்திப் பெற்ற "The Guardian" தி கார்டியன் பத்திரிகையில் ஓர் கட்டு ரையை எழுதினார். அதில், மனித உரிமைகள் இல்லாமல் சுற்றுப்புறச் சூழலுக்கு நீதி இல்லை. நாம் காஸா மக்களுக்காகப் பேசுவதை நிறுத்தவே கூடாது என எழுதினார்.

"காஸா கூட்டுப்படுகொலைகளில் ஒன்று காஸாவில் வாழும் மக்கள் சுவாசிக்கும் காற்று மாசும், தூசும் கலந்தது. அங்குள்ள இடிபாடுகள், காஸாவை வாழ்ந்திட இலாயக்கற்ற பூமியாக மாற்றி இருக்கின்றது" என்ற கோரத்தை உலக மக்களுக்கு புரிய வைத்தார்.

இதை உலகஅளவில் 24 அமைப்புகள் ஆதரித்தன. இதில் Scientists for Rebellion புரட்சிக்கான விஞ்ஞானிகள் என்ற அமைப்பும் பெரியஅளவில் ஆதரித்தது.

அடுத்து காஸா கூட்டுப்படுகொலைகளைத் தடுக்கவும், அந்த மக்களை இஸ்ரேல் பட்டினிப் போட்டு கொலை செய்வதை தடுப்பதும் மனித இனத்தின் கடமை என்று ஒரு முழக்கத்தை எழுப்பினார்.

இதை 61 விஞ்ஞானிகள் ஆதரித்தார்கள். அவர்களுள், உலகில் புகழ்பெற்ற Mechael Meeropol, Don trent jacobs மைக்கேல் மீராபோல், டான் டிரஸ்ட் ஜோகோப் என்ற விஞ்ஞானிகளும் உண்டு.

இப்படி காஸாவில் இஸ்ரேல் நடத்திய படுகொலைகள், விஞ்ஞான உலகை எட்டியது. ஏற்கெனவே, விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், நடிகர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் என எல்லா தளங்களிலும் இஸ்ரேலின் குரூரம் நிறைந்த கூட்டுப்படுகொலைகள் ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இருந்தது.

2024இல் "Eurovision Song" யூரோவிஷன் பாட்டு போட்டி என்றொன்று நடந்தது. இதில் இஸ்ரேல் கலந்துகொள்வதை உலக நாடுகள் எதிர்த்தன. இந்த எதிர்ப்புப் போராட்டத்திலும், கிரேட்டா துன்பெர்க் கலந்துகொண்டார்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட தற்காக சுவீடன் காவல்துறை அவரை கைது செய்தது. பின்னர் விடுதலை செய்தது.

அதேபோல் டென்மார்க் நாட்டு காவல்துறை அதன் தலைநகர் கோப்பன் ஹேஹன்-இல் வைத்து, பாலஸ்தீனர்களுக்கு போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ததற்காக கைது செய்தது. இதில் கிரேட்டா துன்பெர்க் உடன் இருந்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டார்கள். பல வாரங்களுக்குப் பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

அதேபோல் சுவீடன் ஸ்டாக்கோம் பல்கலைக் கழகத்தின் நூலகத்தில் ஓர் உள்ளிருப்பு போராட்டத்தை நடத்தினார். அதற்காக சுவீடன் காவல்துறை அவரை மீண்டும் கைது செய்தது.

பல்வேறு நாட்டு அதிகாரிகளும் கிரேட்டா துன்பெர்க்-இன் நண்பர்களும், யூத ஆதரவாளர் களும் கிரேட்டா துன்பெர்க்கிடம் நீ ஒரு சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்தானே. ஏன் காஸா மக்களுக்காக போராட வேண்டும்? சிறை செல்ல வேண்டும் எனக் கேட்டார்கள்.

அவர்களிடம் காஸாவில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராகப் போராடதவர்கள் இஸ்ரேலின் கூட்டுப் படுகொலைகளுக்கு ஆதரிப்பவர்கள் என்று பொருள் இது உலக மக்களின் பொதுவான கருத்து. என்னை நீங்கள் சுற்றுப்புறச் சூழல் முத்திரை குத்தி காஸா மக்களுக்காக போராடுவதிலிருந்து திசை திருப்ப வேண்டாம்.

சுற்றுப்புறச் சூழல் நீதி என்பது, மனித உரிமைகள், மக்களுக்கு சமுதாய நீதி என்பனவற்றிற்கு பின்னர்தான் வருகின்றது என்றார்.

**காஸாவுக்கு உணவு பொருள்கள் கப்பல்கள் வழி!**

இப்படி ஒரு முயற்சியை உலக அரங்கில் காஸா விடுதலை கப்பல்கள் என்ற பெயரில் சர்வதேச அமைப்புகள் ஏற்பாடு செய்தன. இதற்கு Gaza Freedom Flotila coalation எனப் பெயர் வைத்தார்கள்.

இது கடல் வழியாக உணவுப் பொருள்கள், மருந்துகள், எரிபொருள்கள் ஆகியவற்றை காஸா மக்களுக்குக் கொண்டு செல்வதாகும்.


2025 மே மாதம் புறப்பட்ட இந்தக் கப்பல்கள் ஜூன் மாதத்தில் இஸ்ரேலை நெருங்கின. இந்தக் கப்பல்களை இஸ்ரேல் கைப் பற்றியது. கிரேட்டா துன்பெர்க் முதலானவர்களைக் கைது செய்தது. கிரேட்டா துன்பெர்க்கை கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாக்கியது. பின்னர் அவரை நாடு கடத்தியது.

தன் சொந்த நாட்டுக்கு வந்த அவர், இதுபோன்ற துன்புறுத்தல்கள், நான் காஸா மக்களுக்குப் போராடுவதைத் தடுக்காது. நான் என் வாழ்நாள் முழுவதும் காஸா மக்களுக்காகப் போராடுவேன் எனப் பிரகடனப்படுத்தினார்.

இஸ்ரேலிய சிறையில் நான்பட்ட கஷ்டத்தைப் பொறுத்தவரை, நான் பட்ட கஷ்டங்கள், இஸ்ரேலில் சிறைகளில் பாலஸ்தீன மக்கள் படும் சித்திரவதைகளைவிட குறைவானதுதான் எனக் கூறினார்.

இப்படி இன்னொரு மங்கை தன் வாழ்க்கையை காஸா மக்களுக்காக அர்ப்பணித்துள்ளார்.


இறைவன் அவர்களுக்கு ஹிதாயத்தையும் கொடுத்து, அவர்களின் தியாகங்களுக்கு உரிய நற்கூலிகளை வழங்கிடுவானாக! - MGM






ஆங்கிலம் : **JOHN FEFFER**

தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




# இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்

**"The West's Resurgent War on Islam"**

வாசகர்களின் கவனத்திற்கு....

தாலிபான்கள் ஆட்சியை வீழ்த்தி விட்டதால் பெருமை கொள்கின்றார்கள். அது முடிவில் எப்படி முடிந்தது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

2021, ஆகஸ்ட்–15இல் அமெரிக்காவும் அதன் பக்கத் துணையாக வந்த 51 நோட்டோ நாடுகளும் மண்டியிட்டன. தாலிபான்கள் வெற்றி வாகை சூடினார்கள்.

ஆனால்,அமெரிக்காவும்அதன்கூட்டு நாடுகளும் 21 ஆண்டுகளில் 1,29,500 அப்பாவிகளைக் கொலை செய்தன.

சதாம் ஹுசைன் அமெரிக்காவின் சூழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவில்லை. மிக எளிதாகவே மேலை நாடுகளின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிட்டார்.

சதாம் “பாத்திஸம்” என்ற கொள்கையைக் கொண்டு அமெரிக்காவை எதிர்கொண்டார்.

தாலிபான்கள் இஸ்லாத்தையும், அல்லாஹ்வின்மீது கொண்ட நம்பிக்கையையும் முன் வைத்து 51 நாடுகளை எதிர்கொண்டு வென்றார்கள்.

**- MGM**

## தீவிரவாதத்திற்கெதிரான உலகளாவிய போரும் அதுகுறித்த தவறுதலான சிந்தனைகளும்

அச்சம், பகுத்தறிவை முடக்கிவிடும். பிளிங் (Blink) என்ற நூலில் அச்சம் எப்படியெல்லாம் நம்மை அலைக்கழிக்கும் என்பதை எடுத்துக் காட்டுகின்றார் இந்த நூலை இயற்றியவர், “Glodwell” (கிளாடுவெல்) அதன் ஆசிரியர். அச்சம் ஆத்திரப்பட வைக்கும், ஆத்திரம் கண்ணை மறைக்கும். அறிவுக்கு வேலை கொடுப்பது அவசரமாக அணைத்து வைக்கப்படும். அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாக பல தவறுகளைச் செய்வோம்.


இந்த அவசரத்தில் அவர்கள், துப்பாக்கி இல்லாத இடத்தில் துப்பாக்கி இருப்பதைப் போல் உணருவார்கள். அவர்கள் தவறாமல் தவறான முடிவுகளையே எடுப்பார்கள்.

செப்டம்பர் 11, 2001க்குப் பின் அமெரிக்க அதிபர் புஷ்-இன் நிர்வாகம் அச்சத்தை,

பீதியை எப்படி பயன்படுத்துவது என்பதை புரிந்துகொண்டது. இந்த பயத்தை, அச்சத்தை நீண்ட காலத்திற்கு நீட்டிக்கொண்டே இருந்தது. அதைப் பயன்படுத்தி உலகையே கபளீகரப் படுத்திக் கொண்டிருந்தது.

அவசரத்தில், அள்ளித் தெளித்த கோலமாய் தீவிரவாதம் தீவிரவாதம் என பல சட்டங்களை இயற்றினார்கள். அவையெல்லாம் முழுமையான முட்டாள்தனங்களாகவே அமைந்தன. அன்றைய நாள்களில் அதாவது 9/11 என அடையாளப் படுத்தப்படும் செப்டமப்ர் 11,2001ஆம் ஆண்டைத் தொடர்ந்து வந்த நாள்களில்) தலைகால் தெரியாமல் ஆடினார்கள்.

அவர்கள், தீவிரவாதிகள் இல்லாத உலகில் தீவிரவாதிகளைத் தேடினார்கள். பேரழிவு ஆயுதங்கள் இல்லாத இடத்தில் பேரழிவு சாதனங் களைக் கண்டார்கள். (Weapeons of Mass Destruction) இந்தப் பீதியில் போர்த் திட்டங் களை வகுத்தார்கள். போர்களை நடத்தினார்கள். ஆனால், இந்த போர்களைவிட அவர்களுக்கு இராஜாங்க நடவடிக்கைகள், பேச்சு வார்த்தைகள், அதிகப் பலனைத் தந்திருக்கும்.




ஆட்சியில் இருப்பவர்கள் ஏற்படுத்திய பீதியில் உறைந்துபோயிருந்த மக்கள், ஆட்சியில் இருந்தவர்களின் கொள்கை முடிவுகளிலிருந்த தவறுகளைக் கண்டுகொள்ளவில்லை. வேறு வழியின்றி அவர்கள் அதை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

புஷ், இதுவரை சிலுவைப் போர்களில் அடைந்த தோல்விகளையெல்லாம், ஒன்று சேர்த்து அவற்றிற்கு பழிவாங்கிட துடித்தார்.

**9/11 நிகழ்வுகள்**

தன் போர் வெறிக்கு ஒரு நிரந்தர அமைதியைத் தந்துவிட்டதாகச் சந்தோஷப்பட்டார். பனிப் போர் காலங்களைவிட நீண்டதொரு காலம், இந்தப் போரை நீட்டலாம். என மகிழ்ந்தார். (பனிப்போர் என்பது அன்றைய நாள்களில் வல்லரசாக இருந்த ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளைக் குறிக்கும். ரஷ்யாவையும் கம்யூனிசத்தையும் பெரிய எதிரிகளாகக் காட்டி நடந்த மௌன யுத்தம் அல்லது போர்)

பனிப்போர் காலங்களில், கம்யூனிச ரஷ்யாவும், முதலாளித்துவ அமெரிக்காவும் எங்கேயும், எப்போதும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில்லை. நேருக்கு நேர் போர் செய்ததுமில்லை. இரண்டு நாடுகளும் தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்திட பலமுறை பேச்சு வார்த்தைகளை நடத்தின.

ஆனால் 9/11-ஐ பயன்படுத்தி இஸ்லாத்தை எதிரியாகக் காட்டியபோது அமெரிக்கா நேரடியாகவே போர் தாக்குதலை நடத்தியது. கண்களை மூடிக்கொண்டு அப்பாவி மக்களை தாக்குவது, கொத்துக் கொத்தாக மக்களைக் கொலை செய்வது என இறங்கிவிட்டார்கள். தாங்கள் செய்த குரூர கொலைகளையெல்லாம், தீவிரவாதத்திற்கு எதிரான போர் என பெயர் வைத்தார்கள்.

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி அல்லது துணை அதிபர் டிக்சேனி Dickcheny இப்படிக் கூறினார்:

“நாம் தீமையோடு (இஸ்லாத்தோடு) பேச்சு வார்த்தை நடத்துவதில்லை. நாம் தீமையோடு போர் செய்வோம். தீமையை வீழ்த்திக் காட்டு வோம். இந்தத் தீமைக்கு எதிரான போரில் எந்த வழிமுறையைக் கையாண்டாலும் அது, நியாயமானதே - சிலுவைப்போர்களின் போது நாம் எல்லாவிதமான வழிமுறைகளையும் கீழறுப்பு வேலைகளையும் கையாண்டதைப் போல் இப்போதும், எல்லா வழிமுறைகளையும் கையாள்வோம் எல்லா வழிமுறையும் நமது வழிமுறையே!"

- இந்த சண்டமாருதம் எல்லாம் அவர்களை - என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்ற பொது அதிகாரத்தை வழங்கிற்று.


vaigarai velicham official

“தீவிரவாதத்திற்கு எதிரான இந்தப் போரில், (அதாவது இஸ்லாத்திற்கெதிரான இந்தப் போரில்) கம்யூனிச ரஷ்யாவுக்கும் கம்யூனிச நாடுகளுக்கும் எதிரான மேற்கொண்ட போரைப் போன்றதொரு நீண்ட போரை மேற்கொள்ள வேண்டும். கம்யூனிசம் கோலோச்சிய நாடுகளில் மேற்கொண்டதுபோல் ஆட்சி மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டும் என முழங்கினார்கள்.

இந்த அடிப்படையில், கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிச ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தவர்களை வீழ்த்தினோம். கியூபாவில் தொடர்ந்து தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தோம் என பெருமைப்பட்டார்கள். (ஒரு கணக்கின்படி கியூபாவை ஆட்சி செய்துகொண்டிருந்த பிடல் கேஸ்ட்ரோ மீது, 1000 கொலை தாக்குதலை அமெரிக்காவின் உளவுத்துறையாகிய (CIA - Central Intelligence Agency) நடத்தியது.


வட கொரியா, சைனா ஆகிய நாடுகளிலும் (Roll Back) என்ற ஆட்சி கவிழ்ப்பை ஏற்படுத்தினார்கள். (இந்த கம்யூனிச நாடுகளில் அமெரிக்காவும் அதன் அடிவருடிகளான ஐரோப்பிய நாடுகளும் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியடைந்திடவில்லை. மாறாக, இந்த நாடுகள் மிகப்பெரிய அளவில் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெற்றன. இன்று வடகொரியா, சைனா ஆகிய நாடுகள், அணு ஆயுதத்திலும், பொருளாதாரத்திலும் அமெரிக்காவை விஞ்சிவிட்டன. பிடல் கேஸ்ட்ரோ மீது நடத்திய அத்தனை தாக்குதல்களும் படுதோல்வி. இறுதியில் அவர் இயற்கையான மரணத்தையே அடைந்தார்.)

அதே (Roll Back) என்ற ஆட்சிக் கவிழ்ப்பில் முஸ்லிம் நாடுகளிடையே பெரிய வெற்றிகளைக் குவித்திருக்கின்றார்கள். சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து அகற்றினார்கள். தாலிபான்களை ஆட்சியிலிருந்து அகற்றினார்கள். சதாம் ஹுசைனை அவருடைய சொந்த நாட்டிலேயே கொலை செய்திடவும் முடிந்தது.

- இன்ஷாஅல்லாஹ் தொடரும்.

- MGM



# தர்க்கம் செய்யாதீர்

தலையங்கம்

இன்றைய காலகட்டத்தில் எல்லா மனிதர்களிடமும் காணப்படும் செயல் தர்க்கம் செய்வது. இதில் வயது வித்தியாசம் இல்லாமல் சிறியவர் முதல் பெரியவர் வரை தான் செய்யும் செயல்தான் சரியானது. தான் கூறுவததான் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தர்க்கம் செய்து கொள்கிறார்கள்.

“மனிதன் அதிகமாகவே தர்க்கம் செய் கின்றவனாக இருக்கின்றான்” (கஹ்ஃபு-54)

இந்த வீண் தர்க்கத்தின் காரணமாக மனிதனிடம் உள்ள நற்குணங்கள் அகன்று தீய குணங்கள் அவனை ஆட்கொள்கிறது. உண்மையை மறுக்கின்றான், கோபம் கொள்கிறவனாக மாறுகிறான். இதனால் கருத்து வேறுபாடும், பிரிவினையும் ஏற்படுகிறது.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

“அதிகம் தர்க்கம் செய்பவனே அல்லாஹ் விடத்தில் மிகவும் வெறுப்புக்குரியவன்” (புகாரி)

அபூதர்தா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருநாள் நான் மார்க்க விசயமொன்று பற்றித் தர்க்கம் செய்து கொண்டிருந்த சமயம் அல்லாஹ்வின் தூதர் என்னிடத்தில் வந்தார்கள். முன்னொரு போதும் இல்லாத வாறு கடுங்கோபத்துடன் காணப்பட்ட அவர்கள் அவ்விடத்தை விட்டு என்னை விரட்டினார்கள். பின்னர் என்னை நோக்கி பின்வருமாறு கூறினார்கள்,

முஹம்மதின் சமூகத்தினரே சற்றுத் தாமதித்துச் செல்லுங்கள். உங்களுக்கு முன் வாழ்ந்த சமூகத்தினர் அழிந்தது இதன் மூலம் தான். தர்க்கம் செய்வதை விட்டுவிடுங்கள். அதனால் ஏற்படும் நன்மை குறைவாகவே இருக்கிறது. இறை விசுவாசி தர்க்கம் செய்வதில் ஈடுபடமாட்டான்.

தர்க்கம் செய்வதை விட்டுவிடுங்கள், தர்க்கம் செய்பவனுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. தர்க்கம் செய்பவனாக இருப்பதே பாவங்கள் அனைத்திற்கும் போதுமானது. தர்க்கம் செய்வதில் அறவே ஈடுபடாதீர்கள். தர்க்கம் செய்பவனுக்கு மறுமையில் நான் பரிந்து பேசமாட்டேன். தர்க்கம் செய்வதை விட்டுவிடுங்கள். உண்மை பேசுகின்ற நிலையிலும் தர்க்கம் செய்வதை விட்டு விடுகின்றவர்கள் சுவர்கத்தின் சுற்றுப் புறத்திலும் அதன் மத்திய பகுதியில் இருப்பார்கள்.

அபு உமாமா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

எவர் ஒருவர் தான் சரியான கருத்தி லிருந்த போதிலும் தர்க்கம் புரிவதிலிருந்து தவிர்த்துக் கொள்வாரோ அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீடு கிடைக்க நான் உத்திரவாதமளிக்கின்றேன். இன்னும் எவரிடத்தில் நன்னடத்தையுள்ளதோ அவருக்கு சுவர்க்கத்தில் உயர்ந்த இடத்தில் ஒரு வீட்டிற்கு நான் உத்திரவாதமளிக்கின்றேன் என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தர்க்கம் செய்ய நேரிட்டால் அழகான முறையில் தர்க்கம் செய்யுங்கள். இல்லா விட்டால் மூடர்களிடமிருந்து விலகி விடுங்கள்.

வேதக்காரர்களிடம் மிக அழகிய முறை யிலின்றி நீங்கள் தர்க்கம் செய்ய வேண்டாம்” (அல்அன்கபூத்-66)

இன்னும் அர்ரஹ்மானுடைய அடியார்கள் (யாரென்றால்) அவர்கள்தாம் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் பேசி (வாதா)ட முற்பட்டால் “ஸலாம்” (சாந்தியுண்டாகட்டும்) என்று கூறி (விலகிப்போய்) விடுவார்கள். (அல்அன்ஆம்-35)

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் | - ரூ.350.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு | - ரூ.150.00 |
| 3. | சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |
| 4. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 5. | டெல்லி குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 6. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு | - ரூ.60.00 |
| 7. | மால்கம்-X | - ரூ.120.00 |
| 8. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் | - ரூ.20.00 |
| 9. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள் | - ரூ.40.00 |
| 10. | கர்கரேயை கொலை செய்தது யார்? | - ரூ.250.00 |
| 11. | சிந்திப்பீர் செயல்படுவீர் | - ரூ.15.00 |
| 12. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம் | - ரூ.40.00 |
| 13. | சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள் | - ரூ.20.00 |
| 14. | நாம் பிரிந்து விடவேண்டாம் | - ரூ.175.00 |
| 15. | தாலிபானின் பிடியில் | - ரூ.150.00 |
| 16. | தீண்டாமைக்குத் தீர்வு | - ரூ.30.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு | - ரூ.110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் | - ரூ.90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம், | - ரூ.130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள் | - ரூ.70.00 |
| 21. | எது முதலில்? | - ரூ.450.00 |
| 22. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? | - ரூ.20.00 |

| | |
|---|---|
| 23. கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? | - ரூ.30.00 |
| 24. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் | - ரூ.15.00 |
| 25. இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும் | - ரூ.50.00 |
| 26. இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | - ரூ.40.00 |
| 27. இஸ்லாமும் விஞ்ஞானமும் | - ரூ.30.00 |
| 28. இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | - ரூ.50.00 |
| 29. இஸ்லாமும் பெண்களும் | - ரூ.60.00 |
| 30. இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | - ரூ.70.00 |
| 31. தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | - ரூ.100.00 |
| 32. திருக்குர்ஆன் கூறும் பொறுமை | - ரூ.80.00 |
| 33. 26/11- விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | - ரூ.220.00 |
| 34. ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | - ரூ.20.00 |
| 35. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம் | - ரூ.10.00 |
| 36. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? | - ரூ.10.00 |
| 37. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?<br>சுவாமி அசினாந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் | - ரூ.25.00 |
| 38. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்<br>லேப்டாப்பில் இருந்ததென்ன? | - ரூ.20.00 |
| 39. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான் | - ரூ.25.00 |
| 40. கூரியூர் ஜின்னா ஷஹீத் | - ரூ.60.00 |
| 41. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும் | - ரூ.20.00 |
| 42. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு | - ரூ.30.00 |
| 43. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்<br>காந்திஜி கொலை ஏன்? எப்படி? | - ரூ.30.00 |
| 44. பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்<br>முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - ரூ.400.00 |
| 45. குஜராத் : 2002 பெண்கள்<br>குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள் | - ரூ.150.00 |
| 46. இஸ்லாம் ஒன்றே வழி! | - ரூ.120.00 |
| 47. இஸ்லாம் உங்கள் பார்வைக்கு | - ரூ.400.00 |
| 48. முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன? | - ரூ.300.00 |

| | |
|---|---|
| 49. இந்தியாவின் இரகசியச் சித்திரவதைக் கூடங்கள் | - ரூ.25.00 |
| 50. இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம் | - ரூ.100.00 |
| 51. முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி | - ரூ.20.00 |
| 52. நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம் | - ரூ.50.00 |
| 53. பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி | - ரூ.50.00 |
| 54. அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும் | - ரூ.40.00 |
| 55. எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர் | - ரூ.60.00 |
| 56. சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை | - ரூ.60.00 |
| 57. பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாருக் அவர்களின் கவலையும் | - ரூ.25.00 |
| 58. முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார் | - ரூ.20.00 |
| 59. அயா சோபியா உருவான வரலாறு | - ரூ.50.00 |
| 60. வரலாற்றுப் பாடத்தில் இருந்து நீக்கப்பட வேண்டியவரா அவுரங்கசீப் | - ரூ.80 |
| 61. ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் | - ரூ.15.00 |
| 62. 9/11 யாரால்? யாரால்? | - ரூ.40.00 |
| 63. நாளந்தா பல்கலைக்கழகத்தை எரித்தது யார்? | - ரூ.50.00 |
| 64. சுல்தான் நூருத்தீன் ஸெங்கி (ரஹ்) | - ரூ.300.00 |
| 65. இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் | - ரூ.480.00 |
| 66. இஸ்லாமிய அரசு - அரசின் பணிகள் குடிமக்களின் உரிமைகள் | - ரூ.120.00 |
| 67. யூத, அமெரிக்க தீவிரவாதமும் இஸ்ரேலின் உருவாக்கமும் | - ரூ.15.00 |
| 68. இஸ்லாத்தில் இறை நம்பிக்கை | - ரூ.350.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

| | |
|---|---|
| 69. சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | |
|---|---|
| 70. சாதி ஒழிந்தது | - ரூ.60.00 |
| 71. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி | - ரூ.30.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 1. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம் | - ரூ.100.00 |
| 2. | மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள் | - ரூ.100.00 |
| 3. | குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் | - ரூ.170.00 |
| 4. | நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா? | - ரூ.140.00 |
| 5. | பலி கடாக்கள் | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | **- Rs.50.00** |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | **- Rs.695.00** |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | **- Rs.325.00** |
| 4. | **KAFKA LAND - PREJUDICE<br>LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | **- Rs.350.00** |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | **- Rs.300.00** |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | **- Rs.275.00** |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | **- Rs.60.00** |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | **- Rs.280.00** |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | **- Rs.25.00** |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | **- Rs.150.00** |
| 11. | **Innocent Prisoners** | **- Rs.495.00** |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | **- Rs.350.00** |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | **- Rs.300.00** |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887**
**Vaigarai Velicham Official**

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002